நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-212 டிச.03-09, 2000 விலை ரூபா 12/-

**பேய் பிடித்தோர் பிதற்றல்!**

யுத்தம் யுத்தமென்று யுத்தமிட்டுத் தோற்ற பின்னும்
சத்தமிட்டு யுத்தமென்றேன் கதறுகிறீர்? யுத்தமிட்டு
ரத்தமும் சாவுமன்றிக் கண்டதென்ன? உம் தலையில் பித்தோ?
பிடித்ததுவோ பேய்!-

ஈழமோகம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்
போராட்டமும்
வீடியோ படம்
பிடிக்கும் படையினரும்

மட்டு.
கேட்க நாதியற்ற மக்களோ
இவர்கள்!

பிரபாகரன்
சொல்லாததும்
சொல்ல
வேண்டியதும்



# பிரபாகரனின் மாவீரர்தின உரை: சமாதானத்திற்கு நாங்கள் தயார்! நீங்கள்...



## மலையகம்: மாதவன் செய்த மாதவறு தான் என்ன?

# இவ்வாரச் செய்திகள்

## பிந்துனுவெவ படுகொலைகள் மூவர் அடையாளம் காணப்பட்டனர்

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற தமிழ் இளைஞர்களின் படுகொலை தொடர்பாக மூன்று பேர் இன்று நவ.27ம் திகதியன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த அடையாள அணிவகுப்பு நவ.27 அன்று காலை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது. சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களே இச்சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர்.
இனங்காணப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மூன்று பேரும் பிந்துனுவெவ ஆசிரியர் கல்லூரி ஆசிரியர்களாவர். இச்சந்தேக நபர்களைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் குணமடைந்தவர்களை தியத்தலாவ சிறிலங்கா படை முகாமுக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
இச்சம்பவம் தொடர்பாக தியத்தலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மேலும் ஐந்து பொலிஸார் நவ.25ம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

## மன்னார்: பெண்கள் குளிக்கும் இடத்தில் நுளையும் படையினர்

மன்னார் பள்ளிமுனை தேவாலயத்திற்கு முன்பாக இருக்கும் கிணற்றினை பெண்கள் குளிப்பதற்காக அறுக்கையாக அடைக்கப்பட்டு நீண்ட காலமாக இந்தக் கிணற்றில் பெண்கள் குளித்து வருகின்றனர்.
இந்தக் கிணற்றில் பெண்கள் குளிக்கும் போது திடீர் என படையினரும் நுளைகின்றனர். படையினர் குளிப்பதற்காக நுளைந்தாலும் இந்த வேளையில் தாம் சங்கடங்களை எதிர்கொள்வதாக ரெலோ இயக்கத்திடம் இப்பகுதிப் பெண்கள் முறையிட்டுள்ளனர்.
ரெலோ அமைப்பினர் இது தொடர்பாக மன்னார் படைத் தலைமையிடம் தொடர்பு கொண்டு முறையிட்டிருப்பதாகவும், மன்னார் மாவட்ட கட்டளையிடம் அதிகாரி நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## இந்தியாவின் நல்லெண்ணமின்றி பேசித் தீர்க்க முடியாது என்கிறார் அமைச்சர் பீரிஸ்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் போது முக்கியமான திருப்பு முனைகள் ஏற்பட்டால் இந்தியா பாரிய பங்களிப்பு வழங்க வேண்டுமென இலங்கை விரும்புகின்றது என்று இந்தியத் தலைநகர் புதுடில்லியில் அரசியலமைப்பு விவகார கைத்தொழில் அபிவிருத்தித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நவ.26 அன்று தெரிவித்துள்ளார்.
இந்தியாவின் நல்லெண்ணம் இல்லாமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அந்த நல்லபிப்பிராயத்தை நாம் மிகப் பிரமாண்டமான அளவில் கொண்டிருக்கிறோம். தற்போது இடம் பெறும் அரசியல் நடவடிக்கையில் இந்த விடயமானது ஒரு முக்கியமான அம்சமாகும். ஒவ்வொரு கட்டத்திலுமே நாம் இந்தியாவின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம். இனநெருக்கடி தொடர்பான ஒவ்வொரு முன்னேற்றகரமான கட்டத்திலும் நோர்வே அரசாங்கம் அது தொடர்பாக இந்தியாவுக்கு அறிவித்துள்ளது. நேரடியாக முக்கியமான விடயங்கள் குறித்து ஆராயும் போது இந்தியா பாரிய பங்களிப்பை வழங்க வேண்டுமென்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்றும் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.
பொருளாதார ரீதியிலும் இந்தியா தொடர்பாக இலங்கையில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இந்தியாவிற்குத் தெற்காசியாவிலுள்ள கூட்டு முயற்சிகளில் 50 சதவீதமானவை இலங்கையில் உள்ளன. 1991ல் இலங்கையில் 23 இந்திய முதலீடுகளே இருந்தன. இன்று 120 முதலீடுகள் உள்ளன. அதாவது 74 கோடி ரூபாவிலிருந்து 1200 கோடி ரூபாவாக முதலீடுகள் ஆரம்பித்துள்ளன. சகல வழிகளிலுமே மிக அதிகளவில் இந்தியாவுடன் நாம் சிறந்த உறவைக் கொண்டிருக்கிறோம் என்றும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

## பிரபாகரன் ஒரு கொலைகாரன் என்கிறார் பிரதமர்

புலிகளை முற்றாக ஒழித்துக் கட்டும்வரை போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது எனவும் கடந்த காலங்களில் விட்ட தவறை இனியும் நாங்கள் விட மாட்டோம் எனவும் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க ஹொரணையில் நவ.25ம் திகதி நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.
ஹொரணை றோயல் கல்லூரியை தேசிய கல்லூரியாகப் பெயர் மாற்றும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அரசாங்கம் சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டி வருவதால் போர் நிறுத்தமொன்று மேற்கொள்ளப்படலாமென சிலர் எண்ணங் கொண்டுள்ளனர். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதை உறுதியாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.
சில வெளிநாடுகள் எமது நாட்டின் பிரச்சினையை வேறு நாடுகளின் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயற்சிக்கின்றன. ஆனால் பிரபாகரன் என்பவர் மனிதாபிமானமென்றால் என்னவென்றே தெரியாத ஒரு கொலைகாரன் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு சாத்வீக நடவடிக்கை பயன் தரப் போவதில்லை. பிரச்சினைகள் எந்த உருவத்தில் வருகின்றனவோ அதே வழிகளில் தான் அதனை முறியடிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மூன்று கோவில்களுக்கு ஒரு கோடி நாகவிகாரைக்கு மட்டும் ஒரு கோடிக்கு மேல்!

அண்மையில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டமொன்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் சிவாஜிலிங்கம் தமக்கு ஒதுக்கப்படும் நிதி குறைவு எனவும், ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேச சபைகளுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்படுவதாகவும் கூறினார். அதற்கு அரசாங்க அதிபர், அவர்கள் குறிப்பிட்ட அமைச்சர்களின் காலைப் பிடித்து நிதி ஒதுக்குகிறார்கள். அதற்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றார். அதற்கு சிவாஜிலிங்கம் நாங்கள் மக்களுக்குச் சேவை செய்யலாம் என நினைத்துத் தான் வந்தோம். இப்படியென்றால் நாம் தனித்து பிரிந்து இயங்குவது தான் வழி என்றார்.
உடனே மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் நீங்கள் தனித்து இயங்குவதனால் வன்னிக்குப் போங்கள் என்றார்.
கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், திருக்கேதீச்சரம் ஆகிய மூன்று கோயில்களும் புனரமைப்பதற்கு என ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை R.R.A.N. எவ்வளவு பெருமைக்குரிய விடயம் பார்த்தீர்களா, எமது அரசாங்கம் சகல மதங்களையும், சரிசமமாக நடத்துகின்றது என்பதற்கு இதை விடவும் உதாரணம் வேண்டுமா? இதே வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை யாழ்ப்பாணம் நாக விகாரை புனரமைப்புக்கென ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு தெரியுமா ஆக ஒரு கோடி இருபது இலட்சம் மட்டுமே. வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் யார் தெரியுமா? இந்து கலாசார அமைச்சர் தான். ⊖

# யாழ்ப்பாணத்திலும் ஒரு லியோனி

1995ம் ஆண்டு இடம்பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர்வுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கம்பன் கழகம் பட்டிமன்றங்களை நடாத்தி வந்தது. அந்தக் காலப்பகுதியில் ஜெயராஜ் யாழ்ப்பாணத்தில் ஒரு 'சுப்பர் ஸ்டாராக' விளங்கினார். கம்பன் கழக உறுப்பினர்களுக்கும் அரசியல் பிரமுகர்களை விட கூடுதல் மரியாதை அளிக்கப்பட்டது. மரபுவழிப் பழம் பண்டிதர்கள் தொடக்கம் துணைவேந்தர், பேராசிரியர்கள் வரை கம்பன் கழக உறுப்பினர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டனர்.
யாழ்ப்பாண இடப்பெயர்வுடன் கம்பன் கழகம் கொழும்பிற்கு இடம்பெயர்ந்து விடவே யாழ்ப்பாணத்தில் பட்டிமன்றக் கலாசாரமும் குறைந்திருந்தது. இப்போது சைவப்புலவர் ந. சத்தியதாசன் பட்டிமன்றம் என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கி பட்டிமன்றங்களை நடாத்தி வருகிறார்.
இவரது பட்டிமன்றங்களில் வாதப்பிரதிவாதங்களை நடத்துவோர் அனைவரும் பாடசாலை மாணவ மாணவிகளே. சத்தியதாசன் தன்னையும் ஒரு லியோனியாகக் கொண்டு லியோனி பாணியில் வாதம் செய்வோரை நக்கலடித்தும் கிண்டலடித்தும் பட்டிமன்றங்களை நடத்தி வருகின்றார். இவர்களது பட்டிமன்றங்களை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ் சேவையும் ஒலிபரப்பி வருகின்றது.
இந்த வகையில் கடைசியாக இவர்கள் நடத்திய பட்டிமன்றத்தின் தலைப்பு சினிமாப் படங்கள் சமுதாயத்தைச் சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்பதாகும். இப்பட்டிமன்றத்தில் வாதம் புரிந்த மாணவர் ஒருவர் முன்னழகைப் பார்த்து முதுமாணி செய்யவா, பின்னழகைப் பார்த்து பி.எச்.டி செய்யவா என்ற பாடலை மேற்கோள் காட்டி இப்பாடல் பெண்களை இழிவுபடுத்துவதாகக் கூறினார். ஆனால் இதற்குப் பின்னர் பேச வந்த மாணவி இந்தப் பாடலில் என்ன பிழை இருக்கிறது. பெண் விடுதலைப் பற்றி பேசும் இந்தக் காலத்தில் பெண்கள் அழகானவர்கள் அவர்களின் முன்னழகையும் பின்னழகையும் வர்ணிப்பதில் என்ன பிழை என வாதிட்டார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு சிரிப்புக்கு பதில் அழுகை வரும் போலிருந்தது. பாவம் அவர்களைக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. இவர்களுக்கு நடுவராக விளங்கும் சைவப்புலவர் (சைவப்புலவர் என்றவுடன் வேட்டியையும், சந்தனப் பொட்டையும் கற்பனை செய்து விடாதீர்கள். தினமுரசு, ஜனனி பத்திரிகைகளின் அபிமான வாசகர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.) இறுதியில் சினிமாப் பாடல்கள் சமுதாயத்தைச் சீர்படுத்துகின்றன என்று தீர்ப்பு வழங்கினார் அந்தச் சைவப்புலவர். இனிமேல் சமுதாயத்தில் கெட்டுப் போனவர்களை நல்வழிப்படுத்துவதற்கு கெட்டுப் போனவர்கள் என்று கருதுவோருக்கு ஒவ்வொரு சினிமாப் பாடல் கசற்றுக்களையோ அல்லது சி.டிக்களையோ அன்பளிப்பாக வழங்குவார்கள் இந்தப் பட்டிமன்றத்தினர். ⊖

# காணாமல் போன தொழில்நுட்பக்கல்லூரி மாணவன்! சக மாணவர்கள் பகிஸ்கரிப்பில்!! போராட்டத்தை முறியடிக்க வலம்புரி விசமத்தனம்!!!

கடந்த வாரம் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் இ. சிறிரங்கநாதனை விடுவிக்கக் கோரி சக மாணவர்கள் நவ.23 வியாழக்கிழமை முதல் வகுப்புகளுக்குச் செல்லாது பகிஸ்கரிப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.
கைது செய்யப்பட்ட மாணவனுக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி ஆண்டிறுதிப் பரீட்சை ஆரம்பமாகவுள்ளது. இதனால் இவரை உடனடியாக விடுவிக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள்.
இது தொடர்பாக சக மாணவர்கள் கல்லூரியின் அதிபர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் படை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்த போதிலும் அது பயனளிக்காததாலேயே இப்போராட்டத்தில் தாங்கள் குதித்துள்ளதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
மாணவர்களின் வகுப்புப் பகிஸ்கரிப்புக் காரணமாகத் தொழில் நுட்பக் கல்லூரி முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பகுதி நேர மாணவர்களும் இப்போது பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
இவர்களின் பகிஸ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கு முகமாக குடாநாட்டு பாடசாலை மாணவர்களும் பகிஸ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாகவும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் அதற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாகப் பரிசீலித்து வருவதாகவும் தெரிய வருகின்றது.
இதற்கிடையில் இம்மாணவர்களின் கைது தொடர்பாக யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் குகேந்திரன் ஜெகன் 51 ஆவது படையணியின் தளபதி காமினி ஜெயசுந்தராவுடன் தொடர்பு கொண்டு கேட்டதற்கு இக்கைதுக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்புமில்லையெனக் கூறியுள்ளதுடன் 52 ஆவது படையணித் தளபதியுடன் தொடர்பு கொண்டு விசாரிக்குமாறும் கூறியுள்ளார்.
இதேவேளை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் நவ.24 வெள்ளியன்று யாழ். அரசாங்க அதிபரிடம் இக்கைது தொடர்பாக மனுவொன்றினையும் கையளித்துள்ளனர். இம்மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து கச்சேரி வரை சைக்கிளில் ஊர்வலமாகச் சென்றே மனுவைக் கையளித்தனர்.
பிந்திக் கிடைத்த தகவல்களின்படி இம்மாணவனுடைய கைது தொடர்பாக யாழ். மாவட்ட பா.உ. ஜெகன் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு வழங்கிய உறுதி மொழியை அடுத்து மாணவர்கள் தமது பகிஸ்கரிப்பைக் கைவிட்டு விட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் வலம்புரி என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. எனினும் தாம் அவ்வாறு பகிஸ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிடவில்லை என்றும் வலம்புரி விசமத்தனமாக அச்செய்தியைப் பிரசுரித்துள்ளது என்றும் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வரும் மாணவர்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். ⊖

நன்றி - நூலகத்திட்டம்



# எதைக் கொடுப்பார்கள் தீர்வாக?

டி.சிவராம்

சந்திரிக்கா அரசை ஒரு மிக முக்கியமான கூட்டாளியாகக் கருது-கின்றது இந்திய மத்திய அரசு. சந்திரிகாவின் ஆட்சி-யைப் பலப்படுத்துவது இந்தியாவின் தற்போதைய கேந்திர நலன்களுக்கு இன்றிய-மையாத ஒன்றாக நோக்கப்படுகின்றது.

இதற்குப் பல உடனடிக் காரணங்களும் நீண்ட காலக் காரணங்களும் உண்டு. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், குறிப்பாக அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும், இந்தியத்தூதரகம் சந்திரிகாவை ஆதரிக்கும் வகையில் திரை மறைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் குற்ற-ஞ்சாட்டியதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இங்கு இரண்டு விடயங்களை இது தொடர்பாக நான் விளக்க முற்பட்டுள்ளேன்.

ஒன்று - தனது மேற்படி நெருங்கிய கூட்டாளியின் ஆட்சியை வலுப்படுத்தும் நோக்குடன் புலிகளுடன் பேசி குறைந்த பட்சப் போர்த் தணிப்பையாவது கொண்டு வரும்படி சந்திரிக்காவை இந்தியா வற்புறுத்துகின்றது என்பது.

இரண்டு - இப்படி அது செய்வதற்கான சில தவிர்க்க முடியாத கேந்திரக் (Strategic) காரணங்கள் தோன்றியுள்ளன என்பது. இந்தியா இலங்கையுடன் இரண்டு மிக முக்கிய ஒப்பந்தங்களைச் (treaties) செய்துள்-ளது. முதலாவது 1987இல் கைச்சாத்திடப்-பட்டது. மற்றது, கடந்த ஆண்டு பலரது ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும் கைச்சாத்-திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கையாகும்.

முதலாவது ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் அமெரிக்காவின் ஒலிபரப்பு நிலையத்தைக் கண்காணிக்கும் வசதியும் சிறிலங்காப் படையினருடைய வெளிநாட்டுப் பயிற்சியின் பெரும்பங்கை

> இன்னொரு ஆறு வருடங்களுக்குப் புலிகளுடன் சண்டை பிடித்து அவர்களை ஓரங்கட்டும் முயற்சியில் சந்திரிகா அரசு இறங்குமாயின் அது இலங்கையில் தனது கேந்திர மற்றும் பொருளாதார நலன்களுக்குக் கடும் குந்தகம் விளைவிக்கும் என்பதே டெல்லியின் தற்போதைய நிலைப்பாடு. புலிகளுடன் தொடரும் சண்டையில் அவர்களுடைய மரபு வழிப்படை வலு மேலும் பெருகி, அவர்கள் யாழ்ப்பாணத்தையும் கிழக்கின் பல பகுதிகளையும் கைப்பற்றும் நிலை தோன்றுமேயானால் தென்னிலங்கையில் பொருளாதாரத் தளம்பல் நிலையும் அரசியல் நெருக்கடிகளும் தோன்றுமென்பதில் ஐயமில்லை. அப்படியாயின் இந்தியாவின் பொருளாதார ஒப்பந்தத்தைப் பலப்படுத்தி அதன் பலன்களை விரிவுபடுத்தும் திட்டம் குழம்பிவிடும்.

பொறுப்பெடுக்கும் வாய்ப்பும் உளவுத்துறைப் பரிமாற்றங்களும் ஏற்பட்டன.

இரண்டாவது ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவே இலங்கையின் பிரதான வெளிநாட்டு வர்த்தகப் பங்காளியாகுவதற்-கான பலமான அடித்தளம் போடப்பட்டது. தற்பொழுது சிறிலங்காவின் பிரதான வர்த்தகப் பங்காளி (Trading partner) அமெரிக்காவாகும். பிரித்தானியர் இலங்கையை விட்டகன்ற ஆரம்ப ஆண்டு-களில் இத்தீவினுடைய வெளிநாட்டு வர்த்த-கத்தில் கிட்டத்தட்ட 50 விழுக்காடு இந்தி-யாவுடனேயே இருந்து வந்தது. பின்னர் படிப்படியாக சிறிலங்கா தனது வெளிநாட்டு வர்த்தக உறவுகளைப் பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா என்பவற்றுடன் வளர்த்துக் கொண்டது. இதனால் சிறிலங்காவின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஒரு மிகச் சிறிய பங்கே காலப்போக்கில் இந்தியாவிற்குக் கிடைக்கலாயிற்று. இந்நிலையை மாற்றி சிறிலங்காவுடன் ஒரு பலமான வர்த்தகப் பிணைப்பை ஏற்படுத்தி காலப்போக்கில் ஒரு பிராந்திய மட்ட கூட்டின் அடிப்படையில் உலகச் சந்தையில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதே இந்தியாவின் நோக்கமாகும். இன்றைய உலகச் சந்தையில் வெற்றிகரமாகப் போட்டியிடுவதற்கு இவ்வாறான வர்த்தகக் கூட்டுகள் பிராந்திய வல்லரசுகளுக்குத் தேவையாக உள்ளன. அமெரிக்கா, மெக்-சிக்கோ, கனடா என்பன 90களின் ஆரம்பத்-தில் ஏற்படுத்திய வர்த்தக உடன்படிக்கை இதற்கு நல்ல உதாரணமாகும். ஆனால், இவ்வகை வர்த்தக ஒப்பந்தங்கள் பிராந்திய அரசிற்கே சாதகமானவை. இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தம் டெல்லிக்குச் சாதகமான முறையிலேயே உருவாக்-கப்பட்டது என்பது பலரது குற்றச்சாட்டு. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மூத்த அதிகாரிகள் பலர் இதனை எதிர்த்தனர்.

இவ்வொப்பந்தத்தை இந்தியாவால் கைச்சாத்திடக் கூடியதாயிற்று. சிறிலங்காவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிலுள்ள மூத்த அதிகாரிகள் தேசியவாதக் கருத்துடையவர்-கள். அணிசேராக் கொள்கையின் பாதிப்பில் உருவானவர்கள். எனவே மேற்படி வர்த்தக ஒப்பந்தம் சிறந்த முறையில் இயங்கி விரிவடைவதற்கும், நிலைகொள்வதற்கும் அவர்கள் சாதகமாக இருக்க மாட்டார்கள். ஆகவே அவர்களைக் கட்டுப்படுத்-தியும் மேவியும் செயல்படுவதற்கு சந்திரிக்கா போன்ற ஒரு சாதகமான ஆட்சியாளர் தனக்குத் தேவை என்பது டெல்லியின் எண்ண-மாகும். சந்திரிக்கா இன்னும் ஆறுவருடத்தில் பதவிக்காலம் முடிவடைந்து அரசியலிலிருந்து ஒதுங்கி விட்டால், பின்வரும் ஆட்சியாளரும் வெளிநாட்டலுவல் அதிகாரிகளும் மேற்படி ஒப்பந்-தங்கள் தொடர்பாக என்ன நிலைப்பாடு எடுப்பார்கள் என டெல்லிக்குத் தெரியாது. எனவே தான் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்திலேயே இந்த வர்த்தக ஒப்பந்தத்தைப் பலப்படுத்திவிட வேண்டுமென எண்ணுகிறது இந்தியா. இதைச் செய்வதனால் சந்திரிகாவின் ஆட்சி பொருளா-தாரத் தளம்பலற்று இயங்க வேண்டும். இதற்குப் போர் தணிய வேண்டும். ஆரம்பத்தில் சந்திரிகா புலிகளைப் போரில் முறியடித்து அதன் மூலம் தனது ஆட்சியை பொருளாதார வகையிலும், அரசியல் வகையிலும் நிலைப்-படுத்திக் கொள்வார் என இந்தியா எதிர்பார்த்தது. இதை விரைவுபடுத்துவதற்கான சில உதவிகளையும் சந்திரிகா அரசிற்கு அது வழங்கிறது.

டெல்லியின் இந்த எதிர்பார்ப்புகளை ஓயாத அலைகள் மூன்று தவிடுபொடியாக்-கிற்று. சிறிலங்காப் படைத்துறை விரைவில் புலிகளை ஓரங்கட்டிவிடும் என இந்தியா இனி நம்பத் தயாரில்லை. எனவே புலிகளை வரப்போகும் ஆறு வருடங்களில் (சந்திரிகா-வின் ஆட்சிக்காலம்) சிறிலங்காப் படைத்-துறை முறியடிக்கும் என இலவு காக்கவும் இப்போது டெல்லி தயாரில்லை. இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் இந்தியாவின் நோக்கம் தனது பொருளாதார மற்றும் கேந்திர இலக்குகளை இலங்கையில் அடைவதேயன்றி புலிகளை எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்பதலல.

இன்னொரு ஆறு வருடங்களுக்குப் புலிகளுடன் சண்டை பிடித்து அவர்களை ஓரங்கட்டும் முயற்சியில் சந்திரிகா அரசு இறங்குமாயின் அது இலங்கையில் தனது கேந்திர மற்றும் பொருளாதார நலன்களுக்-குக் கடும் குந்தகம் விளைவிக்கும் என்பதே டெல்லியின் தற்போதைய நிலைப்பாடு. புலிகளுடன் தொடரும் சண்டையில் அவர்களுடைய மரபு வழிப்படை வலு மேலும் பெருகி, அவர்கள் யாழ்ப்பாணத்தையும் கிழக்கின் பல பகுதிகளையும் கைப்பற்றும் நிலை தோன்றுமேயானால் தென்னிலங்கையில் பொருளாதாரத் தளம்பல் நிலையும் அரசியல் நெருக்கடிகளும் தோன்றுமென்பதில் ஐயமில்லை. அப்படியாயின் இந்தியாவின் பொருளாதார ஒப்பந்தத்தைப் பலப்படுத்தி அதன் பலன்களை விரிவுபடுத்தும் திட்டம் குழம்பிவிடும். அத்துடன் போர் காரணமாக அரசியற் சிக்கல்கள் ஏற்படுமானால் நாடாளுமன்றில் மட்டுமட்டாக இருக்கும் சந்திரிகா அரசு உறுதியான சில நிலைப்பாடுகளை எடுக்க முடியாது போய்விடும். எனவே உயர் அதிகாரிகளையும் தனது சில மந்திரிமாரையும் மேவி டெல்லிக்குச் சாதகமான முடிவுகளை வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ எடுப்பதும் சந்திரிகாவிற்குக் கடினமாகிவிடும்.


இதுமட்டுமல்லாது தன் செல்வாக்குப் பிராந்தியத்தினுள் அமைந்துள்ள நாடுகளில் உள்-நாட்டுப் போர்களும் அரசியல் குழப்பங்களும் இழுபட்டுக் கொண்டு செல்லும் போது அது அமெரிக்காவிற்குச் சாதகமாக அமைந்து விடுவதையும் டெல்லி கருத்திற் கொள்கிறது. உதாரணமாக இந்தியாவின் கைப் பொம்மையாக இருந்த கொய்ராலாவின் அரசு வீழ்ந்து தேசியவாதிகளான கம்யூனிஸ்டுகள் அண்மையில் நேபாளத்தில் ஆட்சிக்கு வந்த போது அவர்கள் அமெரிக்காவுடன் ஒரு முக்கிய இராணுவ உடன்-படிக்கையைச் செய்து விட்டார்கள். தென் ஆசியப் பிராந்தியத்தில் இவ்வகை உடன்படிக்கை (Status of Forces Agreement) ஒன்றை அமெரிக்கப் படைத்துறையுடன் செய்து கொண்ட முதலாவது நாடு நேபாளமாகும். சிறிலங்காவுடனும் இந்த வகை உடன்படிக்கையைச் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத்தைப் புலிகள் இந்தா அந்தா கைப்பற்றப் போகிறார்கள் என்ற நிலை கடந்த மே - ஜுன் மாதங்களில் தோன்றிய போது சிறிலங்காப் படைத்துறை "நேரடிப் படை உதவி தாருங்கள். அதற்குப் பதிலாக நாம் உங்களுக்கு தளம் அமைத்திடும் வசதியை இங்கே செய்து தருகின்றோம்" என அமெரிக்காவிடம் வேண்டிக் கொண்டது. எனவே போர் தொடர்வதால் ஏற்படக் கூடிய இராணுவ நெருக்கடிகள் சிறிலங்காப் படைத்துறையை மேற்கு நாடுகளின் பிடிக்குள் தள்ளிவிடலாம் எனவும் டெல்லி கரிசனை கொள்கிறது.

இவையெல்லாவற்றையும் விட வட கிழக்கில் தொடரும் போரும் புலிகளின் வளர்ச்சியும் தமிழகத்தில் மீண்டும் தனி-நாட்டுக்கான அவாவைக் கிளப்பி விடலாம் என டெல்லியில் இன்று அச்சமுள்ளது. வீரப்பன், தமிழக விடுதலைப்படை என்பன பற்றி தென்னகப் பிராமணீயம் இன்று போடுகின்ற கூச்சல் டெல்லியிலும் எதிரொலிக்கிறது.

எனவே தான் புலிகளுடன் உடனடி-யாகப் பேசுவதற்கு சந்திரிகா மீது இந்திய மத்திய அரசு கடும் அழுத்தத்தைக் கொடுத்-துள்ளது. நிலைமைகளைப் பார்க்கும் போது சந்திரிகாவும் இதற்கு மசிகிறார் போல் தெரிகிறது. இந்த விடயத்தில் இந்தியாவிற்கு டக்ளஸ் தேவானந்தா, சிறிலங்காப் படைத்-துறைத்தலைமை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் கடும்போக்காளர்கள் ஆகி-யோர் புலிகளுடன் போர்த்தணிப்பு, பேச்சு-வார்த்தை என்பன பற்றிக் கொண்டுள்ள கவலைகள் இந்தியாவிற்கு இரண்டாம் பட்சமே.

போரின் மூலம் வெல்ல முடியாத புலியை பேச்சுவார்த்தை என்னும் கூட்டிற்-குள் நைசாகக் கொணர்ந்து வேலையைக் கொண்டு போகலாம் என எண்ணுகின்றன இந்தியாவும் மேற்கு நாடுகளும். சந்திரிகா-விற்கும் அது சரியென்றே படுகிறது என நாம் எண்ண இடமுண்டு. ஆனால், புலி பேச்சுவார்த்தைக்கு வந்தாலும் கூட சிங்கள தேசத்தால் தமிழ் மக்களுக்கு குறைந்த பட்சம் எதைக் கொடுக்க முடியும் என்பது தான் கேள்வி.



தமிழீழத்தைக் கைவிட்டோம், எமக்கு உப்புச் சப்பில்லாத அந்த மாவட்ட சபைக-ளைத் தாருங்கள் எனக் கேட்ட கூட்டணிக்கு எதைக் கொடுத்தார்கள்?

"சிங்கக் கொடியை ஏற்றினேன். பாருங்கள் என் விசுவாசத்தை" என அன்று பகன்றார் பெருமாள். அவருக்கு எதைக் கொடுத்தார்கள்?

"ஒன்றும் வேண்டாம். வடகிழக்கு மாகாணத்திற்கு ஒரு இடைக்கால நிர்வாக சபையையாவது தாருங்கள்" என ஆறு வருடங்களுக்கு மேலாக களைக்காமல் இறைஞ்சி வருகிறார் நண்பர் டக்ளஸ். இலவு காத்த கிளியாக அவர் இன்னும் இருக்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் சிங்கள தேசம் நமக்கு என்ன தருமோ என நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

அதைத் தெருவோரம் போகும் நாய் கூட நமக்குக் கூறிவிடும்.

நன்றி - நூலகத்திட்டம்



~ சரிதன்

# பல்கலைக்கழக மாணவரின் போராட்டமும் வீடியோ படம் பிடிக்கும் படையினரும்!

கடந்த நவ 22ம் திகதி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிமல்ராஜன் படுகொலை, பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல் சம்பவங்களுக்கு எதிரான கண்டனப் பேரணியும் கூட்டமும் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் இருந்து ஆரம்பமானது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு துணைவேந்தர் அனுமதி வழங்காத போதும் மாணவர்கள் உணர்வு பூர்வமாக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தினை ஆரம்பித்தனர். ஊர்வலம் பரமேஸ்வராச் சந்தியை அடைந்து பலாலி வீதியூடாக பழம் வீதியை அடைந்த போது இராணுவத்தினரால் ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் அவர்கள் ஊர்வலம் நடத்த படையினரிடம் பெற்ற அனுமதிப் பத்திரத்தினைக் காட்டிய பின்னர் ஊர்வலத்தைத் தொடர அனுமதித்தனர். பழம் வீதி, நல்லூர் கச்சேரி வீதியூடாக கச்சேரியைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் அரசிற்கும் ஈ.பி.டி.பி.யினருக்கும் எதிரான கோசங்கள் எழுப்பப்பட்டன. "நிமலராஜன் கொலையால் வடபகுதி புனரமைப்பு", "1983ல் கறுப்பு ஜுலை 2000ல் பண்டாரவளை", "ஈ.பி.டி.பி.யே யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறு", "அரசே எம்மையும் ஆயுதமேந்த வைக்காதே", "டக்ளஸே பதவி விலகு", "தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்", "அமைச்சுப் பதவிக்காக தமிழர்களை விலைபேசாதே", "காவலரண்கள் வேண்டாம்", "ஈ.பி.டி.பியே ஆயுதங்களைக் கீழே போடு" போன்ற கோசங்களை எழுப்பிக் கொண்டும் பல சுலோக அட்டைகள், டக்ளஸ் தேவானந்தாவின் கேலிச் சித்திரத்திங்கள் போன்றவற்றையும் தாங்கிச் சென்றனர்.

பத்திரிகையாளர் நிமல்ராஜனின் படுகொலையும், பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதலும் எந்தக் காலத்திலும் தமிழ் மக்கள் சிங்கள தலைமைகளின் கீழ் இணைந்து வாழ்வது சாத்தியமில்லை என்பதை மீண்டுமொருமுறை உலகத்திற்கு எடுத்துச் சொல்லியுள்ளது. படுகொலைகள் தொடர்பான நீதியான விசாரணையை நடாத்த விரும்பாமல் உலக நாடுகளை ஏமாற்றும் விதத்தில் புதுப் புதுக்கதைகளை கட்டிவிடுகின்றனர் அரச தரப்பினர்.

ஊர்வலத்தில் துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

அத்துண்டுப் பிரசுரத்தில், நிமலராஜன் படுகொலை, பிந்துனுவெவ காட்டுமிராண்டித்தனம் என்பவற்றைச் சாடியுள்ளதுடன், தொடந்தும் இந்த நாட்டில் சிங்கள இனவெறி அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வை தரப்போவதில்லை என்பதை இப்படுகொலைகள் நமக்கு இடித்துக் கூறுகின்றன. இது ஈழத்தில் தமிழ் மக்கள் சிங்கள தலைமைகளுடன் இணைந்து வாழ முடியாது போவதைக் காட்டுவதுடன் இலங்கையில் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ முடியாது என்பதை உணர்த்தி நிற்கின்றன.

குட்டக் குட்ட குனிபவராக இல்லாது பதிலடி கொடுப்பதே இதற்கு ஒரு தீர்வு. அதன் மூலமே தமிழர் தங்கள் தாயகப் பிரதேசத்தை சிங்களப் பேரினவாத சக்திகளிடமிருந்து காத்துக் கொள்ள முடியும்.... என தொடர்கின்றது அவ்வறிக்கை.

குட்டக் குட்ட குனிபவராக இல்லாது பதிலடி கொடுப்பதே இதற்கு ஒரு தீர்வு. அதன் மூலமே தமிழர் தங்கள் தாயகப் பிரதேசத்தை சிங்களப் பேரினவாத சக்திகளிடமிருந்து காத்துக் கொள்ள முடியும்.... எனத் தொடர்கின்றது அவ்வறிக்கை.

கச்சேரியினை அடைந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோரின் படங்களைத் தீமூட்டி எரித்தனர். அரசாங்க அதிபர் முன்னிலையில், அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் தங்கள் கருத்துக்களையும் முன்வைத்தனர்.

மாணவர் ஒருவர் "பத்திரிகையாளர் நிமலராஜனை கொலை செய்தவர்களை அனைவரிற்கும் தெரியும். ஆனால் வெளிப்படையாகக் கூறுவதற்கு பயப்படுகின்றார்கள். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாமும் அவ்வாறு பயப்பட முடியாது. நிமல்ராஜனைக் கொலை செய்தவர்கள் ஈ.பி.டி.பி.யினரே என்று துணிந்து கூறுகின்றேன் எனவும் தெரிவித்தார்.

1. நிமல்ராஜன் படுகொலை சூத்திரதாரிகளை விசாரணை மூலம் விரைவில் இனம்கண்டு மிகக் கடுமையான தண்டனையளிக்க வேண்டும்.

2. பிந்துனுவெவ மிலேச்சத்தனமான படுகொலைகளைப் புரிந்தவர்களை நீதிக்குமுன் நிறுத்தி அவர்களுக்கும் மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

3. நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைக் கொண்டு இனப்பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காண பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

4. யாழ் குடாக்கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் தூரத்தையும் நேரத்தையும் அதிகரிக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளடங்கிய ஜனாதிபதிக்கான மகஜரையும் அரச அதிபர் சண்முகநாதன் அவர்களிடம் கையளித்தனர்.

மகஜரினைப் பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் சண்முகநாதன் உரையாற்றுகையில், " பல்கலைக்கழக மாணவர்களாகிய உங்களின் போராட்டத்திற்கு உணர்வுபூர்வமான எனது ஆதரவு என்றும் உண்டு. உங்கள் மகஜரில் உள்ள கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் உரிய முறையில் எடுத்துக் கூறி அதற்கான சாதகமான பதிலினை விரைவில் பெற்றுத் தருவேன் என்றும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மகஜரைக் கையளித்து திரும்பிச் செல்கையில், பலாலி வீதியில் வைத்து படையினரால் வீடியோ படம் எடுக்கப்பட்டதுவும் குறிப்பிடத்தக்கது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் மக்கள் நசுக்கப்படும் போதெல்லாம் குரல் கொடுத்தே வந்துள்ளனர். சில காலங்களுக்கு முன் யுத்த பிரதேசமான பளை, பச்சிலைப்பள்ளி போன்ற இடத்தில் சிக்குண்ட மக்களை வெளியில் எடுப்பதற்கு ஆர்ப்பாட்டம், ஹர்த்தால் போன்ற நடவடிக்கைகள் மூலம் மக்களை வெளியில் எடுத்தது போன்ற போராட்டங்களில் அவர்கள் ஈடுபட்டதும் அறிந்ததே.

⊖

# இலைத் தளிர்

## கூட்டுபவர் ஆட்சி = கூட்டாட்சி

கூட்டு அரசாங்கம் என்றால் என்ன?

"கருத்து ரீதியாக, கொள்கை ரீதியாக உடன்படுகிற ஒரு சில அரசியற் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆட்சியமைக்கிற ஒரு அரசாங்கத்தை கூட்டு அரசாங்கம் என்று சொல்கிறோம். இலங்கையிலும் இப்போது இருப்பது ஒரு கூட்டு அரசாங்கம் தான். பொதுசன ஐக்கிய முன்னணி என்ற கூட்டு. முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா., ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளுடன் மேலும் கூட்டுச் சேர்ந்து இந்த அரசாங்கத்தை அமைத்துள்ளது" என்று நீங்கள் பதில் தரக் கூடும்.

ஆனால் உண்மையில் இந்தக் கூட்டு, நீங்கள் மேலே சொன்ன கொள்கைகள், கருத்துக்களின் ஒருமையில் உருவாக்கப்பட்ட ஒன்று தானா? அல்லது வேறேதாவது காரணிகள் இவர்களை "கூட்டாக்கி" வைத்திருக்கின்றனவா?

கூடவே இன்னுமொரு கேள்வியும் எழுகிறது. கூட்டு என்பது கட்சிகளின் கூட்டா அல்லது தனி நபர்களின் கூட்டா?

அது சரி ஏனிந்த தேவையில்லா சலிப்பூட்டுகிற கேள்விகள் என்று யோசிக்கிறீர்களா?

எல்லாம் இந்த அரசியல் தலைவர்களது கருத்துக்களை பத்திரிகைகளில் படித்ததால் வந்த சந்தேகங்கள் தான்.

அரசியலமைப்பு கைத்தொழில் விவகார அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் டில்லியில் வைத்து ஒரு கதை சொல்கிறார் என்றால் அதற்கு நேரெதிரான ஒரு கதையைச் சொல்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க. இருவரும் ஒரே அரசாங்கத்தின் சிரேஸ்ட அமைச்சர்கள்.

பேராசிரியர், புலிகளிடம் முன் நிபந்தனையாக ஆயுதங்களை கீழே போட்டு விட்டுப் பேச வருமாறு நாங்கள் கோரப் போவதில்லை என்று சொல்கிறார். சமாதானத்துக்கான நல்ல சகுனம் தோன்றியிருப்பதாக அவர் கூறுகின்றார். இங்கோ ஹொரணையில் வைத்து பிரதமர் ரட்ணசிறி யுத்தத்தை தவிர வேறு வழி இல்லை என்கிறார். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயத்துடன் அரசாங்கத்தில் இருக்கிறார்கள்.

ஆக, அரசாங்கம்,பிரதான பிரச்சினைக்குரிய முக்கிய விடயத்தில் கூட ஒரு ஒத்த கருத்துடைய நபர்களை கொண்டதாக இல்லை என்று தெரிகிறது.

'ஓமோம் அவர்களுக்குள்ள ஒரே ஒற்றுமை, எப்படி நாட்டைச் சூறையாடுவது, தங்களது பணத்தை பெருக்கிக் கொள்வது என்பது தான்' என்கிறார் எனது நண்பர்.

அப்படியானால் இதை கூட்டாட்சி என்று சொல்ல முடியாதா என்று கேட்டேன்.

'சொல்லலாம். எல்லா வளங்களையும் செல்வங்களையும் கூட்டி வாரி தங்கள் கொல்லைக்குள் குவித்துக் கொள்ள விரும்புபவர்கள் சேர்ந்து நடாத்துவதால் கூட்டாட்சி என்று சொல்லலாம் தான் என்றார் அவர்.

"ஆக இந்த கூட்டாட்சியில் சமாதானம் சரி வராது என்கிறீர்கள்"

"சரி வாறதும் சரி வராததும் கூட்டுகிறவர்களில் மட்டும் தங்கியில்லை. நிலத்திலையும் தங்கியிருக்கிறது" என்று தத்துவம் பேசினார் அவர். எனக்குப் பாதி புரிந்தது. பாதி புரியவில்லை.

உங்களுக்கு?

## வியாபாரச் சரக்குகள்!

'எப்பிடி உங்கடை தலைவற்றை பேச்சு' என்று கேட்டார் எனது சிங்கள நண்பர் ஒருவர்.

ஒரு கணம் எனக்கு சிரிப்புடன் கலந்த எரிச்சல் தோன்றியது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பற்றி கதைப்பவர்கள் எல்லோரையும் புலிகள் என்று அழைக்கிற ஒரு வித போக்கு இப்போதெல்லாம் சிங்கள நண்பர்களிடம் வலுத்து வருகிறது. நட்புடன் பகிடியாக தான் கேட்டார் என்றாலும் இந்த 'உங்கடை' விஷயம் எனக்கு எரிச்சலைத் தான் தந்தது!

ஆனாலும், சமாளித்துக் கொண்டு சொன்னேன்:

"எங்கடை மட்டுமல்ல: உங்கடை தலைவர்மாருக்கும் அவர் தான் தலைவர்"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்"

"உங்கடை தலைவர்மாரெல்லாம், பிரபாகரன் தனது உரையில் என்ன சொல்லப் போகிறார் என்று வாயைப் பிளந்து கொண்டு காத்திருந்தது தான் எனக்குத் தெரியுமே" என்றேன்..." ஏன் நீர் கூட கேட்டிருக்கிறீர் தானே...?

"அவர் சிரித்தார்". உண்மை தான், நானும் அதைக் கேட்க பெரிய ஆர்வமாகத் தான் இருந்தேன். "மிச்சம் நல்லா" த்தான் பேசியிருக்கிறார். சந்திரிகாவுக்கு நல்ல அடி" என்றார் அவர்.

"அடி இருக்கட்டும்... சமாதானம் வருமா?"

உண்மையிலை எங்கடை நாட்டிலை உள்ள அரசியல்வாதிகள் யாருக்கும் சமாதானம் தேவைப்படவில்லை. தேவைப்படுவதெல்லாம் வெளிநாட்டு அரசியல்வாதிகளுக்குத் தான். அவர்கள் தான் சமாதானத்துக்காக பாய்ந்தடிச்சு திரிகிறார்கள்"

ஆனால், மக்களுக்கு?

"அவை தான் என்ன தேவை தங்களுக்கு எண்டே தெரியாமல் இருக்கினம்...."

"ஏன் அப்பிடிச் சொல்கிறீர்?"

"அவைக்கு எல்லாம் ஒண்டு தான். சமாதானமும் சரி சண்டையும் சரி, இரண்டும் அரசியல்வாதிகளின்ரை யாவாரச் சரக்குத் தானே...?"


நான் பிறகு பேசவில்லை.

⊖

நன்றி - நூலகத்திட்டம்



# சமாதானத்திற்கு சர்வதேச சமூகம் தயார் நாங்கள் தயார் நீங்கள்?



**சமாதானத்திற்கு நாங்கள் தயார், நீங்கள் தயார் தானா என்று கேள்வி எழுப்பும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் இருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. சமாதானம் குறித்தும் இன்றைய அரசின் நிலைபற்றியும் அவரின் கணிப்பும் கருத்தும் என்ன என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துவதாக அமைகின்றது.**

எனது அன்பான மக்களே, மீண்டும் ஆறாண்டு காலமும் சந்திரிகாவின் ஆட்சி தொடரப் போகிறது. இந்த ஆறாண்டு காலமும் இத்தீவில் அமைதி நிலவுமா அல்லது போரும் வன்முறையும் தலைவிரித்தாடுமா என்பது சந்திரிகா கடைப்பிடிக்கப் போகும் கொள்கையிலும் அணுகுமுறையிலும் தான் தங்கியிருக்கிறது.

இந்த அரசானது தென்னிலங்கை இனவாத சக்திகளின் ஆதரவோடுதான் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது. புலிகளுக்கு எதிராகப் போர் முரசு கொட்டித்தான் தேர்தலைச் சந்தித்திருக்கிறது. மிகவும் மோசமான தேர்தல் மோசடிகள், வன்முறை-கள் வாயிலாகவே வெற்றிகளையும் பெற்றிருக்கிறது. இனவாதக் கடும்போக்கா-ளர்களே இந்த அரசின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கிறார்கள். இவர்களில் பலர் அமைச்சர்களாகவும் பதவியேற்றி-ருக்கிறார்கள். ஆயுத வன்முறையைப் பாவித்து, மிகவும் கேவலமான தேர்தல் மோசடிகளைச் செய்து ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிய தமிழ்த் துரோகிகளும் இந்த ஆட்சிபீடத்திற்கு முண்டுகொடுத்து நிற்கிறார்கள். இப்படியாக இனவாதிகளையும், தமிழினத் துரோகிகளையும் நிர்வாக உயர் பீடங்களில் அமர்த்தி அவர்களது தயவில் தங்கி நிற்கும் சந்திரிகா அரசு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க துணிவான முடிவுகளை எடுக்குமா என்பது சந்தேகமே.

போர்பற்றியும், சமாதானம் பற்றியும், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது பற்றியும், இந்த அரசிடம் ஒரு தெளிவான பார்வையும், திடமான அணுகுமுறையும் இருக்கவில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களே முன்வைக்கப்படுகின்றன. பல்வேறு கருத்தோட்டங்களைக் கொண்டவர்களும் கடும் போக்காளரும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்திருப்பதால் இந்த அரசானது பல நாக்குகளால் பேசுகிறது, மிகவும் குழப்பகரமாகப் பேசுகிறது. புலிகளுடன் பேசத்தயார் என ஒரு குரலும், புலிகள் சரணடையும் வரை போர் ஓயாது என மற்றொரு குரலுமாக ஜனாதிபதி, பிரதமமந்திரி, இராணுவத் தளபதி ஆகிய உயர் அதிகாரப் பீடங்களிலிருந்தே இத்தகைய முரணான குரல்கள் எழுப்பப்படுகின்றன.

இந்த வித்தியாசமான குரல்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான பார்வையாளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடனேயே எழுப்பப்படுகின்றன. சந்திரிகாவும் கதிர்காமரும் வெளிநாடுகளுக்கு ஏமாற்றுவித்தை காட்ட பிரதம மந்திரியும் இராணுவத் தளபதியும் உள்நாட்டு இனவாத சக்திகளுக்கு தீனிபோட்டு வருகின்றனர்.

மேற்குலக நாடுகள் சமாதானத்தை விரும்புகின்றன. சமாதான வழியில் அரசியற் தீர்வு காணப்படுவதை விரும்புகின்றன. போர் மூலமாக தமிழரின் இனப்பிரச்சி-னைக்குத் தீர்வு காண முடியாதென்பதை வலியுறுத்துகின்றன. எனவேதான், மேற்குலக நாடுகளை திருப்திப்படுத்தும் வகையில் நுட்பமான பிரச்சார அறிக்கைகளை சந்திரிகா வெளியிட்டு வருகிறார். சமாதானம் என்றும், பேச்சுவார்த்தை என்றும், அதிகாரப் பரவ-லாக்கம் என்றும், அரசியலமைப்பு என்றும் வார்த்தைப் பிரயோகங்களைக் கையாண்டு மேற்குலகின் கண்களுக்கு மண்தூவி வருகிறார்.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பொறுத்தவரை சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல. இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்ட கடும் போக்காளராகவே அவரை நாமும் எமது மக்களும் கருதுகின்றோம். அவரது ஆறாண்டு கால அரசியல் வரலாறும், தமிழ் மக்களைத் தொடர்ந்தும் இராணுவ [illegible] ஆளாக்கி வரும் அவரது அணுகுமுறையும், சமீபத்திய அவரது போர்த் தயாரிப்பு நடவடிக்கைகளுமே எம்மையும் எமது மக்களையும் இத்தகைய நிலைப்பாட்டிற்கு தள்ளியது.

இடைவிடாது படைக்கு ஆட்சேர்ப்பு, விலகிய இராணுவத்தினரை விரட்டிப் பிடித்தல், இப்படியாக இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தி போருக்குத் தயார் படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும் பொழுது சந்திரிகா ஒரு இராணுவவாதக் கடும் போக்காளர் என்பது புலனாகும்.

சமாதான வழியில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது. நாம் சமாதான வழிமுறைகளுக்கு எதிரானவர்கள் அல்லர். அதேவேளை, நாம் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றத் தயங்கவும் இல்லை. சமாதான வழிமூலம் கிட்டப்படும் தீர்வானது நியாயமானதாக, நீதியானதாக சமத்துவமானதாக, தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதாக அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம். நோர்வே நாட்டு சமாதானக் குழுவினரை அண்மையில் வன்னியில் நான் சந்தித்தபோது எமது இயக்கத்தின் இந்த நிலைப்பாட்டை தெளிவாக, அழுத்தம் திருத்தமாக எடுத்துவிளக்கினேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு நாம் நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தைக்கு உகந்ததான நல்லெண்ண புறநிலையும் இயல்புநிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்-தையே நாம் வலியுறுத்தி வருகிறோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக, பரஸ்பரம் பகைமையுடனும் சந்தேகத்து-டனும், ஒரு கொடிய போரில் ஈடுபட்டுவரும் இரு தரப்பினரும், சண்டையைத் தொடர்ந்தபடி திடீரென சமாதானப் பேச்சில் இறங்குவது நடைமுறைச் சாத்தியமானதல்ல. இதனால் தான் போர் நெருக்கடியை படிப்படியாகத் தளர்த்தி, போர் ஓய்ந்த சமாதான சூழ்நிலையில் நல்லெண்ணப் புறநிலையில் பேச்சுக்கள் நடைபெறுவதை நாம் விரும்புகின்றோம். இயல்புநிலை என்னும் பொழுது தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரச் சுமைகள், தடைகள் நீங்கி, எமது மக்களின் வாழ்க்கை நிலை இயல்பான இருப்பிற்குத் திரும்ப வேண்டும் என்பதையே நாம் கருதுகின்றோம். ஒரு உறுதியான தளத்தில், உகந்த புறநிலையில், நல்லெண்ண சூழ்நிலையில் பேச்சுக்கள் நிகழும் போதுதான் அவை ஆக்கபூர்வமானதாக அமையும். ஆகவே தான், பேச்சுக்கான நல்லெண்ண புறநிலையின் அவசியத்தையும் தேவையையும் நாம் வலியுறுத்துகின்றோமே தவிர பேச்சுக்களுக்கு நாம் நிபந்தனைகளை விதிக்கவில்லை.

போர் நெருக்கடி தளர்ந்து இயல்புநிலை தோன்றுவதற்கு இரு தரப்பிலிருந்தும் நம்பிக்கையை வளர்க்கும் நல்லெண்ண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென நோர்வே அரசு யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. இதனை நாம் ஆர்வமாகப் பரிசீலனை செய்து வருகிறோம். எமது மக்கள் அனுபவிக்கும் துன்பச்சுமை குறைந்த, பரஸ்பர நல்லெண்ணம் நிலவும் சமாதான சூழ்நிலை தோன்றுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை நாம் வரவேற்கின்றோம். அதற்கான முன் முயற்சிகளை அரசாங்கம் மேற் கொள்ளுமானால் பதிலாக நாமும் நல்ல முடிவுகளை எடுப்போம்.

சமாதானப் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுக்கு ஒரு புதிதான விடயமல்ல. தமிழ் மக்கள் சார்பில் எமது விடுதலை இயக்கமும் எமக்க முந்திய தலைமைகளும் சிங்களத்துடன் எத்தனையோ தடவைகள் பேச்சுக்களை நடாத்தியுள்ளன. பண்டா-செல்வா ஒப்பந்த காலத்திலிருந்து பல தசாப்தங்களாக , பல வரலாற்றுச் சூழல்களில், பல்வேறு நிர்ப்பந்தங்களின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆயினும், இப்பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் , தவறிவிட்டன. இதனால் தமிழரின் பிரச்சினை மேலும் மேலும் சிக்கலடைந்து பெரும் போராக விஸ்வரூபம் பெற்றிருக்கின்றது. இந்தத் துரதிஸ்ட நிலைமைக்குப் பிரதான காரணம் தமிழரது பிரச்சினையின் அடிப்படைகளை, தமிழரது அரசியல் அபிலாசைகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ள மறுப்பது தான்.

தமிழரின் பிரச்சினைக்கு சமாதான வழியில் நிரந்தரமான அரசியற் தீர்வு காணப்பட வேண்டுமாயின் தமிழர் பற்றிய சில அடிப்படை உண்மைகளை சிங்கள தேசம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அத்தோடு தமிழ் மக்கள் எத்தகைய தீர்வை விரும்புகிறார்கள் என்பதையும் அவர்களது அடிப்படை அபிலாசைகள் என்ன என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தனித்துவமான இன அடையாளத்தைக் கொண்டவர்கள். ஒரு தேசிய இனக்கட்டமைப்போடு, அந்த இனத்துவப் பிரக்ஞையோடு வாழும் ஒரு மக்கள் சமூகம், அவர்களுக்கு வரலாற்று ரீதியான தாயக மண்ணாக சொந்த நிலம் உண்டு. எமது மக்கள் விரும்புவதெல்லாம் ஒன்று தான். தமது சொந்த மண்ணில் நிம்மதியாக நிறைவாக வாழ வேண்டும் என்பது தான். மற்றவர்களின் அதிகார ஆதிக்கமோ, நெருக்குவாரங்களோ இல்லாத ஒரு அரசியற் சூழலில் தம்மைத் தாமே ஆட்சி புரிந்து கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எமது மக்களின் ஆழமான அபிலாசையாகும். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிந்துணர்வின் அத்திவாரத்திலிருந்து தான் ஒரு நியாயமான, நிரந்தரமான தீர்வைக் கட்டியழுப்புவது சாத்தியமாகும்.

தமிழர் பிரச்சினையின் அடிப்படைகளை உணர்ந்து சமாதான வழியில் தமிழர்களுக்கு நீதி வழங்க சந்திரிகா அரசு முன்வருமா என்பது எமக்குச் சந்தேகமே.

தமிழர்களுக்கு எதிராக தென்னிலங்கையில் குமுறும் இனக்குரோத வெறியாட்டங்கள், ஆட்சியதிகாரத்தில் பேரினவாதச் சக்திகளின் மேலாட்சி, தொடர்ச்சியாக இராணுவமயப்படுத்தப்படும் சிங்கள சமூகம், மகாசங்கத்தினரின் தமிழ் விரோதப் போக்கு, அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுக் கொள்கை இவற்றையெலாம் பார்க்கும் போது தமிழரின் தேசிய இனப்பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்படுமா என்பது கேள்விக்குறியாகின்றது. அத்தோடு சந்திரிகா அரசு மேற்கொள்ளும் சில குருட்டுத் தனமான அணுகுமுறைகளும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முட்டுக் கட்டையாகவும் அமைந்து விடுகின்றது. பெருமாளுக்கு முதலமைச்சராக முடிசூட்டி முந்திய இந்திய அரசு இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறு போல் சந்திரிகா அரசும் தமிழ் விரோதக் குழு ஒன்றை வடகிழக்கில் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தியிருக்கிறது. இப்படியான நடவடிக்கைகள் மூலம், இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வதுடன் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடுகின்றது.

எனது அன்பான மக்களே!

எமது தேசியப் பிரச்சினை இப்பொழுது உலக நாடுகளின் கவனத்தையும் ஆர்வத்தையும் ஈர்த்து வருகிறது. இப்பிரச்சினை சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகின்றது. உலக மனச்சாட்சியின் பார்வை எம் பக்கம் திரும்பியிருப்பது நல்லதொரு அறிகுறியாகவே எமக்குத் தெரிகின்றது.

நாம் சமாதானப் பேச்சுக்கோ அல்லது சமாதான வழியிலான அரசியற் தீர்விற்கோ முட்டுக்கட்டை போடவில்லை என்பதை உலகிற்கு உணர்த்தி வருகின்றோம். சமாதானப் பேச்சுக்கு உகந்ததாக சமாதான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும், தமிழர்களது அடிப்படைக் கோரிக்கைகளையும் உலக சமூகம் புரிந்து வருகின்றது. தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையின் பின்னணியிலுள்ள சக்திகள் யாரென்பதையும் உலகம் இனங்கண்டு வருகிறது.

உலக நாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவியையும் ஆயுத உதவியையும் ஆதாரமாகக் கொண்டே சிங்கள அரசு தமிழருக்கு எதிராக இந்தப் போரை நடத்தி வருகின்றது. பெரியதொரு அழிவுப் போரை நடத்திக் கொண்டு பெருமளவில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்-துக் கொண்டு சமாதானத்திற்காகவே சண்டையை நடத்துவதாக சந்திரிகா அரசு உலகத்தை ஏமாற்றி வந்திருக்கிறது. ஆயினும், சந்திரிகா அரசு நடத்தும் இப்போரின் நோக்கம் என்ன என்பதையும் இப்போரினால் புலிகளை வெற்றி கொள்ளவோ அன்றி தமிழரின் பிரச்சினை-யைத் தீர்க்கவோ முடியாது என்பதையும் மேற்குலகம் இப்பொழுது உணரத் தொடங்-கியுள்ளது. எனவே சிங்கள இனவாத ஆட்சியாளரை சமாதானப் பாதைக்கு திருப்ப வேண்டும் என்றால், சிங்களத்திற்கு பொருளாதாரத் தீனி போட்டு வரும் உலக நாடுகளிடம் தான் அந்தக் கடிவாளம் இருக்கிறது. தென்னிலங்கை சமூக கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்து வரும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களை காருணி-யத்துடன் அரவணைத்துக் கொள்ளுமென நாம் நம்பவில்லை. சிங்கள தேசம் இனவாதப் பிடியிலிருந்து விடுபடாமல், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறையைத் தொடருமானால் நாம் பிரிந்து சென்று தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



# மட்டு: பாலியல் வன்முறையில் படையினர்

# கேட்க நாதியற்றவர்களா இம்மக்கள்?

**வி.ஜே.கே**

இந்த வாழ்க்கை இனியும் வேண்டாம்", அண்மையில் மட்டக்களப்பு களுவன்கேணியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் போது அவ்வூர் சிறுவர் முதல் முதியோர் வரை வெளிப்படுத்திய உணர்வு பூர்வமான கோரிக்கை இது. அந்த ஊரில் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டு வந்த மக்களின் உள்ளக் கிடக்கைகள் இந்தப் பேரணியின் போது வெளி வந்துள்ளது.

களுவன்கேணிக் கிராமம் பூரணமான இராணுவக் கட்டுப்பாடுள்ள கிராமம் என்றும் சொல்ல முடியாது. கட்டுப்பாடில்லாத கிராமம் என்றும் சொல்ல இயலாது. எந்த நேரத்தில் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கும் என்பதும் யாருக்கும் தெரியாது. இக்கிராமத்தை வைத்து அனைவரும் விற்றுப் பிழைக்கும் நோக்கத்துடனேயே இருக்கிறார்களேயொழிய இதை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதிலோ அல்லது அங்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலோ யாரும் பெரிதாக அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. எல்லோரும் ஒரு விதமான அசமந்தப் போக்கையே காட்டி வருகின்றனர். அரச மட்டத்திலிருந்து அரசு சாரா மட்டங்கள் வரையும் இந்தப் போக்கே காணப்படுகின்றது.

களுவன்கேணிக் கிராமம் கடல் வளத்தை நம்பி வாழுகின்ற ஒரு கிராமமாகும். ஆனால் கடல் வளத்தை முழுமையாகப் பெற முடியாத துர்ப்பாக்கிய நிலைமையே இக்கிராமத்துக்கு இருக்கின்றது. இப்பிரதேசத்தில் நிலை கொண்டிருக்கும் இராணுவம் இக்கிராமத்தின் மீது ஏற்படுத்தியிருக்கும் புலி மாயையே இதற்குக் காரணமாகும். இக்கிராமம் "புலிக்கிராம்" என்ற மாயையைத் தோற்றுவித்த படையினர் இக்கிராம மக்கள் மீதும் தமது காடைத்தனத்தையும் கட்டவிழ்த்து விடத் தொடங்கி பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது.

கடந்த சில வருடங்களாக படையினருக்கு ராசிக் குழுவைச் (தற்போதைய வரதரணியின் குழு) சேர்ந்தவர்களும் பக்க பலமாக இருந்து சுருதி சேர்த்து வருகின்றார்கள். இவர்கள் இக்கிராமத்தை நோக்கிப் படையெடுக்கும் காலமெல்லாம் அங்கு இரண்டொரு பேர் சுடப்பட்ட சம்பவமோ தாக்கப்பட்ட சம்பவமோ நடைபெற்றிருக்கும். கடந்த இரு வருடங்களில் பாடசாலை மாணவ மாணவியர் உட்பட பத்துக்கும் மேற்பட்டவர்கள் இவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது மட்டுமல்லாமல் பலர் சூட்டுக் காயங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றனர். இதில் உள்ள விசேடம் என்னவென்றால் இந்த இரண்டு வருடத்தில் இவர்கள் எந்தப் புலியையும் சுட்டதாகத் தெரியவில்லை. மாணவர்களும் அப்பாவிப் பொது மக்களுமே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால் இதிலும் இவர்களுக்கு ஒரு பெருமையுண்டு அதாவது தங்களுடைய விரோதிகளையெல்லாம் புலியின் பெயரைச் சொல்லிச் சுட்டதில். இதில் முன்னணி வகிப்பவர் ராசிக் குழுவைச் சேர்ந்த (தற்போதைய வரதரணி) சௌந்தரம் என்பவரே. 1999ம் ஆண்டு களுவன்கேணியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி யோகராணி, மகள் நாகேஸ்வரி, மச்சான் புவனேந்திரன் ஆகியோரைச் சுட்டதில் தொடங்கி சித்தாண்டியில் கழுத்து வெட்டப்பட்ட அருணாசலம் சந்திரகுமார், இவ்வாண்டு செப்.15ல் வாழைச்சேனை கிண்ணையடியில் சண்முகம் தில்லைநாதன் என்பவரின் விதையறுத்துக் கொன்ற சம்பவம் வரை அனைத்துச் சம்பவங்களுக்கும் காரணமாகவும், அவருடைய சகாக்களால் பெருமையாகவும் பேசப்படுபவர் இவர். தனித் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தி தமிழ்த் தேசிய ராணுவத்தை உருவாக்கி அதிலிருந்த நூற்றுக் கணக்கான இளைஞர்களை கொலைக்குக் கொடுத்து விட்டு இன்று தமிழீழமெல்லாம் சாத்தியப்படாத ஒன்று, இதெல்லாம் ஒரு பேய்க்கதை என்று சொல்லிக் கொண்டு அம்மையாரின் வாலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கும் அண்ணன் வரதராஜப் பெருமாள் வழி நிற்பவர்களல்லவா இவர்கள். பிறகென்ன இவர்களைப் பற்றிச் சொல்லியா தெரிய வேண்டும்.



சிவசுப்பிரமணியம் நேசராசா



சௌந்தரம்



சண்முகம் தில்லைநாதன்

சௌந்தரம் என்பவர் 1998ம் ஆண்டின் முற்பகுதியிலேயே ராசிக் குழுவில் சேர்ந்தவர். முறக்கொட்டாஞ்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், களுவன்கேணிக் கடற்கரையில் கரை வலை இழுத்தும், மீன் வியாபாரம் செய்தும் தொழில் செய்து வந்தார். இந்தக் காலகட்டத்தில் இவருக்கும் அப்பகுதியிலுள்ள பெண்ணொருவருக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பை அறிந்த மனைவி புலிகளுக் கூடாக இப்பிரச்சினையைத் தீர்க்க முயன்ற வேளையில், புலிகள் சௌந்தரத்தை வரவழைப்பதற்காகக் கடித மூலம் தொடர்பு கொண்டனர். ஆனால் சௌந்தரம் குறிப்பிட்ட தவணைகளுக்கெல்லாம் போகவில்லை. மூன்றாவது கடிதம் புலிகள் அனுப்பியதோடு சௌந்தரம் ராசிக்குழுவில் போய்ச் சேர்ந்து கொண்டார். அன்றிலிருந்து புலி என்ற வாசனையே பிடியாத ஒருவராயும் புலி வந்து போவதாகக் கூறப்படும் களுவன்கேணியையும் பிடியாதவராகி விட்டார். தற்போது சௌந்தரம் முறக்கொட்டாஞ்சேனை இராணுவத்துடன் சேர்ந்து நின்று செயற்பட்டு வருவது மட்டுமல்லாமல், கிண்ணையடி, வாழைச்சேனை இராணுவ முகாங்களுக்கும் சென்று பெரும் பணி செய்து வருவதாகச் சொல்லப்படுகின்றது.

இப்போது, கடந்த வாரத்தில் இரு இளைஞர்கள் திடீரெனக் காணாமற் போயும், பின்னர் அதில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுமுள்ளார். நடராசா செந்தூரன் (17) என்ற மாணவனே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவர் கடந்த நவ.18 அன்று காலையில் கிண்ணையடியில் உள்ள தனது வீட்டிலிருந்துகளுவன்கேணியிலுள்ள தமக்கையின் வீட்டுக்குச் செல்வதற்காக வந்த போதே சந்திவெளி பாலையடித்தோணா சந்தியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். களுவன்கேணிக்கு போக வந்தவர் எவ்வாறு பாலையடித்தோணா சந்தியில் வைத்து சுடப்பட்டார் என்பது தான் மர்மமாகவுள்ளது. இவரை சந்திவெளி முகாம் வரையுமே சிலர் கண்டுள்ளதாகவும் அதன்பின் காணவில்லையெனவும் கூறியிருக்கின்றனர். செந்தூரன் செப்.30 அன்று கிண்ணையடியில் வைத்துக் கைது செய்யப்பட்டு வாழைச்சேனை காகிதாலை முகாமில் பன்னிரெண்டு நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவரது உடலில் சிகரட் சூட்டுக் காயங்களும் காணப்பட்டன. ஆனால் இவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் இது குறிப்பிடப்படவில்லை. இது தொடர்பாக ஏறாவூர் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.சுகுமாரைக் கேட்ட போது மரணத்தின் முன் இச்சூட்டுக் காயங்கள் ஏற்பட்டதா அல்லது அதன் பின் வந்ததா என்பதைத் தன்னால் உறுதிப்படுத்த முடியாததால் அதனைக் குறிப்பிடவில்லையெனக் கூறினார். ஆனாலும் அந்த அறிக்கையில் இதைச் சொல்லுவதற்கு எந்தத் தடையும் அவருக்கு இல்லாத பட்சத்தில் அதைக் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அதைக் குறிப்பிடாதது ஏன்?

காணாமற் போன கொம்மாதுறையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் நேசராசா (22) என்பவர் இக்கட்டுரை எழுதும் வரைக்கும் எங்கிருக்கிறார், அவரை யார் கொண்டு போனார்கள் என்பது மர்மமாகவேயுள்ளது. இவர் நவ.12. அன்று முறக்கொட்டாஞ்சேனைக்கு தச்சுத் தொழிலுக்கு சென்று பின்னர் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது வேன் ஒன்றில் வந்தவர்கள் முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து அவரைப் பிடித்துச் சென்றதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

செப்.22 அன்று இரவு 9.00 மணியளவில் கொம்மாதுறை இராணுவத்தினர், கொம்மாதுறை உமாமில் வீதியிலுள்ள வீடொன்றுள் புகுந்து வீட்டிலிருந்த தகப்பனையும் மகனையும் பக்கத்திலுள்ள பாழடைந்த வீடொன்றுக்குள் கூட்டிக் கொண்டு வைத்து விட்டு சத்தம் போட்டால் புலி என்று அவர்களைச் சுடப்போவதாக மிரட்டி, தாயையும் மகளையும் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றிருக்கின்றார்கள். தாயும் மகளும் கொஞ்சம் மனத்தைரியமும் உடல் பலமுள்ளவர்களாதலால் நெஞ்சுச் சட்டையைக் கிழித்த இராணுவத்தினருடன் எதிர்த்து மல்லுக்கட்டி அதிலிருந்து தப்பி கூக்குரலிட்டுள்ளனர். அயலிலுள்ளவர்கள் வருவதற்கிடையில் இராணுவத்தினர் சென்று விட்டனர். அரிசி தொடக்கம் சட்டி முதல் பெட்டி வரை பொருட்களெல்லாம் சிதறிக் கிடந்ததாகவும் கண் மூடித் திறப்பதற்குள் ஒரு கலவரமொன்று நடந்து முடிந்தது போலிருந்ததென அயலிலுள்ள பெண்ணொருவர் குறிப்பிட்டார்.

இராணுவத்திரும், தேசிய துணைப் படையுமாகச் சேர்ந்து அப்பாவித் தமிழ் மக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் புலியென்ற போர்வையில் கொன்றொழிக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டிருப்பது இன்று நேற்றுத் தொடங்கிய விடயமல்ல. இவர்களின் அடாவடித்தனங்களையும், கண்மூடித்தனமான போக்குகளையும் கண்டிக்க வேண்டியவர்கள் கண்மூடித்தனமாக இருக்கின்றார்கள். வெளியுலகுக்கு இவற்றைக் கொண்டு வர வேண்டிய பத்திரிகைகளும், நமது ஒரு சில உள்ளூர் செய்தியாளர்களும் இராணுவத்தினரிடமும், அவர்களுக்கு சாமரம் வீசுபவர்களதும் வலைக்குள் சிக்குண்டு இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாது அடிமட்ட சமூகத்தில் வேலை செய்யும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இவற்றைப் பற்றி பொருட்படுத்தாதது மட்டுமல்லாமல், இன்று இந்த அரசும் இராணுவமும் மக்கள் மத்தியிலும், வெளிநாடுகளுக்கும் எதைச் செய்ய, சொல்ல விரும்புகின்றதோ அந்த வேலைகளை இந்த நிறுவனங்கள் குறைந்த செலவில் செய்து கொடுக்கின்றன.

உதாரணமாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன் மட்டக்களப்பு தாமரைக்கேணியில் இருபது வயதுடைய இளைஞன் ஒருவன் பதினேழு வயதுடைய பெண்ணை கத்தியால் குத்தியதற்காக 17 பெண்கள் அமைப்புக்களும் கிழக்கிலங்கை செய்தியாளர்களுமாகச் சேர்ந்து, "ஏன் மீண்டும் மீண்டும் இத்தகைய வன்முறைகள் நடைபெறுகின்றன?" என்ற சில கேள்விக் கணைகளுடன் வீதியில் வைத்து துண்டுப் பிரசுரம் கொடுத்தார்கள். உண்மையில் வரவேற்க வேண்டிய விடயம் அது. எங்களுடைய சமூகத்துள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் எவ்வளவு தூரம் புரையோடிப் போயிருக்கின்றன. அவற்றைக் களைய நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விகளை எழுப்பி விட அப்பிரசுரம் முயற்சி செய்தது.

"ஏன் மீண்டும் மீண்டும் இத்தகைய வன்முறைகள் நடைபெறுகின்றன?" என்கிற கேள்வியை துண்டுப் பிரசுரம் வெளியிட்ட அதே அமைப்புக்களுக்கும் சரி வேறெந்த அமைப்புகட்கும் சரி மட்டக்களப்பில் இன்று வரைக்கும் இராணுவத்தால் செய்யப்பட்டு வரும் கொலைகளும், பாலியல் வன்முறைகளும் கண்ணில் படவில்லை. அவையெல்லாம் நமது பெண்களின் உளவியலிலும் அவர்களுடைய வாழ்விலும், எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன? அவற்றுக்காக ஒரு துண்டுப் பிரசுரம் அல்லது வீதியில் இறங்கி ஒரு போராட்டம் நடாத்தினால் என்ன என்று ஏன் தோன்றவில்லை. அவ்வாறு போராட்டம் நடாத்தினால் புலிகள் என முத்திரை குத்தப்பட்டு விடுவோம் என்று இவர்கள் அஞ்சக் கூடும். இந்தக் காரணங்களால் படையினரால் அல்லது அரசாங்கத்தால் பிரச்சினை வராத விடயங்களில் தான் போராட்டம் நடாத்தலாம் என்றும் இங்கு அரசினுடைய அல்லது இராணுவத்தினுடைய பிரச்சினையென்று ஒன்றுமில்லை. சிவில் யுத்தமே நடக்கின்றது என்று அரசு சொல்கின்ற வேலையே அரச சார்பற்ற நிறுவனங்களூடாகச் செய்யப்பட்டு வருகின்றது. என்றும், இந்த வேலையைச் செய்வதற்கு கோடிக் கணக்கில் அரசாங்கம் செலவழிக்க வேண்டியிருக்க இன்று இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் குறைந்த செலவில் செய்து முடிக்கின்றன என்றும் விமர்சனங்கள் எழுகின்றன.

ஆக, மொத்தத்தில் இவர்களெல்லாம் அரசின் ஏஜெண்டுக்களாகவே மக்கள் மத்தியில் உலா வருகின்றார்கள். அப்படியானவர்கள் இவற்றைக் கவனிக்காமல் விடுவதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எழுகிற குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதிலைத் தான் சொல்வது?

⊖

நன்றி - நூலகத்திட்டம்



## மாவீரர் தின உரை:

# பிரபாகரன் சொல்லத்தவறிய செய்திகள்


மாவீரர் வாரத்து நிகழ்வுகள் வன்னியில் நிகழ்ந்து கொண்டிருக்கையில் கொழும்பில் பிரபாகரன் என்ன பேசப் போகிறார் என்ற ஆவலுடன் பி.பி.சிக்கு முன்னால் காவலிருந்தவர்கள் வெறும் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல: தொடர்பு சாதனவியலாளர்கள் மட்டுமல்ல, அரசியல் வாதிகளும் கூடத்தான் என்பது ஒரு சுவாரஸ்யமான விடயம்.

பிரபாகரன் சொல்லப் போவது என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு இவ்வளவு ஆர்வத்தை அவர்கள் காட்டியதற்கு காரணம் வெறும் விருப்பார்வம் மட்டுமல்ல, தமது அரசியல் இருப்புக்கான நியாயங்களை அது கேள்விக்குள்ளாக்கிவிடுமோ என்ற அச்சமும் தான் என்றால் அதுமிகையல்ல.

பிரபாகரன் முழுக்க முழுக்க சமாதானத்திற்கு சார்பாக, தனது உரையை நிகழ்த்தினால், தமது அடுத்த நகர்வாக அமைய வேண்டியது என்ன என்பதை தீர்மானிக்கிற அவசியமும் அவசரமும் அவர்களுக்கு.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கோவெனில், சமாதான சூழல் உருவாகுவதற்கான வாய்ப்பை பிரபாகரனின் பேச்சு திறந்து விடுமா என்ற ஆர்வம், தமது துன்பியல் வாழ்வுக்கும் நாளாந்த சுமைக்கும் விடிவு பிறப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்ற அங்கலாய்ப்பு என்பவை தான் அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் என்ற முறையில் பிரபாகரன் அவர்களின் பேச்சு நிதானமானதும், நியாயமானதும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டையும் ஸ்திரப்பாட்டையும் பலப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது. போரியல் ஞானத்திலும் செயற்பாட்டிலும் தமது சக்தி என்ன என்பதையும், எதிரிகளை வெற்றி கொள்ளுவதில் தமக்கிருக்கும் உறுதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதாக அவரது பேச்சு அமைந்திருந்தது. ஆயினும் மாவீரர் நினைவுகள் பற்றி பேசுகையில் ஒரு உணர்வு பூர்வமான மொழியையும், போரியல் வெற்றி பற்றி பேசுகையில் நம்பிக்கையூட்டும் தர்க்கங்கள் நிறைந்த மொழியையும், அரசியல் வரலாறு பற்றி பேசுகையில் தேர்ந்த அரசியல் வரலாற்றுப் பார்வையை வெளிப்படுத்தும் இறுக்கமான மொழியையும் அவர் செட்டிறுக்கமாக வெளிப்படுத்தும் கருத்துக்களில் காட்டும் முன் முயற்சித் தன்மையை சமாதானம் பற்றிய பகுதியில் காட்டவில்லை என்றே தோன்றுகிறது. 'சமாதானத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல' என்ற நிலைப்பாட்டில் உள்ள வெளிப்பாடு சமாதானத்தில் அவர் முன் முயற்சி அத்துணை தீவிரமாக இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.



உண்மை, சமாதான முயற்சிக்கான சமிக்ஞையை அவர் போன தடவையும் இம்முறை மாவீரர் தினத்திற்கு முன்பாகவே சொல்ஹெய்ம் ஊடாகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார்: அரசியல் ரீதியாக தமது மக்களின் அபிலாசைகள் பற்றி அவர் பல தடவை வலியுறுத்தியிருக்கிறார்: சமாதானம் என்பது எப்படி உருவாக முடியும் என்பதற்கு அடிப்படையான ஒரு விடயத்தை தெளிவுபடுத்தியும் இருக்கிறார். ஆனால், சமாதானத்தை காண்பதற்கு நாம் என்ன செய்வோம், சிங்களப் பேரினவாதிகளை வெல்வதற்கு, சமாதானம் மீது நாட்டம் கொண்டுள்ள மக்களுக்கும், அரசியல் ஜனநாயக சக்திகளுக்கும் தமது நிலையில் தான் என்ன முன்னெடுப்புக்களைச் செய்யவுள்ளோம் என்று குறிப்பிடவில்லை. சந்திரிகா அரசாங்கம் வரலாறு தொடர்பான தவறான புரிதல்களில் நின்றபடி பிரச்சினையை அணுக முயற்சிப்பதை கண்டிக்கும் அவர், சிங்கள இனவாதம் எப்படி தமிழ் மக்களது ஜனநாயக உரிமைக் கோரிக்கைகளை பலவீனப்படுத்த முயல்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அவற்றை உடைக்க ஒரு விடுதலை இயக்க தலைவர் என்ற முறையில் எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லவில்லை.

சிங்கள மக்கள் மீதான, சிங்கள வணக்கத் தலங்கள் மீதான தாக்குதல்கள், தாக்குதல்கள் ஏற்படுத்திய வடுக்கள், அவநம்பிக்கைகளைத் துடைப்பதற்கு அவர் முயலவில்லை. தமது விடுதலை இயக்கம் அதன் நடவடிக்கைப் போக்கில் செய்த, பிரதிகூலமான விளைவுகளை அந்தச் செயல்களை தாம் புரிந்து கொண்டுள்ளதாக, அவற்றை தவிர்த்து மேலும் ஆரோக்கியமான பாதையில் வளரவிருப்பதாக தெரியப்படுத்தவில்லை.

இலங்கை அரசாங்கம் பற்றியும், இனவாதிகள் பற்றியும், யுத்த நடவடிக்கைக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தின் அளவு பற்றியும் அவர் குறிப்பிட்டவை நூற்றுக்கு நூற்றுத் தொண்ணூறு வீதம் உண்மையானவை. கடந்தகால ஒப்பந்தங்கள், சமாதான முயற்சிகள் பற்றியும் அவற்றின் தோல்வி பற்றியும் அவர் சொன்னவைகள் அனைத்தும் அவ்வாறே. ஆனால், சிங்கள இனவாதத்தைக் குறிவைத்துத் தாக்கியிருக்கும் பிரபாகரன் அவர்கள், இனவாதத்தை உடைத்து அதிலிருந்து சமாதானத்தை விரும்புகிற சிங்கள மக்களை எவ்வாறு பிரித்தெடுப்பது என்ற விடயத்தில் தன் கவனத்தைக் குவிக்கவில்லை. சிங்கள இனவாதிகளிடமிருந்து சிங்கள மக்களைப் பிரிக்க அவர் முயற்சி எடுக்காததற்கு, 'தமிழீழம்' என்ற தீர்வு தான் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்ற அவரது உறுதியான நிலைப்பாடு காரணமாக இருக்கலாம். ஆனால், அதுதான் ஒரே வழியானாலும் கூட, சிங்கள மக்களிடமிருந்து இனவாதிகளைப் பிரிக்கிற முயற்சி அவசியமானதுதான். இம்முயற்சியில் அவர் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். கடந்த ஆண்டு உரையில் இந்தக் கவனம் ஓரளவு இருந்தது. ஆனால், இம்முறை அதைக் காணவில்லை

“
இலங்கை அரசாங்கம் பற்றியும், இனவாதிகள் பற்றியும், யுத்த நடவடிக்கைக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தின் அளவு பற்றியும் அவர் குறிப்பிட்டவை நூற்றுக்கு நூற்றுத் தொண்ணூறு வீதம் உண்மையானவை. கடந்தகால ஒப்பந்தங்கள், சமாதான முயற்சிகள் பற்றியும் அவற்றின் தோல்வி பற்றியும் அவர் சொன்னவைகள் அனைத்தும் அவ்வாறே. ஆனால், சிங்கள இனவாதத்தை குறிவைத்து தாக்கியிருக்கும் பிரபாகரன் அவர்கள், இனவாதத்தை உடைத்து அதிலிருந்து சமாதானத்தை விரும்புகிற சிங்கள மக்களை எவ்வாறு பிரித்தெடுப்பது என்ற விடயத்தில் தன் கவனத்தைக் குவிக்கவில்லை.
”

ஆனால், அரசாங்கம், தமிழ் அரசியல்வாதிகள், ஜனநாயக சக்திகள் உள்ளிட்ட அனைத்து மக்களிடமிருந்தும் புலிகளைத் தனிமைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. தனிநபர் கொலை, மக்கள் மீதான தாக்குதல், வணக்கத் தலங்கள் மீதான தாக்குதல், முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் போன்ற செயல்களை அவற்றைத் தாமும் செய்த போதும் புலிகள் செய்கிறார்கள் என்ற பிரசாரத்தை அது பரவலாகச் செய்து வருகிறது. இம்முயற்சியில் அது கணிசமான வெற்றியையும் பெற்றிருக்கிறது. உலக நாடுகளிடமிருந்து இலங்கை அரசை தனிமைப்படுத்துவதன் அவசியத்தை விளங்கிக் கொண்டு தனது உரையில் குறிப்பிட்ட பிரபாகரன், தமது பலவீனமான பக்கத்தை இல்லாதொழிக்க, அதையும் பலமாக மாற்ற தாம் என்ன செய்யவுள்ளோம் என்று குறிப்பிடாதது துரதிர்ஷ்டமே. இது சமாதான முயற்சியில் உண்மையான முன்முயற்சியை புலிகள் எடுக்கிறார்கள் என்று நிலைநாட்ட அவசியமான ஒரு விடயமாக உள்ளதை நாம் மறுக்க முடியாது.

உண்மையில், விடுதலைப் புலிகள் சமாதானத்துக்குத் தயார் என்ற ஒரு செய்தி மட்டுமல்ல, அதற்கு மேலேயும் அவர்கள் போகவேண்டும். அதற்காக அவர்கள் செயற்பட வேண்டும்: அரசாங்கத்தை அதை நோக்கி அரசியல் ரீதியான நெருக்கடிகளை அரசுக்கெதிராக குவிமையப்படுத்த முயலவேண்டும். புலிகளின் ஆயுதபலமும், தமிழ் மக்களின் ஆயுதபலமும், அரசின் இனவாத நிலைப்பாடும் மட்டுமே தமிழீழத்தையோ, தமிழ் மக்களின் அரசியல் விடுதலையையோ பெற்றுவிடப் போதுமானவை அல்ல. மக்களின் அணிசேர்க்கையும், அரசு அரசியல் ரீதியாக தனிமைப்படலும் கூட இதற்கு அவசியமாகும்.

இதை மாவீரர் தின பேச்சு செய்யவில்லை.

ஆனால், அதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை.

இனியும் செய்யலாம். செய்ய வேண்டும்.

இவ்வாறு முன்பும் ஒருமுறை இதே பத்தியில் எழுதியிருந்தேன். மீண்டும் அதை ஞாபகப்படுத்தி இதை எழுதுகிறேன்:

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் மட்டுமல்ல சிங்கள மக்களும் இப்பிரச்சினையில் நியாயத்தின் பக்கம் நிற்க வைக்க இவை அவசியமானவை.

விடுதலை இயக்கங்கள் தவறிழைப்பது பெரிதல்ல: அவற்றிலிருந்து விடுபட்டு முன்னேறிச் செல்லத் தயாராக இருக்கும்வரை. இந்த தயார் நிலை நம்பகத்தன்மையையும் மாபெரும் சக்தியின் ஆதரவையும் அதற்குப் பெற்றுத்தரும்.

இதை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சிந்திக்க வேண்டும். தமிழ் தேசியத்தின் தலைமைத்துவத்தினை அரசியல் ரீதியாகவும் முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு இது மிக மிக அவசியம்.

சமாதானம், விடுதலை எல்லாம் இந்த வழியில் தான் வெற்றி பெறும்!


நாசமறுப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



## எமது பத்திரிகை உலக அனுபவங்கள் - 8

# சி.பி.ஐ.நடராஜனும் பக்காத் திருடனும்!



ஐக்கிங் மணியம் பல போராட்டங்களுக்கு தலைமை தாங்கி நடத்தினார். சங்கானை நிற்சாமம் பகுதியில் சாதிப் பிரச்சினை தலை தூக்கி நின்ற சமயத்தில் மணியம் மட்டுமே அங்கு ஒடுக்கப் பட்டவர்களுக்காகப் போராட்டங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தார். உயர் சாதியினரும் சரி ஒடுக்கப்பட்டவர்களுக்கும் சரி நிற்சாமம் பகுதிக்கு சுதந்திரமாகச் சென்று வருவதற்கு அஞ்சிய கால கட்டமும் இருந்தது.

இந்தப் பகுதிக்கு மணியம் என்னையும் ஒரு நாள் கூட்டிச் சென்றார். ஒடுக்கப்பட்ட மக்கள் மீது நடந்த தாக்குதல்களில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் சிலவற்றுக்கும் அவர் கூட்டிச் சென்றார். அங்கு எல்லோர் முகத்திலும் பீதி குடிகொண்டிருப்பதைக் கண்டு ஆறுதல் கூறிய மணியம் அவர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கும் என்றும் சொல்லியிருந்தார். வீதிகளில் மக்கள் நடமாடுவதற்கு அஞ்சினர் மக்கள் நடமாட்டமே அரிது.

அன்று மாலையாகி விட்டது. மணியத்திற்கும் மணியம் நடத்திய போராட்டங்களுக்கும் உறு துணையாக இருந்த நல்லப்பன் என்பவர் வீட்டில் இரவு சாப்பாடு சாப்பிட்டு விட்டு உறங்கினோம். சில நாட்களின் பின் நல்லப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார். மணியம் அடைந்த கவலை சொல்ல முடியாதது.

இந்தப் போராட்டங்கள் தொடர்பாக மணியத்தை கைது செய்வதற்கு பொலிஸார் தேடித் திரிந்தனர். மணியம் தலைமறைவாகி விட்டார். திடீர் என ஒரு நாள் ஒரு தோழர் மூலம் மணியம் தன்னை வந்து சந்திக்கும்படியும் சந்திக்க வேண்டிய இடத்தையும் சொல்லி அனுப்பியிருந்தார். எவருக்கும் தெரியாமல் மணியத்தை சந்திக்கச் சென்றேன்.

கடைகள் கட்டிடங்கள் உள்ள பகுதியில் கழிவு நீர் ஓடும் இடத்துக்குப் பின்புறமுள்ள சிறிய வெளியில் கைகளைப் பின்புறம் கட்டிக் கொண்டு ஆழ்ந்த சிந்தனைகளுடன் நடந்து கொண்டிருந்தார். சிந்தனையும் சரியான உணவில்லாமலும் உறக்கமில்லாமலும் மெலிந்திருந்தார். அவருடன் பேசிக் கொண்டிருந்து விட்டு நான் புறப்படுகையில் இங்கு இருக்கும் வரை மதியம் உணவு கொண்டு வந்து தருகிறேன் என்று சொன்னேன் வீட்டிலும் இதை மனைவியிடம் சொன்னதும் உணவு சமைத்துக் கொடுக்கச் சம்மதித்தாள். சில தினங்கள் நானே மணியத்துக்கு மதிய உணவு கொண்டு போய் கொடுத்து வந்தேன். எவரும் இதை அறிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் மணியம் இடத்தை மாற்றிக் கொண்டார். வெளியூருக்குப் போய் விட்டார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நடராஜன் என்றொருவர் கடமையாற்றி வந்தார். சி.ஐ.டி.நடராசன் என்றே இவரைத் தெரிந்தவர்கள் அழைத்துக் கொள்வர். ஒரு பக்காத் திருடனைக் கண்டு பிடிப்பதற்காக நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலுக்கு முன்பிருந்த சொக்கர் கடையில் சில வாரங்கள் பணியாளாக இருந்து தோசை, வடை சுட்டுத் திருடனைப் பிடித்தவர் இந்த சி.ஐ.டி. நடராசன்.

மணியத்துக்கு ஒரு சமயம் நெஞ்சு வலி வந்தது. யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவ மனையில் 14 ஆம் வாட்டில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரைப் பார்ப்பதற்காக பலரும் நண்பகலிலும் மாலையிலும் வந்து சென்றார்கள். நானும் ஒருநாள் போனேன். மணியத்துடன் பேசிக் கொண்டிருந்தேன். எனது கட்டிலிலிருந்த 5 ஆவது கட்டிலில் நமது நண்பரும் வந்து படுத்திருக்கின்றார் . பார்க்கவில்லையா என்று மணியம் கேட்டார். கட்டிலில் படுத்திருந்தவர் சி.ஐ.டி. நடராசன். மணியத்திடம் யார் யார் வருகின்றார்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் எனப்

> ஒரு பக்காத் திருடனைக் கண்டு பிடிப்பதற்காக நல்லூர் கைலாய பிள்ளையார் கோவிலுக்கு முன்பிருந்த சொக்கர் கடையில் சில வாரங்கள் பணியாளாக இருந்து தோசை, வடை சுட்டுத் திருடனைப் பிடித்தவர் இந்த சி.ஐ.டி. நடராசன்.

பார்ப்பதற்காகவே நடராஜன் நோயாளியாக அங்கு வந்து படுத்திருந்திருந்தார். அனுபவ சாலியான மணியத்துக்கு இது தெரியாதா?

நடராஜனிடம் போய் சுகம் விசாரித்தேன். நெஞ்சு வலி என்று சொல்லி விட்டு மச்சான் இங்கு சும்மா கிடக்கிறது பெரிய கஷ்டம். கால் போத்தல் இரகசியமாக வாங்கிக் கொண்டு வந்து உதவி செய்ய மாட்டாயா? என்று கேட்டார். உனக்கு நெஞ்சு வலிக்கு சாராயம் கூடாது என்று சொல்லி விட்டு நான் நழுவிவிட்டேன் .

இதன் பின்னர் ஒரு நாள் எஸ்.பி.சுந்தரலிங்கம் தொலைபேசியில் என்னை அழைத்து மணியத்துக்கும் எனக்குமுள்ள நட்புறவை வைத்து சி.ஐ.டி. அறிக்கை ஒன்று தமக்கு வந்திருப்பதாகவும் அதை சமர்ப்பித்தவரைக் கூப்பிட்டு கோபாலரத்தினம் ஒரு பத்திரிகையாளர். அவர் அரசியல்வாதிகள், தொழிற் சங்கவாதிகள் என்று பலரோடும் பழகுவார். அவரைப் பற்றி அறிக்கை தயாரித்து நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று பேசி அதைக் கிழித்துப் போட்டு விட்டேன் என்று சொல்லிச் சிரித்தார்.

என்றாலும் மிஸ்டர் கோபாலரத்னம் உங்கள் நண்பராக இருந்தாலும் பிரச்சினைக்குரிய அவருடன் கண்டபடி நெருங்கித் திரிவதை கொஞ்சம் குறைத்துக் கொள்வது நல்லது என்று எஸ்.பி ஆலோசனை சொன்னார்.

பாராளுமன்றத்தில் முக்கிய விவாதங்கள் நடைபெறும் போது நான் சென்று விவாதங்களை கவனித்து விமர்சனம் கலந்த செய்தித் தொகுப்பு எழுதி யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் பயணம் செய்யும் எனக்குத் தெரிந்தவர்களிடம் கொடுத்தனுப்புவேன். மற்றும் செய்திகளை இரவே தொலைபேசியில் கொடுத்தனுப்புவேன். தமிழ் எம்.பிக்கள் சபையில் பேசியதை வைத்து எழுதியதை அதே எம்.பியிடம் கொடுத்தும் அனுப்பியிருக்கிறேன்.


ஒரு நாள் மாலை அவசர அவசரமாக சபைத் தொகுப்பை எடுத்துக் கொண்டு கோட்டை ரயில் நிலையத்துக்கு மெயில் ரயிலில் புறப்படும் முன் போய்ச் சேர வேண்டும் என்று வந்தேன். ரயில் நிலைய வாசலில் மணியத்தைக் கண்டதும் கடிதத்தை யாரிடமாவது கொடுத்தனுப்ப வேண்டும் என்று சொல்லி மணியத்தையும் கூட்டிக் கொண்டு நிலையத்திலுள்ள முதல் பிளாட்பாரத்துக்குள் மெயில் ரயிலை நோக்கிப் போனோம்.

முதல் வகுப்பு படுக்கை வசதியுடைய ரயில் பெட்டி முன் நின்றிருந்த எஸ்.பி.சுந்தரலிங்கம் என்ன மிஸ்டர் கோபாலரத்னம் இங்கேயும் செய்திக்கா? என்று கேட்டு விட்டு என்ன மணியம் எப்படி என்று கேட்டார். எங்கள் இருவருக்கும் சிரிப்புத்தான் வந்தது. பின்னர் எஸ்.பி.யிடமே ஈழநாடு ஆசிரியர் என்று எழுதப்பட்ட செய்திக் கடிதத்தைக் கொடுத்தனுப்பினேன்.

# கடற்படை சுட்ட அப்பாவி இளைஞர்களும் ஆடுகளும்

**- விவேகி**


புலி பிடிக்கப் பதுங்கியிருந்த கடற்படையினர், புலி பிடிக்க முடியாத நிலையில் மூன்று ஆடுகளையும், நான்கு அப்பாவி இளைஞர்களையும் சுட்டுக் கொன்றனர். நான்கு வயதுக் குழந்தை ஒன்றையும் இளைஞன் ஒருவரையும் சுட்டுக் காயப்படுத்தினர்.



ஜேம்ஸ் ஜெயப் பிரதாப்

இந்தச் சம்பவம் நவம்பர் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நிலாவெளியில் கோபாலபுரம் என்ற கிராமத்தில் நடந்திருக்கிறது. திருகோணமலையிலிருந்து வடபுறம் நோக்கிச் செல்லும் பாதையில் 10வது மைலில் கோபாலபுரம் அமைந்துள்ளது. இக்கிராமத்தவர்களில் பிரதான தொழில் பயிர்ச் செய்கையும் மீன்பிடியும் தான். வழமை போல மீன்பிடிக்கச் சென்ற இளைஞர்களே மிருகத்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள.

இறந்த இளைஞர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜீவானந்தம் பிரசாந்தன் (18), விஜயராசா ஜெயகாந்தன் (18) இருவரும் உடன் பிறந்த சகோதரிகளின் பிள்ளைகள். பிரசாந்தன் மூன்று குழந்தைகள் உள்ள குடும்பத்தில் முதற்பிள்ளை. ஜெயகாந்தனின் குடும்பத்தில் ஆறு பிள்ளைகள். இவர் மூன்றாவது பிள்ளை. சின்னராசா விஜயகுமார் (21) இவர்களின் சகோதரியின் கணவர். ஒரு பிள்ளைக்குத் தந்தை.



ஜீவானந்தம் பிரசாந்தன்

இவர்களுடன் கூடச் சென்ற இன்னொருவர் பெயர் ஜேம்ஸ் ஜெயப் பிரதாப். இவர் கோபாலபுரம் பாடசாலை மாணவர் (15).

இவர்கள் நால்வரும் வழமை போல அன்றும் கோபாலபுரம் உப்பு நீர் ஏரியில் மீன்பிடிப்பதற்காகச் சென்று கொண்டிருந்த போதே இத்துயர சம்பவம் நடந்திருக்கிறது.

மாலை சுமார் 6.30 மணியளவில் இவர்கள் சென்றிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் வருவார்கள் என்று பதுங்கு நிலையிலிருந்த கடற்படையினர் என்ன ஏது என்று கேட்காமலேயே சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். வலையும் கையுமாகப் போன இளைஞர்கள் அந்த இடத்திலேயே விழுந்து செத்தார்கள்.

ஊரவர்களுக்கு இந்த வெடிச்சத்தங்கள் காதில் விழுந்தன. நூற்றுக் கணக்கான வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டதால், விடுதலைப் புலிகளும் படையினரும் மோதிக்கொள்கிறார்கள் என்றே முடிவு கட்டியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அகோரமாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சம்பவத்தின் போது மூன்று ஆடுகள் சூடுபட்டு இறந்தன. தென்னை மரத்தின் கீழ் விளையாடிக் கொண்டிருந்த விஜயநாதன் அருண்குமார் (4) என்ற குழந்தையும் தெருவில் சென்று கொண்டிருந்த தினேஷ்குமார் (17) என்ற இளைஞனும் துப்பாக்கி வேட்டுக்களால் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

புதன்கிழமை காலையில் தான் இளைஞர்கள் சுடப்பட்ட விஷயம் ஊர் மக்களுக்குத் தெரிய வந்தது. ஒவ்வொரு உடலிலும் சரமாரியாகக் குண்டுகள் பொழியப்பட்டிருந்தன. உடற்பாகங்கள் குண்டு துளைப்பால் சிதைவடைந்து போய்க்கிடந்தன. இரவு முழுவதும் பெய்த மழையால் உடல்கள் விறைத்துப் போய்ப் பரிதாபகரமாகக் கிடந்தன.

இந்தக் கோரக் கொலையால் ஆத்திரமடைந்த கோபாலபுரம் கிராமமக்கள் ஒன்று திரண்டு, அடாத்தான கொலையைக் கண்டித்துக் கோஷங்கள் எழுப்பிய வண்ணம் திருகோணமலை குச்சவெளி பிரதான பாதையில் மறியல் போராட்டமொன்றை ஆரம்பித்தனர். காலை 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இடம் பெற்ற இப்போராட்டத்தினால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

பொலிஸார் உடனடியாக சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பொலிஸாரின் விவேகமும் பொறுமையான செயற்பாடும் தான் ஊர்மக்களின் கொந்தளிப்பை ஓரளவு கட்டுப்படுத்தி வைத்திருந்தன என்று கூறலாம்.

பதில் நீதிவான் மு.கோ.செல்வராசா பிற்பகல் வந்து சடலங்களை நேரில் பார்வையிட்டு விசாரணை செய்து உரியவர்களிடம் ஒப்படைக்க உத்தவிட்டார். அத்துடன் படைத் தரப்பாரால் கூட்டிச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவரையும் உடனடியாக விடுவிக்கப் பதில் நீதிவான் நடவடிக்கை எடுத்தார்.

நன்றி - நூலகத்திட்டம்



# நாம் ஏன் உண்ணாவிரதம் இருந்தோம்?

### பெண் போராளிகளின் பங்களிப்பு

இவ்வாறு எமது கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி உட்கட்சிப் போராட்டத்தினை நடத்தியோர் ஆண்கள் பதின்மூன்று பேர் மட்டுந் தான். இந்த நிலையில் பெண்கள் குழுவில் இருந்த நாற்பதுக்கு மேற்பட்டவர்களில் முப்பதுக்கு மேற்பட்டவர்கள் வேறு வீடுகளில் எமக்குச் சார்பாக எம்முடன் இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களுடைய போராட்டங்கூட எமக்கு உயிர்ப்பாதுகாப்பு அளித்தது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் ஆரம்பத்தில் சுதா, ரமேஸ் போன்றவர்களின் நடவடிக்கைகளுக்காக சிறி சபாரெத்தினம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக சில கேள்விகளைக் கேட்டு அவர்களுடைய பதில்களைப் பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பின்னர் அவர்களுடைய பயமுறுத்தல்கள், எச்சரிக்கைகள் போன்றவற்றின் மூலம் அடுத்த கட்டத்தினை அடைந்தது. பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும். சுதா, ரமேஸ் ஆகியோர்களை உயிருடன் காட்ட வேண்டும். அவர்களுடைய நடவடிக்கைகள் சம்பந்தமாக உட்கட்சி விசாரணைகள் இல்லையேல் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். எம்மீது ரெலோவின் பல குழுத் தலைவர்கள் நடந்து கொண்ட முறை சம்பந்தமான விசாரணை என்றெல்லாம் வளர்ந்து கொண்டே போனது. நாம் இப்போதும் ரெலோ உறுப்பினர்களே. இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் தான் நாம் மீண்டும் இயங்குவோம் என்ற அடிப்படையில் ஒரு மாதத் தவணையைத் தலைமைக்குக் கொடுத்தோம். அந்த ஒரு மாதத்தில் கூட தலைவர் எம்மைச் சந்தித்துப் பேசத் தயாரில்லை. ஆனால் அவர்கள் எமக்குரிய படிப்பணத்தினை (சாப்பாட்டுச் செலவுகளை) அனுப்பிக் கொண்டே இருந்தனர். அதே நேரம் எம்மைப் போல இருந்த பெண்களைப் பயமுறுத்தத் தொடங்கினர். இதன் விளைவாக அவர்களை எமது இருப்பிடத்துக்கு அழைத்துப் பாதுகாப்பு கொடுத்தோம் என்றும் சொல்லலாம். அல்லது அவர்கள் எமக்குப் பாதுகாப்புத் தந்தார்கள் என்றும் கூறலாம்.

தீர்வுகள் எதுவும் வைக்காமல் மேலும் மேலும் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே போயின. இதனால் அவர்களின் பிரதேசத்துக்குள் இருப்பது மேலும் மேலும் பிரச்சனைகளை வளர்த்து விடும் என்று நினைத்ததால் நாம் வேறு இடத்துக்கு மாறினோம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி எத்தகைய போராட்டத்தினை நடத்துவது என்று தீர்மானித்தோம். சொந்த உறுப்பினர்களுக்கே கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையை இந்த இயக்கத்திற்காக நாட்டில் வேலை செய்பவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். ஏனெனில் இவர்கள் நாட்டில் சொன்னது போல் இங்கு அமைப்பு இருக்கவில்லை. பல தொகுதிப் பொறுப்பாளர்களும் உடனடியாகத் தமிழ் நாடு வந்தார்கள். எமக்கும் தலைமைப் பீடத்திற்கும் இடையில் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டனர்.

### திருடன் பொறுப்பாளனாகிய அங்கதச் சுவை

நாட்டிலிருந்து வந்த தொகுதிப் பொறுப்பாளர்கள் எம்மை வந்து சந்தித்த பின் ரெலோவுடன் இருக்கும் மற்றைய அரசியல் பிரிவினரைச் சந்தித்தனர். இருநூறு பேர் அளவில் உள்ள அரசியல் பிரிவில் பதின்மூன்று ஆண்களும் முப்பது பெண்களுமாக இருந்தவர்களாகிய எம் பிரச்சினையைத் தீர்த்த பின் தான் ரெலோவுடன் மீண்டும் வேலை செய்யலாம் என்ற நிலையில் இருந்தோம். இந்த நிலையில் ரெலோவுடன் உள்ளவர்களைச் சந்திக்கச் சென்ற பொறுப்பாளர்களில் ஒருவர் மிகவும் கவலைப் பட்டவராகத் திரும்பி வந்தார். ஏன் என்று கேட்ட போது அவர் கூறிய செய்திகள் எம்மைத் திடுக்கிட வைத்தது. தனது தொகுதியில் திருடன் என்று குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை ரெலோவிடம் தண்டனை கொடுக்கும்படி அனுப்பப்பட்ட ஒருவரை, தான் தன் இருப்பிடத்தில் வைத்திருந்ததாகவும் அவரை மனோ மாஸ்ரர் சும்மா நாம் விரும்பியபடி ஒருவருக்குத் தண்டனை கொடுக்க முடியாது என்றும் விடுதலை செய்யும்படி கூறியதாகவும் அந்த நபரை தனது இருப்பிடத்தில் வைத்திருந்தபடியால் அவரை விடுதலை செய்வது தனது இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்து விடும் என்றபடியால் இந்தியா செல்லும் வள்ளத்தில் ஏற்றி அனுப்பியதாகவும் அந்த நபரை இந்தியா சென்றவுடன் தனியாக விட்டு விடச் சொல்லியும் அந்த நபரைப் பற்றிய தகவலைக் கொடுத்து அனுப்பியதாகவும் கூறினார். இங்கு வந்து பார்த்தால் அதே நபர் அரசியல் பிரிவில் உள்ளார் என்றும் கலந்து கொண்டனர்.

இந்த உண்ணாவிரதம் சென்னை மரீனா கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு அருகில் நடைபெற்றது. இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை எடுத்துக் கொண்டோம். ஒரு சிலருக்கு அங்குள்ள கட்சித் தலைவர்களைச் சந்திப்பது -எம்.ஜி.ஆர், கருணாநிதி போன்றவர்கள். ஒரு சிலருக்கு நாம் ஏன் உண்ணாவிரதம் இருக்கின்றோம். எங்கு இருக்கின்றோம். எமது பாதுகாப்பற்ற நிலைக்கு பாதுகாப்பும் எமது போராட்டத்திற்கு ஆதரவு தருமாறும் பிரசுரங்களை விநியோகிப்பது மற்றும் உண்ணாவிரதம் நடைபெறும் இடத்தில் வருபவர்களுக்கு விளக்கம் அளிப்பதும் போன்றவையாகும். உண்ணாவிரதம்



தலைமைக்காக தன்னிடம் கேள்வி கேட்டுத் தன்னுடன் பிரச்சினைப்பட்டதாகவும் அவரை அங்கு பார்த்தவுடன் தான் குழம்பியதாகவும் சொன்னார்.

### மரினா கடற்கரையில் சாகும் வரை உண்ணாவிரதமும்

நடைபெறுவதை ஒட்டி சுமார் ஆறு வகையான பிரசுரங்கள் பிரசுரிக்கப்பட்டன. அவற்றின் சாரம்சம் நாம் யார் என்பதும் ஏன் உண்ணாவிரதம் இருக்கிறோம் என்பதும் தான். எல்லாப் பிரசுரங்களிலும்' உண்ணாவிரதம் நடைபெறும் இடம் மட்டும் பொதுவானதாக இருந்தது. ஆனால் அவற்றின் கருத்துக்களின் உள்ளடக்கத்தில் பெரிய முரண்பாடுகள் இருந்தன. சிறி சபாரெத்தினம், சந்திரஹாசன் ஆகியோரின் கூட்டுவேலையே இந்த சுதன், ரமேஸ் போன்றவர்களின் கைது என்பது போல ஒன்றும் மற்றொன்று சந்திரஹாசன் ஒரு சி.ஐ.ஏ. உளவாளி என்றும் இன்னொன்று ரெலோவின் தலைமை இந்தியாவின் விசுவாசிகளாகவும் தமிழ் ஈழ மக்களின் விடுதலையை விட்டு இங்கு ஏசி கார்களில் வலம் வருகிறார்கள் என்றும் ஆக இருந்தன.

## ஒரு தமிழீழப் போராளியின் கதை -09

### எம்.ஜி.ஆர் தலையீடும்

எமது பிரச்சினைகளைத் தலைமைப்பீடம் தீர்ப்பதற்கு முன்வராததால் அவர்களில் பலர் எம்முடன் வந்து சேர்ந்தனர். இதன் பலனாக நாம் மேலும் பலம் பெற்றவர்களாக மாறினோம். அடுத்த கட்டப் போராட்டமாக சுதன், ரமேஸ் சம்பந்தமாகவும் பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் அற்ற தன்மைகளையும் கண்டித்துச் சாகும் வரை உண்ணாவிரதம் செய்வது, தமிழ் நாட்டு மக்களிடையே இப்பிரச்சினைகளை எடுத்துச் சொல்வது என்ற நிலைக்கு வந்ததும், எமக்குள் அடுத்த பிரச்சினை வந்தது. யார் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பது என்பது தான் அது. எல்லாருமே தாம் இருக்க விரும்புவதாகவும் தமக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்றும் கூறினர். எனவே பிரதேசவாரியாக இரண்டு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் இரண்டு வட மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் என்ற அடிப்படையில் ஆரம்பிப்பது என்று முடிவானது. இதன் முடிவுகளை எதிர்பார்த்து மறுநாள் ஐந்து பெண்களும் போராட்டத்தில்

> “சொந்த உறுப்பினர்களுக்கே கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையை இந்த இயக்கத்திற்காக நாட்டில் வேலை செய்பவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். ஏனெனில் இவர்கள் நாட்டில் சொன்னது போல் இங்கு அமைப்பு இருக்கவில்லை. பல தொகுதிப் பொறுப்பாளர்களும் உடனடியாகத் தமிழ் நாடு வந்தார்கள். எமக்கும் தலைமைப் பீடத்திற்கும் இடையில் சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டனர்.”

மற்றைய இயக்கங்கள் இந்த நேரத்தில் எமக்குத் தேவையான சில உதவிகளைச் செய்தனர். ஆனால் எமது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க விரும்பவில்லை. மாறாக வளர்த்து விடவே விரும்பினர். இந்த நிலையில் தான் தமிழ் நாடு கியு பிரிவு (Q Branch) பொலிஸ் எங்கள் நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தொடங்கினர். இந்த நேரத்தில் றோ (Raw) அதிகாரிகள் வந்து எமது உண்ணாவிரதத்தினைப் பார்த்துவிட்டுச் சென்றனர். எம் குழுவின் மீது பலத்த கண்காணிப்புடனும் அவதானத்துடனும் எமக்குப் பாதுகாப்புத் தருவதற்கான வேலைகளில் ஈடுபடத் தொடங்கினர். மூன்று நாட்களுக்குப் பின் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மிகவும் சோர்வுற்ற நிலைக்கு வந்த பின்னர் தான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உடனடியாக சுதா, ரமேசை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் எம்மை உண்ணாவிரதத்தினை முடிக்குமாறும் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க எமது சாகும் வரை உண்ணவிரதத்தை ஜனார்த்தனன் பழரசம் கொடுத்து முடித்து வைத்தார்.

### சுதன்; ரமேஸ் விடுதலையும் புலிகளின் ஆயுதங்களும்

சுமார் இரு நாட்களின் பின்னர் சுதா, ரமேஸ் போன்றவர்களை ரெலோவின் வீட்டிற்குள் புகுந்து மீட்டெடுத்தனர். இந்த நேரத்தில் தான் நாம் அடுத்த கட்டமாக என்ன செய்வது? எப்போ நாட்டுக்குப் போவது? எமக்குச் சாப்பிடுவதற்கே கஸ்டமான நிலையில் பொருளாதார வசதிகளை எப்படி ஏற்படுத்துவது? என்றெல்லாம் பல பிரச்சினைகள் எமக்குள் இருந்ததால் அவற்றைத் தீர்ப்பதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். இந்த நேரத்தில் சிலர் வெளியேறி ஒதுங்கப் போவதாகக் கூறினார்கள். விசேசமாக வெளியேறி ஒதுங்கப் போவதாகக் கூறும் தோழர்களுக்கு உயிர் பாதுகாப்பு என்பது மிகவும் பிரச்சினைக்குரியதொன்றென்றாலும் அந்த நிலைக்கு தள்ளப்பட்டதற்கு ரெலோ முக்கிய காரணமாகும்.

விடுதலையாக்கப்பட்ட சுதா, ரமேஸ் போன்றவர்களைச் சந்தித்து நடந்த சம்பவங்களை விளக்குமாறு கேட்டோம். அவர்கள் தாம் புலிகளின் வலைக்குள் விழுந்து விட்டதாகவும் புலிகளிடம் ஆயுதம் வாங்கி ரெலோத் தலைவரைக் கடத்திக் கொண்டு போய் மத்திய குழு அமைப்பது தொடர்பாக முடிவு செய்தவுடன் தாம் அவரை விட்டு விடுவதாக நினைத்திருந்தோம், ஏமாற்றப் பட்டோம் எனக் கூறினர். நாம் கேட்ட கேள்வி: ஏன் உங்களிடம் ஆயுதம் இல்லையா? மத்திய குழுப் பிரச்சினையை இவ்வாறு தானா கையாளுவது? என்ற பல கேள்விகளுக்கு அவர்களின் பதில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததால் அவர்களை எம்மிடம் இருந்து வெளியேற்றி விட்டுத் தொடர்ந்து வேலை செய்வதாக முடிவு செய்தோம். அவர்கள் புலிகளுடன் சேர்ந்து வேலை செய்ய முடிவு செய்தனர். இந்த நேரத்தில் மனோ மாஸ்ரரின் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் எங்கள் பிரச்சினைகளில் அவர் எவ்வாறு நடந்து கொண்டார் என்ற எனது விமர்சனத்தையும் நான் முன் வைக்க விரும்புகிறேன்.

தொடரும்

ஜேவைப்பவன்

நன்றி - நூலகத்திட்டம்



# மாதவன் செய்த மாதவறுதான் என்ன?

# பொலிஸ் வெறியாட்டத்தில் அப்பாவிகள் படுகொலை!

– நேசன்

பிந்துனுவெவ படுகொலைக்கெதிராக மலையகத்தில் இடம்பெற்ற எதிர்ப்பியக்கம் ஒரு பேரெழுச்சிமிக்க போராட்டமாக உருவெடுத்ததைத் தொடர்ந்து மலையகமெங்கும் கைதுகள் தாராளமாக இடம்பெற்றுவருகின்றன. இக்கைதுகளின் பின்னணியில் பிரபல தொழிற்சங்கம் ஒன்றின் பிரமுகர்களே பொலிஸாருக்கும், உளவுத்துறையினருக்கும் பெயர்களைக் கொடுத்து வருவதாக அறியப்படுகின்றது.

இவ்வெழுச்சிக்கெதிராக பேரினவாத அரச இயந்திரமும் கூலிப்படையினரும் வெறியாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தமிழ் கடைகள் எரிக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. 17 பேர் வரை அரச படைகளின் துப்பாக்கிச்சூட்டிலும் தாக்குதல்களிலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 50 பேராவது கடுமையான துப்பாக்கி சூட்டுக் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். காடையர்களின் தாக்குதல்களில் 80 பேரளவில் படுகாயம் அடைந்துள்ளனர். 80க்கும் அதிகமான தமிழர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 25 கோடி ரூபாவுக்கும் குறையாத சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், பேரினவாத மயப்பட்ட சிங்கள இராணுவம் தமிழரை சுடுவதற்கென்றே தயாரிக்கப்பட்ட மரபணு சேர்க்கப்பட்ட தோட்டாக்களையா பயன்படுத்தியது என்றெண்ணத் தோன்றுகின்றது. மலையகத் தமிழர் மீது இவ்வளவு காடைத்தனங்களும் நடாத்தப்பட்ட பின்பும், இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழ் இளைஞர்களே அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா பொரவத்த சந்தியில் கொடிகளைக் கட்டிய தொழிலாளரை தாக்கியும் கொடிகளை அறுத்தும் காடைத்தனம் புரிந்த காடையர் எவரும் கைதுசெய்யப்படவில்லை. 29.10.2000 திகதி பொரவத்த சந்தியில் கொடியை அறுத்தவர்களுக்கும், பீட்று தோட்ட தொழிலாளருக்கும் இடையே ஏற்பட்ட தகராற்றின் போது பொரளந்த சிங்கள கிராமத்தை சேர்ந்த சஞ்ஜீவ லால் என்பவரால் "ராமர்" என்ற வயோதிபர் கடுமையாகத் தாக்கப்பட்டு வீழ்ந்துள்ளாார். வீழ்ந்தவரை தூக்கிச் சென்ற கூட்டத்தின் மீது நுவரெலியா பொலிஸ் நிலையத்தை சேர்ந்த 'செந்தில்' என்றறியப்பட்டவர் பொலிஸாரால் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் செல்லையா மாதவன் (30) என்ற தொழிலாளி படுகாயமுற்றார். படுகாயமடைந்தவரை அவரது குடும்ப உறுப்பினர்கள் எவருமின்றி பொலிஸார் தமது வாகனத்தில் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். கண்டி வைத்தியசாலையில் மரணமான இவரது சடலம் குடும்பத்தினர் தோட்ட மக்கள் முன்னிலையில் கண்டியிலேயே அடக்கம் செய்யப்பட்டுவிட்டது. சடலத்தை தோட்டத்திற்கு கொண்டு சென்றால் மேலும் நெருக்கடிகள் தோன்றும், அதற்கு இறந்தவரின் குடும்பமே பொறுப்பாக வேண்டுமென எச்சரிக்கப்பட்டதன் விளைவாக கண்டியில் அடக்கம் செய்ய உறவினர்கள் உடன்பட்டுள்ளனர்.




தலவாக்கலை ட்ரூட் தோட்ட இளைஞனான காராளனின் இறுதிக் கிரியையின் போது

இறந்த இவ் அப்பாவி தொழிலாளியின் குடும்பத்திற்கு விமானப்படையினர் உணவுப் பொட்டலங்களும் 500 ரூபாவும் கொடுத்து சமாதானப்படுத்தியுள்ளனர். இன்றுவரை எந்த அரசியல்வாதிகளோ மனிதஉரிமை குழுக்களோ, தொழிற்சங்கத் தலைவர்களோ இச்சம்பவம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இவர்கள் இருக்கும் இடத்திலிருந்து 3 கிலோ மீற்றர் துாரத்தில் உள்ள நுவரெலியாவிலேயே புத்திரசிகாமணி, சதாசிவம், இராதாகிருஷ்ணன், நகுலேந்திரன் ஆகிய அரசியல் பிரமுகர்கள் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களை, பொலிஸார் எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப்படவில்லை.

வட்டகொடையில் மடகும்புர தோட்டம் அக்சரமலைப் பிரிவு பங்களா காவலாளியான செல்லையா முத்தையா (66) 30.10.2000 இரவு முகமூடியணிந்த காடையர்களால் வெட்டப்பட்டுள்ளார். அவரது 92வயது தந்தை வெட்டிக் கொல்லப்பட்டார். இரண்டு பிள்ளைகள் துாக்கிச் செல்லப்பட்டு வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர். ஆனால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது அவசரகால சட்டத்தின் கீழ் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதோடு, வல்லுறவு நடைபெறவில்லை என மருத்துவச் சான்றளிக்கப்பட்டதாக தெரியவருகிறது. இச்சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு முதல் நாள் தமிழர்கள் வட்டகொடையில் ரயிலில் இருந்து இறக்கப்பட்ட 180 சிங்கள பயணிகளை விருந்தினர்களாக உபசரித்து பாதுகாப்பாக வழியனுப்பியுள்ளனர். நுவரெலியா பிரதேசசபைத்தலைவர் மாரிமுத்து போர்களத்துக்கேயுரிய மனிதாபிமானப் பணியை துரிதமாகச் செய்துள்ளார். இப்பயணிகளுள் கடற்படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் என்போரும் அடங்கியுள்ளனர். ஆனால், ஒரு சிறு துரும்புகூட அவர்கள் மீது படவில்லை.

தலவாக்கலையில் வன்முறையைத் தூண்டிய மீன் வியாபாரி, பௌத்த பிக்கு, தமிழ் கடைகளை கொள்ளையடித்தவர்கள் கினிகத்தேனையை கொள்ளையடித்தோர்,

### கண்டி விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்.

| | பெயர் | கைதான திகதி | பொலிஸ் பரிவு |
|---|---|---|---|
| 1 | ஜெய்னுதீன் முகமது நஸ்தர் | ஒக். 31 | கினிகத்தேன |
| 2 | காளிமுத்து மனோகரன் | நவ.02 | ஹட்டன் |
| 3 | சுப்பையா கந்தன் | நவ. 02 | ஹட்டன் |
| 4 | ராமலிங்கம் முனுசாமி | ஒக். 30 | ஹட்டன் |
| 5 | வரதராஜா சிவசுப்பிரமணியம் | நவ. 01 | ஹட்டன் |
| 6 | ஐ.சதீ. மைக்கல் | நவ. 02 | ஹட்டன் |
| 7 | கோபால் கிருஸ்ணசாமி | நவ. 02 | ஹட்டன் |
| 8 | பழனிசாமி மனோகரன் | ஒக். 10 | மஸ்கெலியா |
| 9 | சுப்பிரமணியம் தனபாலன் | ஒக். 10 | மஸ்கெலியா |
| 10 | பெரியசாமி பாலசுப்பிரமணியம் | ஒக்.10 | மஸ்கெலியா |
| 11 | தங்கவேலு நேசையா | நவ. 04 | மஸ்கெலியா |
| 12 | சுப்பையா சந்தர்தாஸ் | நவ. 04 | மஸ்கெலியா |
| 13 | செல்லத்துரை பிரான்சஸ் | நவ. 04 | மஸ்கெலியா |
| 14 | சுஜன் பெட்ரிக் ரோசரி | நவ. 04 | மஸ்கெலியா |
| 15 | தேவராஜ் தயானந்தன் | நவ. 04 | மஸ்கெலியா |
| 16 | தேவராஜ் சதானந்தன் | நவ. 04 | மஸ்கெலியா |
| 17 | அந்தணி அல்போன்ஸ் | நவ. 04 | மஸ்கெலியா |
| 18 | சுப்பிரமணியம் செல்வரட்ணம் | நவ. 05 | மஸ்கெலியா |
| 19 | செல்வரட்ணம் சாந்தலூயிஸ் | நவ. 08 | மஸ்கெலியா |
| 20 | சீலன் மகேந்திரன் | நவ. 05 | பொகவந்தலா |
| 21 | அந்தோணிமுத்து சந்தனம் | நவ. 04 | பொகவந்தலா |

### பதுளைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விபரம்

| | பெயர் | கைதுசெய்த பொலிஸ் பிரிவு |
|---|---|---|
| 1 | எம். மாடசாமி | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 2 | ஆர்.நீதிராஜா | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 3 | எம். சுப்ரமணியம் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 4 | வேலு புண்ணியராஜ் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 5 | வேலு விஜயகுமார் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 6 | ஆறுமுகம் ரகு | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 7 | அசோக்குமார் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 8 | மொகமட் இளயாஸ் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 9 | முத்தையா சிறிராம் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 10 | அமீர் ஜனாப்தீன் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 11 | கருப்பையா முருகபெருமாள் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 12 | பெரியசாமி ராசலிங்கம் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 13 | முத்தையா சுப்பையா | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 14 | பெருமாள் குணசேகரம் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 15 | அண்ணாமலை சுப்ரமணியம் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 16 | பழனியாண்டி சகாதேவன் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 17 | கிட்ணன் மகேந்திரன் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 18 | கந்தையா தமயேந்திரன் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 19 | ராமன் கோபாலகிருஷ்னன் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 20 | முருகையா திலகேஸ்வரன் | அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவு |
| 21 | ரெங்கசாமி சுப்ரமணியம் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 22 | மூக்கையா. ராஜ்குமார் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 23 | சோமு சுரேஸ் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 24 | ராமலிங்கம் சந்திரபோஸ் | லிந்தலை பொலிஸ் பிரிவு |
| 25 | ராமலிங்கம் யோகராஜ் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 26 | பிச்சமுத்து பாக்கியநாதன் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 27 | முத்துசாமி ராமநாதன் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 28 | சுப்பையா கிருஸ்ணமூர்த்தி | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 29 | ராமசாமி ராமலிங்கம் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 30 | நடேசன் சதாசிவம் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 31 | ராஜன் பெரியதம்பி | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 32 | முத்துவீரன் சுரேஸ்வரன் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 33 | ரெங்கசாமி ஜெகதீஸ்வரன் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 34 | ஆறுமுகம் ராஜேந்திரன் | லிந்துலை பொலிஸ் பிரிவு |
| 35 | ஆனந்தராஜா ஜீவா | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 36 | முத்துலிங்கம் யேசுநாதன் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 37 | பழனியாண்டி கணபதி | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 38 | சுப்ரமணியம் ரவி | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 39 | ந. பாலச்சந்திரன் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 40 | சுப்ரமணியம் ஜெயரட்ணம் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 41 | பிரான்சஸ் சகாய மரியான் | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 42 | முத்துசாமி ராஜா | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 43 | நோர்த் கடவல ராஜா | தலவாக்கலை பொலிஸ் பிரிவு |
| 44 | வசீகரன் | புலனாய்வுப் பிரிவு- நுவரெலியா |
| 45 | யோகேஸ்வரன் | புலனாய்வுப் பிரிவு- நுவரெலியா |
| 46 | ராஜேந்திரன் | நுவரெலியா உளவுப்பிரிவில் தடுப்பு |
| 47 | மலர் வாசகம் (கருப்பு) | நுவரெலியா உளவுப்பிரிவில் தடுப்பு |

நன்றி - நூலகத்திட்டம்



வீதிகளில் தமிழரைத் தாக்கியோர் அமைச்சர்கள், அரச பிரமுகர்களின் பாதுகாப்பிலும், சுதந்திரமாகவும் நடமாடித் திரிகின்றனர். அப்பாவிகள் மீது துப்பாக்கி கூடு நடத்திய் பொலிஸ் இராணுவம் தண்டிக்கப்படவில்லை.

இந்நிலையில் மலையகத்தில் இறந்தவர்கள் யார்? படுகாயமடைந்தவர்கள் யார்? கைதான இளைஞர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனரா? என்ற வினாக்களுக்கும் தெளிவான பதில்கள் இல்லை.

துப்பாக்கிச் சூட்டில் கொலையான 6 பேர் மரண விசாரணையின்றி புதைக்கப்பட்டுள்ளனர் என தேசிய சனநாயக இயக்கம் அறிவித்துள்ளது. இவர்களின் சடலங்கள் உறவினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், மரண விசாரனைகள் நடத்தப்பட வேண்டும். நட்டாடு வழங்கப்பட வேண்டும். இதனைச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். 15 இலட்சம் மலையகத் தமிழர்களினால் செத்தவருக்கு சவ அடக்கம் கூட செய்ய முடியாது போய்விட்டமை பெரும் அவமானமாகும்.

**கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டோர்**


| | பெயர் | விடுதலைக்கான கரணி |
|---|---|---|
| 1 | பி.சந்திரசேகரன் எம்.பி | நிபந்தனையின்றி |
| 2 | எம்.சிவலிங்கம் (மாகாணசபை உறுப்பினர்) | 50000 ரூபாய் சரீரப் பிணை |
| 3 | கோவிந்தராஜன் (அமைப்பாளர்- ம.ம.மு) | பிணையில் விடுதலை |
| 4 | ஜேக்கப்- சாமிமலை | நிபந்தனையின்றி விடுதலை |
| 5 | பாரதிதாசன் - இ.தொ.க | 50000 சரீரப் பிணை |

மலையக வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் என்ற பெயரில் 80 பேரளவில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர் எனக் கூறப்படுகின்றது. உளவுத் துறையினரால் கைதானவர்கள் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். பதுளை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட இத்தமிழ் இளைஞர்களை பௌத்த பிக்குவை கொன்றதாகவும், சிங்கள மாணவிகளை வல்லுறவில் ஈடுபடுத்தியதாகவும் குற்றம்சாட்டி சிறைக்காவலர்கள் காட்டுமிராண்டித்தனமாக தாக்கியுள்ளனர். மேலும் சிங்களக் கைதிகளுடன் மிகப் பயங்கரமான பாதுகாப்பற்ற சூழலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை மலையக மக்கண் முன்னணி தலைவர் சந்திரசேகரன் நுவரெலியா பிரதேசசபை தலைவர் மாரிமுத்து ஆகியோர் மட்டுமே சென்று பார்வையிட்டுள்ளனர்.

**அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதான சிங்களவர்கள்**

| | |
|---|---|
| தசநாயக, பறதசில்வா, சமிந்தகுமார | தலவாக்கலை சிவா ஸ்ரோர்ஸ் லொறி எரிப்பு 1100000 சேதம் ஏற்படுத்தியது |

* பதுளை சிறையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மூன்று சிங்களவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
* மேலும் 72 பேர் கைது செய்யப்பட வேண்டியவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கடும் எதிர்ப்பு காரணமாக இக்கைதுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.
* இவர்களில் 16 பேர் தற்போது சட்ட வலுவின்மையால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



இராணுவம் நடாத்திய வெறியாட்டத்தில் சேதமடைந்த தமிழரின் உடமைகள்

பத்தனை, தலவாக்கலை, அக்கரைப்பத்தனை, லிந்துலை, நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பதுளை சிறையில் அவசரகால விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் நலன்களை நுவரெலியாவின் பிரபல இளம் சட்டத்தரணி பி.ராஜதுரை தனியாக கவனித்து வருவதோடு சட்ட நடவடிக்கைகளிலும் தீவிரமாக இறங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரிவாளும் சுத்தியலும் வரைய ஒப்புக் கொண்டேன்!


## நினைவுக் குறிப்புகள் - 9

லோறன்ஸின் பெயர் உரிய அளவுக்கு கட்சியின் எந்த வராற்றிலும் குறிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அவர் இப்போது பெரிதும் மறக்கப்பட்டும் விட்டார். ஆனால் உண்மையில் லோறன்ஸ் ஒரு விதிவிலக்கான மனிதஜீவி என்று கருதுகிற நிறையப் பேரை எனக்குத் தெரியும். மற்றெவரையும் விட அதிகமாக, சமூக தார்மீக விழுமியங்கள் குறித்த பிரக்ஞை காரணமாக சோசலிச இயக்கத்தில் ஈர்க்கப்படும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவராக அவர் எனக்குத் தோன்றினார். ஆனால், துயரம் என்னவென்றால், அதிகாரப் போட்டியிலும் அரசியற் போராட்டத்தின் தூசிக்குள்ளும் சூட்டுக்குள்ளும் இந்தப் பிரக்ஞை அடிக்கடி காணாமல் போய் விடுகிறது என்பதுதான்! ஆனால் அவர் ஒரு தூய்மையான ஆளுமையைக் கொண்டு விளங்கினார். கட்சிக்குள் இருந்தவர்களுள், தனது சோசலிச வாழ்வை மிகவும் முழுமையாக வாழ்ந்தவர் அவர் என்று சொல்லாம். எனக்கு மிகவும் நெருக்கமாக வாழ்ந்த ஒரு மதச்சார்பற்ற புனிதர் அவர்.

1941இன் ஆரம்பத்தில் ஒரு நாள் அவர் பல்கலைக் கழகத்திற்கு வந்ததற்கு முன் லோறன்சை கிட்டத்தட்ட ஒரு வருடமாக நான் காணவில்லை. அவரது உடைகள் கசங்கியும், சரியான விதத்தில் துவைக்கப்பட்டவையாக இல்லாமலும் இருந்ததை நான் கவனித்தேன். அவரது முகம் சவரம் செய்யப்படாது இருந்தது. அவர் கேட்டார்:

"கட்சிக்காக சில வேலைகளை உன்னால் செய்ய முடியுமா?"

நான், என்ன வேலை என்று கேட்காமலே ஒப்புக் கொண்டேன். அவர் இன்னும் சிலருடன் தான் பேசவேண்டும் என்றும் பேசிவிட்டு வருவதாகவும் கூறிச் சென்றார்.





**தலைமறைவு வாழ்க்கை**

றெஜி சிறிவர்த்தன

சிறிது நேரத்தின் பின்னர் அவர் வேறு இரண்டு மாணவர்களுடன் திரும்பி வந்தார். நாங்கள் எல்லோரும் அந்தக் கல்வி வகுப்பின் உறுப்பினர்கள். லோறன்ஸ் எங்களுடன் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்தார். அன்று மாலை நாங்கள் மருதானையிலுள்ள ஒரு தொழிற்சாலைக்கு வெளியே அவருக்காக காத்திருக்க வேண்டும். அங்கே அவர் வந்து நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிச் சொல்லுவார் என்று ஏற்பாடாகியிருந்தது.

நான் குறித்த இடத்திற்கு சரியான நேரத்துக்கு வந்துவிட்டேன். நேரம் கடந்து கொண்டிருந்தது. யாரும் வரவில்லை. தொழிற்சாலை சுவரோரமாக இருந்த ஒதுக்குப்புறமொன்றில் நான் நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருந்தேன். கிட்டத்தட்ட அரைமணி நேரத்தின் பின் லோறன்ஸ் ஒரு சைக்கிள் வண்டியை மிதித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். வந்ததும் என்னிடம் "மற்றவர்கள் வரவில்லையா என்று கேட்டார்"

நான் இல்லை என்று பதில் சொன்னேன். சைக்கிளை ஓட்டியபடி அவர் என்னை "தொழிற்துறை மற்றும் பொது ஊழியர் சங்க' அலுவலகத்திற்கு கூட்டிச் சென்றார். அப்போது தொழிற்சங்க வேலைகள் மட்டுமே கட்சியின் ஒரேயொரு பகிரங்க வேலையாக இருந்து வந்தது. நாங்கள் அலுவலகத்திற்குப் போன போது ஒரேயொரு கட்சி ஊழியர் மட்டும் அங்கே இருந்தார். அங்கிருந்த மரத்தால் செய்யப்பட்ட வாங்கு ஒன்றில் நாம் அமர்ந்து கொண்டதும் லோறன்ஸ் சொன்னார் "உன்னுடைய முதலாவது வேலை ஒரு அரிவாளும் சுத்தியலும் சின்னத்தை வரைவது."

அப்போதைய பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம், அரிவாளும், சுத்தியலும் சின்னத்தை எந்த வடிவில், வரைந்தாலும் அது சட்டவிரோதமானது என்று அரசால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து, பரவலாக சுவர்களிலும், வீதிகளிலும் பகிரங்க விளம்பரப் பலகைகளிலும், பாலங்களிலும், மதகுகளிலும் அரிவாளும், சுத்தியலும் வரையும் ஒரு போக்கு உருவாகியிருந்தது. இந்த நடவடிக்கை அரசாங்கத்தின் இச்சட்டத்தை ஏற்காத கட்சியின் ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாகவும், இச்சட்டத்தால் கட்சியை அழித்துவிட முடியாது என்று மக்களுக்கு காட்டும் ஒரு நடவடிக்கையாகவும் இது நடாத்தப்பட்டது.

எனக்குச் சொல்லப்படுகிற ஒரு இடத்துக்கு பெயின்ட்டும் பிரஸ்உம் கொண்டு போய் இரவோடிரவாக அரிவாளும் சுத்தியலும் வரைய வேண்டும் என்பதை லோறன்ஸ் விளக்கினார். "இவ்வளவுதான் ஆரம்பத்திற்கு என்று கூறி அவர் புன்னகைத்தார். 'நூற்றுக்கணக்காக இவற்றை வரைய வேண்டுமோ என்று யோசிக்காதே. நீ ஒன்று வரைந்தால் போதும். அத்துடன் அது முடிந்துவிடும். பிறகு அங்கிருந்து போய் விடுவோம்" என்றார் அவர்.

எனது ஆர்வத்துக்கும் நம்பகத்தன்மைக்குமான ஒரு பரீட்சை இது. இதில் நான் சித்தியடைந்தால் பிறகு எங்கு போகவேண்டும் என்று எனக்குச் சொல்லப்படும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனது ஓவியத் திறமையை நடைமுறைப்படுத்த நான் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், யாரும் வரவில்லை. ஒரு நாள் ஹெக்டரை சந்தித்தேன். அவர் லோறன்ஸ் உன்னிடம் ஒரு அரிவாளும் சுத்தியலும் வரையுமாறு கேட்டாரா?" என்று வினவினார். நான் 'ஆம்' என்று சொன்னேன்.

அவருக்கு இந்த வேலை ஒரு தேவையற்ற விசித்திரமான வேலையாக தோன்றியிருக்க வேண்டும். இதனால், அவர் சிலவேளை லோறன்ஸுக்கு அது ஒரு தேவையில்லாத வேலை என்று கூறியிருக்கக் கூடும். ஏனென்றால் சில நாட்களில் எனக்கு நேரத்தையும் இடத்தையும் குறிப்பிட்டு ஒரு செய்தி வந்தது. நான் ஒரு காரில் அழைத்துச் செல்லப்பட்டு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்படுவேனென்று அந்தச் செய்தி குறிப்பிட்டது.

இது ஒரு எதிர்பாராத ஆச்சரியமாக இருந்தது. மறுநாள் மாலை என்னை காரில் அழைத்துச் செல்ல வந்தவர் டொறிக் டி சில்வா. அவர் பல்கலைக்கழக ஆங்கில பீடத்தில் இருந்த என்னுடைய விரிவுரையாளர்களில் ஒருவராக கிட்டத்தட்ட ஒன்றரை வருட காலம் இருந்தவர். அவர் இடதுசாரி அரசியல் கருத்துக்கள் கொண்டவர் என்பது எனக்குத் தெரியும்.

> அப்போதைய பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம், அரிவாளும், சுத்தியலும் சின்னத்தை எந்த வடிவில், வரைந்தாலும் அது சட்டவிரோதமானது என்று அரசால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் இவ்வளவு தூரம் அரசியலில் தீவிரமாக செயற்படும் ஒருவர் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் சென்ற ஒருமுறை பேராசிரியர் லூடோவைக்கின் கட்டுரை ஒன்று ஆங்கில இலக்கியக் கழகத்தில் படிக்கப்பட்ட போது, அதன் கருத்துக்களை விமர்சித்த டொறிக், 'எல்லாக் கலாசாரமும் ஆளும் வர்க்கத்தின் கலாசாரமே என்று மாக்ஸ் சொன்னது சரி என்றே நான் நினைக்கிறேன் என்று குறிப்பிட்டிருந்தார். இந்த உரையாடலை ஒரு முறை ஹெக்டரிடம் கூறி, 'அப்படியானால் அவர் ஏன் ஒரு சாய்மனைக் கதிரை மாக்ஸிஸ்டாக இருக்கிறார் என்று கேட்டேன். " ஹெக்டர் சிரித்துவிட்டு நிறுத்திக் கொண்டார். எதுவும் சொல்லவில்லை.

வரும்

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழா - தமிழா!

– சேரன்

**தமிழ் அடையாளம், தமிழ்ப் பண்பாடு என்பவை வெறுமனே வணிக நோக்கிலும் லாபம் ஈட்டும் ஒரு கருவியாகவுமே தொழிற்படுகின்றன**

காலை பத்து மணிக்கு அவர்கள் இருவரையும் சந்திப்பதாக ஏற்பாடு. அவர்களைப் பற்றிய முழு விபரங்களும் தெரிந்திருக்கவில்லை. ஓரிரு தடவைகள் தொலைபேசியில் நான்கு அல்லது ஐந்து வாக்கியங்கள் பேசியிருப்போம். அவர்களுடைய நிறுவனத்தின் பெயரும் மிகுந்த ஆர்வம் தருவதாக இருந்தது. இணையத்தளம் இணையம் இவற்றூடாக வணிகம் செய்வது, இணையத்தில் தமிழ் வலைத் தளங்களையும் பயன்படுத்துவது போன்ற துறைகளில் நிறையப் பணத்தை முதலீடு செய்துள்ள ஒரு நிறுவனம் அது என்பது பின்னர் தெரிந்தது.

தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கில் கலந்து கொள்ளும் பேராளர்களுக்கு தமது நிறுவனத்தின் சார்பில் ஒரு சிறு அன்புப் பரிசிலை அவர்கள் வழங்க விரும்பினார்கள். தமிழ் இனி 2000 இல் கலந்து கொள்பவர்களின் இணைய முகவரி மற்றும் தொடர்புகள் அவர்களுக்கு உதவக்கூடும் என்பது அவர்களுடைய எண்ணம். ஒரு புறம் தமிழ் - இனி 2000 என்று பொறிக்கப்பட்டதும், மறுபுறம் உபயகாரரின் பெயர், முகவரி இன்ன பிற விவரங்களும் பொறிக்கப்பட்டதுமான நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கலாம் என்பது அவர்களுடைய பரிந்துரை!

இந்தத் திட்டத்தில் உற்சாகம் பெரிதும் இல்லாவிட்டாலும் அவர்களை ஒருதரம் சந்தித்துப் பேசிப் பார்ப்போமே என்பதுதான் எனது நண்பரின் நிலைப்பாடாக இருந்தது. திட்டமிட்டப்படி காலை அவர்கள் வந்திருந்தார்கள். சந்தித்தோம்.

தமிழா - தமிழா.காம் என்பது சென்னையில் இயங்குகின்ற அவர்களுடைய நிறுவனம். நிறுவனத்தின் பெயர் ஆண்பாலியாக இருந்தாலும், நிறுவனத்தின் பிரதிநிதிகளாக வந்திருந்த இருவரும் பெண்கள். அவர்களுடைய நுனி நாக்கிலிருந்து நழுவி விழுந்தது ஆங்கிலம். தமிழ் மொழியில் உரையாடல் சாத்தியமில்லை என்று தெரிந்ததும், ஆங்கிலமே பாவனை மொழியாயிற்று. பேராளர்களுக்குத் தர விரும்பிய நினைவுச் சின்னத்தின் மாதிரி உரு ஒன்றை அவர்கள் கையிலே வைத்திருந்தார்கள். இரண்டு கைகள் பூமிப் பந்தை ஏந்திப் பிடித்தபடி இருக்கும் சிற்பம் ஒன்று. பூமிப் பந்திலும் கைகளுக்கு இடையிலும் வார்த்தைகள் பொறிப்பதற்கான இடம் இருந்தது.

"தமிழா - தமிழா.காம் என்பதும், பாரதி என்பவருடைய கவிதை வரி ஒன்று அல்லது இரண்டும் பூமிப் பந்தில் இடம்பெறட்டும். தமிழ் இனி 2000 என்பதைக் கீழே போட்டுக் கொள்ளலாம். இது உங்களுக்குச் சம்மதமானால் உடனடியாகவே நூற்றெழுபத்தைந்து சின்னங்கள் தயாரிக்க நாங்கள் உத்தரவு வழங்க முடியும்..."

இதைச் சொன்ன அம்மணியின் (அம்மணி -1) குரலில் ஒரு வேகம் இருந்தது. எவ்வளவு விரைவாக முடிவுகளை எடுத்துவிட முடியுமோ அவ்வளவு விரைவாக முடிவுகளை எடுத்து விடுவதிலும் பூமிப்பந்தில் தமிழா - தமிழா.காம் என்பதைப் பெரிய எழுத்தில் பொறித்து விட வேண்டும் என்பதிலும் அவர் அவசரப்பட்டார். தமிழ் - இனி துவங்குவதற்கு இன்னும் நான்கே நாட்கள் தான் இருந்தன என்பதும் அவசரத்துக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

"பாரதியின் எந்தக் கவிதையை எடுத்திருக்கிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார் நண்பர்.

எட்டு மூலைப்பட்டம் ஒன்றை நான்காக மடித்துக் கைகளில் பொத்தி வைத்திருந்தால் எப்படி இருக்குமோ அப்படியான கடுதாசித்துண்டு ஒன்றைக் கையிலிருந்து எடுத்தார் அம்மணி -2. அவருக்குத் தமிழ் சற்றுத் தெரிந்திருந்தது என்று தோன்றியது.

கடதாசித் துண்டில் ஆங்கிலத்தில் எழுதியிருந்ததைப் பார்த்து அவர் பாரதியின் கவிதை வரிகள் இரண்டை வாசித்தார்.

"யெங்கல் தமில் மொலி யெங்கல் தமில் மொலி யென்றென்றும் வாலியவே."

வாசித்த பிற்பாடு "இது மிகவும் பொருத்தமாக இருக்கும் இல்லையா?" என்று விநயமாகக் கேட்டார்.

பாரதியிடமிருந்து தமிழ் - இனிக்காக ஓரிரு கவிதை வரிகளைப் பெற்றுக் கொள்வதில் எனக்கும் நண்பருக்கும் மிகுந்த வேட்கை இருந்தது. எனினும் "வாலிய தமில் மொலி" என்ற வரிகளை எடுக்க



வேண்டாமே, வேறு ஏதாவது கவி வரிகளைத் தேர்ந்தெடுப்போம் என்பதே எங்களது ஒருமித்த கருத்தாக இருந்தது.

"சரி அப்படியானால் நீங்களே வேறு நல்ல கவிதை வரிகளைச் சொல்லுங்கள்" என்று தோசையை மறுபுறமாகத் திருப்பிப் போட்டுவிட்டனர் அம்மணிமார்.

ஓரிரு நிமிட யோசனையின் பிற்பாடும், இரண்டு செல்லிடத் தொ(ல்)லைபேசி அழைப்புகளின் பிற்பாடும் நண்பர் பரிந்துரை செய்தது: சொல்லடி சிவசக்தி - என்னைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்.

இந்த வரிகளின் அர்த்தம் தாவரங்களா, விலங்குகளா, திண்மமா, திரவமா, அல்லது வாயுவா என்ன என்பது ஒன்றுமாகப் புரியாமல் மிகுந்த குழப்பத்துடன் "Could you translate this for us?" என்று கேட்டார் தமிழா - தமிழா.காம், அம்மணி-2. அப்போது அவருடைய புருவங்கள் சுருங்கிவிட்டன. சுடர்மிகு அறிவுக்கும் மொழிபெயர்ப்புக்கும் எந்தவித உறவுமில்லை என்றபோதும், அம்மணி-2 இன் முகத்தில் படர ஆரம்பித்த சஞ்சல ரேகைகளைப் பார்த்துவிட்ட பிற்பாடும், சங்கடத்துடன், சொல்லடி சிவசக்திக்கு ஒரு மொழிபெயர்ப்பைச் செய்தோம். (அந்த மொழிபெயர்ப்பை இங்கு தர முடியாமைக்கு வருந்துகிறேன்!)

"Oh. It's too much!" என்றார் அம்மணி-1

"என்னது?" இது ஆச்சரியத்துடன் நான்.

"Too many characters. Can't fit everything in. பூமிப்பந்தில் இவ்வளவு சொற்களுக்கு இடம் இல்லை. மேலும் எழுத்துக்களும் சொற்களும், கூடக் கூட சின்னம் செய்வதற்கு ஆகும் செலவும் அதிகமாகும். எனவே கொஞ்சம் சொற்களை நீக்கி விடுங்கள். முடியுமானால், கொஞ்ச எழுத்துக்களை........" என்றார் அம்மணி - 1.

"தமிழ் - இனிக்கும் சிவசக்திக்கும் என்ன தொடர்பு? I don't understand" என்றார் அம்மணி-2

"வேண்டுமானால் முழுக் கவிதை வரிகளையும் பயன்படுத்தலாம். ஆனால், தமிழ் - இனி 2000 என்று பொறிக்கப்பதற்கு இடம் இருக்காது: பணமும் இருக்காது" என்று ஒரு இராஜ தந்திர நகர்வை மேற்கொண்டார் அம்மணி-1. இந்த இடைவெளியில் பாரதியின் வேறொரு அற்புதமான கவிதை வரியை நண்பர் கண்டு பிடித்து விட்டார். 'விட்டு விடுதலையாகி நிற்பாய் / இந்தச் சிட்டுக் குருவியைப் போலே' என்பதுதான் அது. விடுதலை எமக்கு எப்போதுமே உவப்பான ஒன்று என்பதில் விட்டு விடுதலையாகி நிற்பாய் என்பதையே பொறித்து விடுவது என்பது எனக்கும் நண்பருக்கும் உறுதியான தீர்மானமாயிற்று. மறுபடியும் தமிழா - தமிழா.காம் அம்மணிமாரின் புரிதலுக்காக மொழி பெயர்ப்பு.

"இதென்ன குழப்பமாயிருக்கிறதே! Freedom, Liberation என்று பேசுகிறீர்கள். தமிழ் அடையாளம் தமிழ்ப் பண்பாடு, இலக்கியம், பற்றிய மாநாடு என்று நினைத்துத் தானே..." நாங்கள் மேலதிக உரையாடல்களுக்குப் பிற்பாடும் அரைமனத்தோடும் இணக்கத்துக்கு வந்த தமிழா-தமிழா.காம், குறித்த நேரத்துக்கு நினைவுச் சின்னங்களைத் தயாரிக்க முடியவில்லை என்பதால் முயற்சி தோல்வியில் முடிந்தது.

பத்து ஆண்டுகளுக்குப் பிற்பாடு சென்னை வர முடிந்ததும் தமிழக அரசியல், சினிமா, பண்பாட்டு அவதானங்களும் பற்றிய ஒரு சிறுபதிவைச் செய்வதற்கு முன்னுரையாகவே தமிழா - தமிழா.காம் பற்றிய கதையை ஆலாபனையோடு சொல்ல வேண்டி இருந்தது.

தமிழ் அடையாளம் என்பது என்ன? தமிழ் அடையாளங்களின் பன்முகக் கூறுகள் எவை? தமிழ் அடையாளங்கள் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கின்றனவா போன்ற பல கேள்விகள் இன்று முன்னணிக்கு வந்துள்ளதோடு மிகுந்த விவாதங்களுக்கும் உள்ளாகி வருகின்றன.

தண்ணீருக்குள் வாழும் மீன் தண்ணீரைப் பற்றிப் பேசுவதில்லை என்று சொல்வார்கள். தண்ணீருக்கு வெளியில் தவிக்க நேர்கிற போதே மீனுக்கு தண்ணீர் பற்றிய பேச்சு உக்கிரமாக எழக்கூடும். தமிழ் அடையாளங்கள் பற்றிய ஈழத் தமிழர்களின் பார்வைகளுக்கும், அணுகுமுறைக்கும், அவர்கள் அவை பற்றிப் பேசுவதற்குமான அரசியல் வரலாற்றுச் சூழல் வேறாக இருக்கிறது. இருப்பின் இழப்பு, இழப்பின் இருப்பு, எதிர்ப்பின் உயிர்ப்பு ஆகிய மூன்று அம்சங்களும் தமிழ் / தமிழ் அடையாளங்கள் / இருப்பு பற்றிய அவர்களின் விசாரணைகளுக்குப் பின்னணியாகின்றன. இத்தகைய நேரடியான ஆபத்துக்களும், வெளிப்படையான ஒடுக்கு முறையும் தமிழ் அடையாளங்கள் சார்ந்து பெருமளவுக்குத் தொழிற்படாத தமிழகச் சூழலில் தமிழ் மொழி உரிமைகள், தமிழ் வழிக்கல்வி, தமிழ் அடையாளங்கள் தொடர்பான அக்கறை பெருங் காலமாகப் புறந்தள்ளப்பட்டுக் கிடந்தது. இவ்வாறு புறந்தள்ளப்பட்டுக் கிடந்தமைக்கான காரணங்களுள் பிரதானமானது என நான் கருதுவது, கடந்த சில ஆண்டுகளாக வணிக ரீதியாகக் கட்டமைக்கப்பட்டு, சினிமா, மற்றும் ஜனரஞ்சக வார சஞ்சிகைகளூடாக விநியோகிக்கப்பட்டும் திணிக்கப்பட்டும் வந்துள்ள 'தமிழ்ப் பண்பாடு' என்பதும் அதனைப் போதை மருந்து போலப் பெருமளவு மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தமையும் தான். தமிழகத்தின் அரசுகளைப் பொறுத்தவரை இவ்வாறு வணிக ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட தமிழ் அடையாளமும் பண்பாடும் அவர்களுக்கு அரசியல் பொருளாதார ஆதாயங்களையே வாரி வழங்கியது. பெரு வணிகத்துக்குப் பெருஞ் சந்தை மிகவும் தேவையானதும் வாய்ப்பானதும் ஆகும். பெருஞ் சந்தைகளைப் பிசிறற்றும் குழப்பமற்றும் பேணுவது பெரு வணிகத்தின் மட்டற்ற லாபம் ஈட்டும் அடிப்படைப் பொறிமுறைக்கு மிகவும் அவசியமான ஒன்று. அதேநேரம், இனத்துவ அடையாளங்கள் சார்ந்தும் அவற்றைப் பயன்படுத்தியும் புதிய புதிய சந்தைகளை ஏற்படுத்துவதும் கூட, ஒரு பயன் மிக்க வாகனமாக இன்று உதவுகிறது. 'தமிழா - தமிழா.காம், நிறுவனத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். மும்பாயில் மையங் கொண்ட அனைத்திந்திய நிறுவனமாக இருந்தாலும் தமிழகத்தில் வணிகம் என்று வருகிற போது மிகவும் வசதியாக 'தமிழா - தமிழா' என்ற அடையாளத்தைச் சூடிக்கொள்வது வாய்ப்பாக இருக்கிறது. தமிழ் அடையாளம், தமிழ்ப் பண்பாடு என்பவை இங்கு வெறுமனே வணிக நோக்கிலும், லாபம் ஈட்டும் ஒரு கருவியாகவுமே தொழிற்படுகின்றன. இதனுடைய இன்னொரு பக்கமாகத்தான் மணிரத்தினம், சந்தோஷ் சிவன் போன்ற ஏராளமானோரின் சினிமாவையும் நாங்கள் பார்க்க முடியும். தமிழ் மொழியூடாகவும், தமிழ்ப் பரப்பில் தொழில்படுவதாகவும் ஒரு பாவனை இருக்கிற போதும் இத்தகைய முயற்சிகளின் குறி வணிகமும், லாபம் ஈட்டுவதும் தான். அந்த வகையில் 'தமிழன்', 'தமிழா' போன்ற கருத்தியல்களும் பிம்பங்களும் ஒரு தந்திரோபாய ரீதியான வணிக நடைமுறைகளாகி விட்டன. இதற்கான நூற்றுக் கணக்கான உதாரணங்கள் சென்னை நகர் எங்கும் பரவிக் கிடக்கின்றன. அரசியல்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



## பச்சைக் கனவு

மலர்ந்து வாடிய பூக்களும்
தேய்ந்து மறைகின்ற நிலவும்
என் கவிதையாகின்றன
என் நினைவுகள் பொய்த்துச் சுருங்கி
உணர்வுகள் நொருங்கிச் சிதையும்
இவ்வுலகந்தான் இன்றைய என் சோகம்
ஒரு யுகத்தில்
என் இப்போதைய சுவாசம் உண்மையெனில்
நான் பிறவியாகி
தேய்ந்து போவது உண்மையெனில்
நான் சிரித்ததும் அன்றைய உண்மை.

அது ஓர் சுகமான ஞாபகம்
என் உறவுகளும்
என் ஸ்நேகங்களும்
நானும்
அமைதியும் மகிழ்வுமாய்
அம் மண்ணில் வாழ்ந்திருந்ததும்
அவனது குளிர்க்கரங்கள் பற்றி
என் கைவிரல்கள் சூடேறியதும்
அவனுடனான என் இரவுகள்
பனித்துவியதும்
நான் இதை முடிவுகாலம் என
அன்று உணரவும் இல்லை
ஏனெனில் அவை
என் கனவுகளும் கூட
மறைந்து போன என்
மணல் ஓவியங்களை
கீற முனைகிறேன் நான்

என்னுடைய அந்த நிமிடங்களை
நினைக்கும் என் இதயத்தை
அறுத்தெறிந்து வாழ நினைக்கும் நான்
இன்று எதைச் சிந்திப்பேன்
தொலைந்து போன
என் சமாதானம் பற்றியதாகவா
அல்லது நான் தொலைத்து நிற்கும்
எல்லாவற்றையும் பற்றியதாகவா
எதைச் சிந்திக்க
என் முகம் கன்றிச் சிவக்க
நான் தொலைத்தவற்றைத் தேடுகிறேன்
என்னுள் கிளர்கின்ற வேகத்துடன்


எதுவுமே வேண்டாம் இம்மண்ணில்
எங்களுடைய அவர்களும் அவைகளும் போதும்
மழை அடித்துக் கொட்ட
தெரு நாயும் நானும்
ஒதுங்கி நிற்கவும்
யாருடையகுறுக்கிடலுமற்று
என் பயணங்களில் நான் பயணிக்கவும்
மலர்களையும் தென்றலையும்
என் நண்பர்களாக ஆக்கவும்
என் தாயின் மடியை
படுக்கையாக்கவும்
ஓர் உலகம் வேண்டும் எனக்கு

அங்கே இவ்விதயத்தைப் பிழிந்து
வழியும் கண்ணீர் இல்லை
என் கண்ணீரால் நனையும்
என் தலையணைகள் இல்லை

சகோதரர்களின் கழுத்துகளை அறுத்தறுத்து
புதைத்து மூடும் குழிகள் எதுவுமில்லை
நாற்சுவருக்குள் நான் அடைபட்டு
கூக்குரலிடும் வேதனை இல்லை

இன்றைய என் கனவுகளில்
நான் பிரசவிக்கும்
ஒவ்வோர் உயிர்ப்பும்
என்றோ ஒருநாள் எங்கோ
உயிர்ப்படும் என்ற நம்பிக்கை
என்னுள் மிளிர்கின்றது
ஆயினும் அவற்றை முந்தியதான
போர்க்காலம்
எல்லாவற்றையுமே கொன்று தீர்த்தால்
இவை என்றுமே
என் நினைவுறா
கனவுகளாகத்தான் போய்விடுமா?

என்ன?



வெண்ணிலா

## கலீல் ஜிப்ரான்– நுற்றாண்டு விழாவின் பதினேழு ஆண்டுகளுக்குப் பின்..

**இங்கு வெளிவரும் "அராம்கோ வேர்ல்ட்" (இப்போது சஊதி அராம்கோ வேர்ல்ட் என்று பெயர் மாற்றி விட்டார்கள்.) பற்றியும், அதில் வந்த ஒரு கட்டுரை பற்றிய குறிப்பும் முன்னம் உனக்கு எழுதியிருந்தேன். அண்மையில் அதன் பழைய இதழ்கள் சில பார்க்கக் கிடைத்தன. அதில் பல அரிதான, நம் ஆவலுக்குரிய பல விடயங்கள் இருந்தன. இன்னொன்று சொல்ல வேண்டும், அந்த சஞ்சிகை வெளியீட்டாளர்களின் (உரிய முறையில் சஞ்சிகைகளின் ஆக்கங்களைப் பயன் படுத்துவது, மீள்பிரசுரிப்பது, சஞ்சிகைகளை உலகெங்கும் இலவசமாக விநியோகிப்பது, தேவைப்படும் பழைய பிரதிகளை (அதற்கென்றெ ஐந்து வருடங்களுக்கொரு முறை அடையாளக் குறிப்பேடு -Index- தயாரித்து வெளியிடுகிறார்கள்) கட்டாக இலவசமாக அனுப்பி வைப்பது போன்ற தாராளத்தனமும் நம்மைக் கவர்வன.**

**1983ம் ஆண்டு எமக்கும் ஒரு நினைவாண்டு தான். அதே ஆண்டுதான் கலீல் ஜிப்ரானது நூற்றாண்டும். அவரின் அந்த நூற்றாண்டுக் கட்டுரை அதே ஆண்டில் வெளிவந்த ஒரு சஞ்சிகையில் இருந்தது என் கவனத்தை ஈர்த்தது. Aileen Vincent Barwood என்பவர் எழுதியிருக்கிற அதை அப்படியே உனக்குத் தரலாம் என்று விரும்புகிறேன். லெபனானிய கிராமமொன்றில் பிறந்த ஓர் எழுத்தாளனின் வியாபகம் எப்படியிருக்கிறது என்பதற்காகவும், நாம் நடாத்தும் நூற்றாண்டு விழாக்களுடனான ஒரு ஒப்பீட்டுக்காகவும், சில விடயங்கள் காலம் கடந்தும் நம்மில் ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன என்பதற்காகவும், மற்றும் ஒரு பரிமாறலுக்காகவும் தமிழில் தருவது நல்லம் தானே!?**

**இச்சஞ்சிகையுடனான தொடர்பு முகவரி:**

Saudi Aramco World, Box: 469008, Escondido, California 92046-9008, USA

*பொஸ்டனிலிருந்து பெய்ரூத் வரை எல்லோருமே திடீரென்றாற்போல் கலீல் ஜிப்ரானை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். லெபனானின் புகழ் பெற்ற கவியாய் மக்கள் மனங்களில் நிறைந்திருந்தவர் கலீல் ஜிப்ரான். அவர் கவிஞர் மட்டுமல்ல. ஓர் ஓவியர், தத்துவவாதி, அரபுக் கவிதையில் புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்த ஓர் எழுத்தாளர். உலகெங்கும் எல்லாத் தரப்பினராலும் அறியப்பட்ட ஒரே நவீன அரபு எழுத்தாளர் அவர்தான்.*

*இது அவரின் நூற்றாண்டு விழாக் காலம். எல்லாருமே அதைக் கொண்டாட விரும்புகிறார்கள் போலத்தான் தெரிகிறது. ஒரு காலத்தில் அவர் வாழ்ந்த பொஸ்டன் நகரம் ஜனவரி மாதத்தை கலீல் ஜிப்ரான் மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.*

*லெபனானிய ஜனாதிபதி* Gamayel, *1983 ஐ ஜிப்ரான் சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளார். ஜிப்ரான் பற்றிய விவரணத் திரைப்படங்கள் எடுக்க விரும்புவோர்க்கு போதிய நிதி தருவதாக லெபனானிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அதை "அமெரிக்க மக்கள் தொலைக்காட்சிச் சேவை"யூடாகக் காண்பித்து பரவலாக மக்களைச் சென்றடையும் வண்ணம் நடத்தவிருக்கின்றனர்.*

*ஒக்ஸ்போர்ட், டப்ளின், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, தென்னமெரிக்கா போன்ற நாடுகளும் இந்த நூற்றாண்டுக் கொண்டாட்ட ஏற்பாடுகளில் இறங்கியுள்ளது. ஒகஸ்ட் 17-23 (1983) வரை "கலீல் ஜிப்ரான் - சர்வதேசக் கருத்தரங்கு" ஒன்று நடாத்தப்படவுள்ளதாக லெபனானிய கல்வியமைச்சர் அறிவிப்புச் செய்திருக்கிறார். ஜிப்ரான் ஞாபகார்த்த அருங்காட்சியகம் ஒன்று* Bsharri *என்ற இடத்தில் ஒகஸ்ட் 01 இல் திறக்கப்படவுள்ளது. ஐந்து மொழிகளில் நூற்றாண்டுச் சுவரொட்டிகள், பிரசுரங்கள் வெளியிட ஏற்பாடாகியுள்ளதுடன், 10000 டொலர் பெறுமதியான சர்வதேசப் போட்டியொன்று நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஞாபகார்த்த முத்திரை வெளியீடும், பல்கலைக் கழகத்தில் ஜிப்ரான் கற்கைகள் துறையொன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.*

*ஜனவரி ஆறாம் திகதியன்று பொஸ்டன் பொது நூலகத்தில் ஜிப்ரானின் விசிறிகள் 500 பேரளவில் கூடினார்கள். இந்நிகழ்வு அரபு மொழி பேசும் சமூகத்தினராலும், பெரிய பொஸ்டனிலுள்ள அமெரிக்க - லெபனானிய சமூகத்தினராலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வொன்று கூடல் ஒரு வரவேற்புக் கூட்டத்தை நடாத்தியதுடன் ஜிப்ரானின் பதினெட்டு ஓவியங்களையும், ஜிப்ரான் பிறந்த இடமான லெபனானின்* Bsharri *என்ற இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் காட்சிக்கு வைத்திருந்தது.*

*பொஸ்டன் கலீல் ஜிப்ரானை தன் சொந்தப் பிள்ளையாகவே அழைக்கிறது. அது ஒரு வெறும் விழாவுடன் மட்டும் தன்னைப் போதுமாக்கித் திருப்திப்பட்டுக் கொள்ளவில்லை. நேர்காணல்கள், தொலைக்காட்சி விஷேட இசை நிகழ்ச்சிகள், ஷர்வாட் வைட்னர் நூலகத்தின் பேராசிரியர் பௌசி அப்துர் ரஸ்ஸாக்கின் ஜிப்ரான் பற்றிய உரை என்பவற்றையும் நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. ஜிப்ரானின் காதல், திருமணக் கவிதைகள் பொஸ்டனின் இசையமைப்பாளரும், பிரபல பியானோக் கலைஞருமாகிய* Minuetla Kessler *ஆல் பாடல் வடிவம் பெற்று* Leslie Holmes *ஆல் பாடப்படவுமுள்ளது.*

*ஐக்கிய அமெரிக்காவிலும் இவ்வாறுதான் பல நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. ஜிப்ரானின் ஓவியங்கள், புகைப்படங்கள், ஏனைய வெளியீடுகள் அடங்கிய கண்காட்சியொன்று சிக்காகோ, டெட்ரொய்ட், நியுயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ், வாஷிங்டன், பீட்டர்ஸ்பேர்க் போன்ற இடங்களில் நடைபெறவுள்ளதாக லெபனானின் முன்னாள் உல்லாசப் பயணத் துறை, தகவல் துறைப் பணிப்பாளர்* Percy Dahan *தெரிவித்துள்ளார்.*

*(தொடரும்)*

எம்.கே.எம். ஷகீப்

14 இதழ் - 212, டிச. 03 - டிச. 09, 2000 சரிநிகர்

# தேங்காய்ச் சொட்டு

அம்மா ஒவ்வொரு நாளும் எரிச்சலோடும், சலிப்போடும் புறுபுறுத்துக் கொண்டிருப்பா. அம்மாவின் ஒன்றும் செய்ய முடியாத நிலைமை எரிச்சலாக உருவெடுத்து வார்த்தைகளுடன் இணைந்து கொள்ளும்.

'அரிசிப்பையை ஓட்டை போட்டுட்டுது'

'அப்பளத்தை காணேல்லை..'

'தேங்காய்ப் பாதியை சுரண்டிப் போட்டுது'

இவ்வாறு பொழுதெல்லாம் ஓயாத அம்மாவின் முணுமுணுப்பு தொடரும்.

உண்மை தான்! இதற்கு என்ன செய்வது? ஒரு நாள் என்றாலும் சமாளித்துக் கொள்ள முடியும். கழியும் நாட்களெல்லாம் இதே தொந்தரவென்றால் யாரால் தான் பொறுத்துக் கொள்ள முடியும்.

எனது சிந்தனை இதற்கு வழி காண்பதற்கான வாசலை விசாரித்துக் கொண்டிருந்தது. தவித்துக் கொண்டிருந்த சிந்தனை நிலைத்திருந்த பார்வையுடன் இணைந்த போது எலிப்பொறி தென்பட்டது.

எனது மனம் வேதனைப்பட்டாலும், 'ம்.. வேற என்னத்தைச் செய்யிறது....' புத்தி சமாதானம் சொல்லியது.

அணில் தேங்காய்ச் சொட்டினுடைய அதுவும் சுட்டு தேங்காய்ச் சொட்டினுடைய வாசத்திற்கு கட்டாயம் வரும் என்பது எனக்குத் தெரியும்.

இந்த அணில் தேங்காய்ச் சொட்டை மணந்து வருவதை நினைக்கும் போது எனது மனம் என்னைக் குத்தியது.

"நாங்கள் எந்தச் சொட்டைப் பார்த்து வந்தனாங்கள்.... எண்டு எனக்கு மட்டுமில்ல.... வந்த எல்லாருக்கும் பிறகு கூட விளங்கேல்லைத் தான்...."

"சரி.. வந்தது தான் வந்தம். ஆனா.. இங்க அந்த அணில் மாதிரி என்ன தொந்தரவு செய்தனாங்கள்...?

நான் என்னையே கேள்வி கேட்டு நொந்து கொள்ள வேண்டிய நிலை.

என்னுடைய அப்பா அடிக்கடி கூறும் வார்த்தை என் நினைவில் இன்றும் தெளிவாய்ப் பதிந்துள்ளது.

"நாங்கள் ஒருத்தற்றை சோலிக்குக் கூட போக மாட்டம். நாங்களும் எங்கட பாடுமெண்டு சொன்னதைக் கேட்டுக் கொண்டு இருப்பம்..."

இந்த வார்த்தைகளுக்கு மாறாய் நடந்ததாக எனக்கு ஞாபகமில்லை.

நான் அந்த அணிலைக்கூட எவ்வளவு தடவை யோசனை செய்து மனம் வராமல் இறுதியா அதனுடைய தொந்தரவு பொறுக்க முடியாமல் தான்.

"ஆனா... நாங்கள்...?"

மீண்டும் மனம் கேள்வியில் சிக்குப்பட்டது.

"இவங்கள் எங்களை இப்படிச் செய்யிறதுக்கு முன்னால நான் அந்த அணிலுக்காக யோசிச்ச மாதிரி யோசிச்சிருப்பாங்களே....?"

அவ்வாறு சிந்திக்கக் கூடியவர்களாக அவர்கள் இல்லை என்பது எனக்கும் தெரியும்.

ஆனால், மனம் மீண்டும் மீண்டும் இந்த விடயத்தில் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

நான் அந்தப் பொறியை ஏற்றி வைத்துவிட்டுப் பட்ட வேதனை எனக்குத் தான் தெரியும்.

அணில் 'கீச்... கீச்..' என்று கத்தும் போது எனது இதயம் ஒரு விநாடி தவறி பின் இயங்கியது. பொறுக்க முடியாமல் பொறியை விடுவித்து விடலாம் என்று கூட நினைத்தேன்.

இடைக்கிடை பொறிவைத்த இடத்தை ஓரக்கண்ணால் அவதானித்துக் கொண்டிருந்தேன்.

அணில் வரவில்லை. எனக்கு அவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கத் தைரியமில்லை. மனம் உணர்வுச் சுழிப்பால் தளம்பியது. எழுந்து சென்று விட்டேன்.

என்னையும் என்னுடைய சிநேகிதியையும் பிடித்துச் செல்லும் போது எனக்கு இவ்வாறான நினைவுகள் ஒன்றும் வரவில்லை.

மெல்லியதான பயந்தான் இருந்தது.

விசாரித்தபின் விட்டுவிடுவார்கள் தானே என்ற நம்பிக்கையும் சிறிது இருந்தது.

ஆனா, நாலைஞ்சு பேர் எங்களை..."

எனக்குள் பயங்கரமான ஏதேதோ நினைப்புகள்.

யாரோ என்னைக் கையைப் பிடித்து இழுத்து வந்து இருட்டிற்குள் தலைகுப்புற தள்ளிவிட, காரிருட்டு இலக்கின்றி என்னை எங்கோ இழுத்துச் செல்வது போலிருந்தது.

என்னைச் சுற்றி வர பேயுருவங்கள் நின்று குதித்தாடுவது போன்ற பிரமை.

என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை.

மரத்துப் போனமாதிரி... ஏதோ ஒன்று என்னைக் கௌவிப் பிடித்துக் கொண்டது போல....

அந்த நேரத்திலும் எனது மனம் வினாப்பொறியில் மாட்டிக் கொண்டது.

"நான்... இல்லையில்ல.. நாங்கள்... அப்படி என்ன தான் செய்தனாங்கள்...?

அதற்கு இப்போது கூட பதில் கிடைக்கவில்லை.

"நான் அந்த அணிலுக்கு வச்ச பொறியை எடுத்து விடுவமோ எண்டு யோசிச்ச மாதிரிக் கூட அவங்கள் யோசிச்சிருப்பாங்களோ..."

நிச்சயமாகத் தெரியும். அவர்கள் அதைப் பற்றிய சிந்தனையிலே இருந்திருக்க மாட்டார்கள். இது புரிந்தபோது முன்பு கேள்விப்பட்ட வடிவங்கள் ஓர் புரியும் வடிவமாய் இணைந்து கொண்டது.

எனது மனம் கழிவிரக்கத்தால் வெந்து கொண்டிருந்தது.

"நான் அந்த அணிலைப் பிடிச்சு வச்சு...

ஒரு சித்திரவதை கூடச் செய்யேல்லை... அதைச் சீண்டிவிட்டு வேடிக்கை பாக்கேல்ல.. அதுக்குப் பல்லால கடிக்கேல்ல...

நெருப்பால சுடேல்ல... அடிக்கக்கூட இல்லை.... அதின்ர தன்மானத்தைச் சுடுறமாதிரி மானத்தோட விளையாடேல்ல...."

ஒரே ஒரு சத்தம் தான் கேட்டது.


"படார்..."

ஓடிச்சென்று பார்த்தேன். தலை பொறியினுள் மாட்டிக்கொள்ள, பொறியை ஒரு சுற்றுச் சுற்றி இழுத்துப் பின் உயிரடங்கியது. கண நேர சம்பவந்தான்.

"ஆனா.. அவங்கள் எங்களை நாள் முழுக்க அறையுக்குள்ள அடைச்சு வச்சு... வாறவங்கள் போறவங்களெல்லாம்...."

மீண்டும் மனம் தனது வழியில் சறுக்கியது. அவையெல்லாம் சொல்லி இப்போது என்ன பயன்?

இப்போது கூட, அவற்றையெல்லாம்



நினைவு தீண்டும் போது? முகம் உடம்பெல்லாம் தீப்பிடித்துக் கொண்ட உணர்வை தவிர்க்க முடியவில்லை.

"ஆரம்பத்தில பெருங் குரலில அலறினனாங்கள் தான்..... ஆனா... போகப் போக குரல் வரேல்ல... எவ்வளவு நேரமெண்டு அலறுறது... தொண்டை வறண்டு போட்டுது..... உடம்பெல்லாம் கந்தலாய்ப் போன மாதிரி தொய்ஞ்சு கிடந்தது. வேதனை... உடம்பெல்லாம்

ந. மயூரதான்

நோ.... அசைய முடியேல்லை... நெருப்புப் பிடிச்சமாதிரி ஒரு உணர்வு. கண்களில் சூடாக கண்ணீர் கரை உடைத்து வழிந்தது..."

மனம் அழத்தொடங்கியது.

எனக்கு என்னிலேயே ஆத்திரம் வந்தது.

"ஏன் இன்னும் உயிர் போகேல்ல....?"

அணில் பொறியில் மாட்டியவுடன் நான் அம்மாவைக் கூப்பிட்டேன். அதை வெளியில் கொண்டு போகும்படி கத்தினேன்.

அம்மா குசினிக்குள் இருந்தபடியே என்னையே தூக்கிச்சென்று எறியச் சொன்னா.

"ஐயோ எனக்குத் தெரியாது..."

என்றவாறு நான் அந்தத் திசையில் பார்க்காமல் வெளியில் ஓடினேன்.

பின்பு அதனை தம்பிதான் எடுத்துச் சென்று வெட்டிப் புதைத்தான்.

அன்று நான் திரும்ப வீட்டினுள் சென்ற போது பார்த்தேன். அது சிறிது பெரிய அணில் போன்று தெரிந்தது.

வளையில் இருந்தவாறு வாலைத் தூக்கி அடித்தபடி 'கீச் கீச்..' என்று கத்தியவாறிருந்தது.

"அது தாயணிலாக இருக்குமோ.. ஓ.. அது தான்.

அந்த... அடிபட்டுச் செத்ததின்ர தாய்"

அது அன்று முழுவதும் அந்த இடத்தில் நின்றபடி வாலை அடித்துக் கத்தியபடி இருந்தது.

இடைக்கிடை வளையில் அங்குமிங்கும் ஓடியபின் திரும்பவும் வந்து நின்று கத்தியது. அது தன்னுடைய குட்டி அணிலை கூப்பிடுவது போல் எனக்குத் தோன்றியது.

நிலை கொள்ளாமல் அது தவித்துக் கொண்டிருக்கின்றது என்பதை நான் ஊகித்தேன்.

எனக்கு மிகுந்த கவலையாக இருந்தது. அந்த தாயணில் அழுகின்றது போன்ற நினைப்பு.

எனக்கு அன்று நித்திரையே வரவில்லை.

அழுதபடியே படுத்திருந்தேன்.

இப்போது எனக்கு அந்த தாயணிலை நினைக்கும் போது என்னுடைய அம்மாவின் நினைவு தான் வரும்.

எத்தனை நாட்கள் வாசலைப் பார்த்தபடியே சாப்பாடில்லாமல் சுருண்டிருப்பா. எத்தனை இரவுகள் நித்திரையில்லாமல் கண்ணீர் விட்டு புலம்பியிருப்பா.

எனக்கு இப்போதும் கவலையாகத்தான் இருக்கின்றது. எங்களுக்கு முதல் புதைத்தவர்களையெல்லாம் கண்டுபிடித்து யாரென்று ஆராய்கின்றார்கள்.

அம்மாவுக்கு அது என்னுடைய நினைவை இன்னும் நன்றாக கிளறிவிட்டிருக்கும்.

"அங்கே என்னை அடையாளம் காண அம்மா காத்துக் கொண்டிருப்பா.

அது சரி.

அந்தக் குட்டியணிலினுடைய கதி மற்றைய அணில்களுக்கும் தெரிந்திருக்குமோ?

தெரிந்திருக்காதெண்டு தான் நினைக்கிறேன்.

அப்பிடித் தெரிஞ்சிருந்தா தேங்காய்ச் சொட்டை திரும்பிப் பாக்குங்களே?

ஆனா..."

மனம் நினைவுக்குள் மூழ்கி மீண்டும் எழுந்தது.

"ம்.. எனக்கேன் மற்றாக்களைப் பற்றிக்கவலை...?"

அம்மாவ நினைக்க...

ஓ.... அந்தக் குட்டியணிலின்ர உடல்கூட்டை கடைசி வரையும் தாயணில் கண்டிருக்காது...

அது மாதிரி அம்மாவும்... மீண்டும் நினைவுகள் என்னை கவலைக்குள்ளாக்கியது.

பிரசன்ன விதானகேயின் 'புரஹந்த களுவர' (பௌர்ணமி இரவில் ஒரு மரணம்) திரைப்படம் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டு மூன்று மாதங்கள் பூர்த்தியாகி விட்டன. இச்சம்பவம் இப்பொழுது பலராலும் மறக்கப்பட்டு விட்டது. 'புரஹந்த களுவர' திரைப்படம் மீண்டும் திரையரங்குகளில் காட்டப்படுமா என்பதும் சந்தேகமாகவே உள்ளது.

பிரசன்னவின் 'பவுரு வளலு' (கோட்டை மதில்) திரைப்படம் இம்முறை விசேட ஜனாதிபதி நடுவர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டது. எனினும் அவ்விருதை ஏற்றுக் கொள்ள பிரசன்ன விழாவுக்குச் சமூகமளிக்கவில்லை. பல சிக்கல்கள், முரண்பாடுகள் இருந்த போதிலும் ஒரு கலைஞரின் இதயத்தை அமைதிப்படுத்தத் தான் இயலுமா? அவர் பேசுகிறார்.



# இலங்கையில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது!

*புரஹந்த களுவர திரைப்படம் தடை செய்யப்பட்டு இப்பொழுது மூன்று மாதங்களாகி விட்டன. இந்த அரச தணிக்கையின் அடிப்படையில் நிலவும் அராஜகம். அவநம்பிக்கை பற்றி ஒரு கலைஞர் என்ற வகையில் உங்களது அபிப்பிராயம் என்ன?*

சமூகத்தை அனுபவ அறிவோடு உற்றுப் பார்க்க இச்சம்பவம் என்னைத் தூண்டுகின்றதெனலாம். இது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. நாம் ஏதோவொரு வகையில் மௌனத்தையே கடைப்பிடித்திருக்கின்றோம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. உண்மையில் அதற்குச் சவாலிடும் ஒரு சந்தர்ப்பம் என்றும் இதனைக் கூறிக்கொள்ளலாம். இது ஆச்சரியப்படக் கூடிய விடயமல்ல. இந்தத் திரைப்படம் சர்வதேச விருதுகளைப் பெற்று வந்ததால் இப்படத்திற்கு சிக்கல் ஏற்படாது என எவராவது நினைத்திருந்தால் அது தவறு என்றே கூற வேண்டும். லெனின் கூறினார்: முழு இயங்கியலின் இருப்புக்கு தடையாகவிருக்கும் எந்தவொரு காரணகாரியத்திற்கும் இறுதியில் ஏற்படக் கூடிய விளைவு இதுவாகத் தானிருக்கும்.

*இத்தடைக்கு எதிராக தொடர்பூடகங்கள் மற்றும் கலைத்துறையில் போதுமானளவு குரல் எழுப்பப்பட்டது எனக் கருதுகின்றீர்களா?*

இங்கு தொடர்பூடகம் மற்றும் கலைத்துறையைச் சேர்ந்த சில குறிப்பிட்ட நபர்களே ஒன்று திரண்டனர். இவ்வாறான திரைப்படங்கள் தடைசெய்யப்படும் சூழல் எங்களுக்கு ஆபத்தானது அல்ல எனக் கருதும் நபர்கள் இருக்கும் நிலையில், இவ்வாறான தடைகள் தமக்கு ஆபத்தானது என உணர்ந்தவர்கள் மட்டும் தான் ஒன்று திரண்டனர். திரைப்படத்திற்கு எதிரான எதிர்விளைவுகளும் முழு இருப்புக்கும் பிரச்சினையாகும்.

*புரஹந்த களுவர திரைப்படத்தில் போரினால் பாதிக்கப்படும் ஒரு வறிய கிராமத்தின் சம்பவம் சித்திரிக்கப்படுகின்றது. இவ்வாறான கிராமங்களைச் சேர்ந்த மக்களின் காதில் விழும் சமய போதனைகளில் அகிம்சை, கருணை, மற்றும் தானம் போன்ற விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன. எனினும் பௌத்தசமயவாதிகள் அப்போதனைகளினூடு போரை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றனர். அதற்காக முன்னிற்கின்றனர். இதில் முரண்பாடுகள் உண்டல்லவா?*

ஆரம்ப காலங்களில் மதத்தில் காணப்பட்ட தத்துவார்த்த நடைமுறைகள் தற்போது மறைந்து போய் விட்டன. நிறுவனங்களினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கவிருந்த மத அமைப்புகள் இன்றில்லை. சில மதங்கள் அதன் அடிப்படைகளை மறந்து அரச நிறுவனங்களாக மாறிவிட்டன. நீங்கள் குறிப்பிட்ட முரண்பாட்டிற்கு இது தான் காரணம்.

*புரஹந்த களுவர திரைப்படத்தின் கெமரா வுள்ளது. இது உங்கள் அடையாளப்படுத்தலின் இயல்பா?*

இத்திரைப்படத்திற்கு விருது கொடுத்த வேளையிலும் இவ்விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது. திரைப்படத்தின் ஒத்திசைவானது அதன் பிரதான பாத்திரத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அவர் கண் பார்வையை இழந்தவர். மிகவும் மெதுவாக தட்டித் தடுமாறி நடந்து செல்லும் இயல்பு கொண்டவர். அவரது நடத்தை, சலனம் மற்றும் மனநிலையின் அடிப்படையில் திரைப்படத்தின் ஒத்திசைவு காணப்பட்டது. நீங்கள் காவியப் பண்பு பற்றிக் குறிப்பிட்டீர்கள். திரைப்படங்களில் இந்தப் பண்பு கதையின் சுருக்கத்தன்மைக்கேற்ப மாற்றமுறும். சில காட்சிகளின் மூலமாயினும், பரந்த விடயத்தைப் பற்றி கூறக் கூடியதாக விருப்பது வெற்றிக்கு அடிப்படையாகும். இது பற்றிய சிறந்த அடிப்படைகளை ரே, குரசோவா மற்றும் போலந்து திரைப்படவியலாளர் கிசலொவிஸ்கி போன்றவர்களிடமிருந்து காணலாம்.

திரைப்படத்தை நிரப்புவதை விடுத்து ஒரு தனித்த சம்பவத்தினால் மனித இயல்புகளும் தனிநபர் நடத்தைகளும் காட்சிப்படுத்தப்படலாம். இத்திரைப் படத்தில் பிரதான பாத்திரமான வன்னிஹாமி இராணுவத்தில் இருந்து மரணமாகி விட்டார் என கருதும் தன் மகனுக்காக வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகையை நிராகரித்து விடுகின்றார். இந் நிராகரிப்பை மற்றவர்கள் உணரும் வகை, காணும் வகை திரைப்படத்தில் சித்திரிக்கப்படுகின்றது. திரைப்படத்தில் சம்பவங்களை நிரப்பி விட்டால் உயிர்ப்பு இருக்காது. இதன் காரணமாக நான் காட்சிப்படுத்தப்படும் சூழலுடன் ஒன்றிப்போக முனைந்தேன். மக்கள் மத்தியில் சென்று அவ்வியல்புகளின் அடிப்படையில் திரைக்கதையைக் கட்டியெழுப்பினேன். இத்திரைப்படத்தின் திரைக்கதை முதல் காட்சிப்படுத்தல்கள் நிறைவுற்ற பின்னரேயே பூர்த்தி செய்யப்பட்டது. இதனை கெமராவினால் எழுதப்பட்ட திரைக்கதை என்று கூறுவதில் தவறில்லை.

*கெமராவை அடிப்படையாகக் கொண்ட திரைக்கதைக்கென நீங்கள் புதிய ஐரோப்பிய திரைப்படவியலாளர்களின் அடிப்படையை பின்பற்றினீர்களா?*

விசேட பயிற்சி, அடிப்படை எதனையும் பெறவில்லை. எனது திரைப்படத்திற்கு அனுமதி கிடைக்காது என எனக்குள் ஒரு பீதி நிலவியது. அப்பொழுது இவ்வாறான விசேட சந்தர்ப்பங்களில் கலைஞர்கள் எவ்வாறு முகம் கொடுத்துள்ளனர் என்பதைப் பற்றி எண்ணத் தோன்றியது.

சீன திரைப்படத்துறையின் ஐந்தாவது பரம்பரையை எடுத்துக் கொண்டால், ஷான் இமு, சென் காயிக ஆகிய இருவரின் திரைப்பட படைப்பில் பாதிப்பு செலுத்திய காரணி ஒன்று காணப்பட்டது. அது தான் கலாசார புரட்சி. அவர்கள் நாகரீக இளைஞர்களாக மத்தியதர வர்க்கப் பின்னணியில் இருந்து வந்தவர்கள். கலாசார புரட்சியின் காரணமாக இவர்கள் தூரப்பிரதேச கம்யூனிஸ்டுகளுடன் சென்று வேலை செய்ய நேர்ந்தது. மாவோவின் பிரதான கோஷமாக இந்த கலாசாரப் புரட்சியே காணப்பட்டது. இவர்கள் கிராமத்திற்குச் சென்றவுடன் நகரத்தில் இருக்கும் வாழ்க்கை முறை அல்லது கட்சியினால் சுட்டிக் காட்டப்படும் வாழ்க்கை அங்கில்லை என்பதை உணருகின்றனர். இதனால் அவர்களது திரைப் படைப்புகளில் புதிய அர்த்தங்கள் தொனிக்க ஆரம்பித்தன.

இயக்குனர் என்ற பட்டத்தை இறக்கி வைத்து விட்டு மக்கள் மத்தியில் செல்ல இவ்வாறான சம்பவங்கள் என்னைத் தூண்டின. மதவாச்சிக்குச் சென்ற போது அரைகுறையாக கட்டப்பட்ட வீடுகள் பலவற்றைத் தான் காணக் கிடைத்தது. ஏன் இவ்வாறு அரைகுறையாகக் கட்டியுள்ளீர்கள் எனக் கேட்டபோது இவை சிப்பாய்கள் கட்ட ஆரம்பித்த வீடுகள் எனப் பதில் வந்தது. அவர்களில் பலர் இறந்து விட்டனர்.

*கிராமத்திற்குள் சென்று அனுபவங்களை உள்வாங்கும் போது உங்களுக்கு ஒரு அந்நியன் என்ற உணர்வு ஏற்படவில்லையா?*

இறந்த சிப்பாய்க்காக நட்டஈடு கிடைக்கும் போது ஏற்படும் எதிர்விளைவுகள் நான் நினைத்ததை விட முற்றிலும் மாறானது என்பதை அந்த கிராமத்திலேயே கண்டு

துறையிலும் கூட தடுப்பூசி போட்டதன் பின்னர் சுயநினைவிழந்து விடுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

*திரைப்படம் காண்பிக்க தடை விதிப்பது குறித்து எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தை நீங்கள் தனிப்பட்ட அபிலாஷைகளுக்கு அப்பாலான ஒரு செயற்பாடு என்ற அடிப்படையிலா காண்கின்றீர்கள்?*

ஆம். தணிக்கை மட்டுமல்ல. நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரச்சினையும். மறுபுறம் எமது கருத்தியல்கள் எவ்வளவு தூரம் தணிக்கைக்குட்பட்டிருக்கின்றது என்பதைப் பாருங்கள். சமூகக் கருத்தியல்கள் எவ்வளவு பிற்போக்குத்தனமாக இருக்கின்றன? புரஹந்த களுவர திரைப் படத்தின் தடையை நீக்க மேற்கொள்ளும் போராட்டம் சமூகத்தின் பிற்போக்குத் தனங்களுக்கு எதிரான போராட்டமாக மாறுவதே இங்கு முக்கியம்.

*இத்திரைப்படத்தை திரையிடுவது குறித்து உத்தியோகபூர்வ நபர்கள் சிலரினூடு வெளிக்காட்டப்படும் அரச மத நிறுவனங்களின் அதிர்ச்சிக்கு காரணமென்ன?*

சிலர் முரண்பட்டாலும் அச்சிலரின் பின்னணியில் இருப்பது சமூக- அரசியல் அடிப்படைகள் எனலாம். அரசு என்ற ரீதியில் எடுத்துக் கொண்டால் இன்று யுத்தம் செய்வதைத் தவிர வேறு வழி அதற்கில்லை. போர் தான் அனைத்திற்கும் அடிப்படையாகி விட்டது. போரைத் தமது இருப்பாக பயன்படுத்திக் கொள்ளும் ஆளும் தரப்பு போரின் ஆதியை, அந்தத்தை சித்திரிக்கும் முயற்சியின் போது அதிர்ச்சி அடைந்து விடுகின்றது. தமது 'சிஸ்டத்திற்கு' சவாலாகும் போது தம்மை பாதுகாத்துக் கொள்ள திருப்பித் தாக்குகின்றது. போர் இப்படிப்பட்டது என்பதை மக்கள் அறிந்து கொள்வதை அவர்கள் விரும்புவதில்லை. இந்தத் தடை மட்டுமல்ல. அதற்கு

*கோணங்கள் பெரும்பாலும் காய்ந்து சருகான மரஞ்—செடிகளையும், காய்ந்து வெடித்த தரையையும், வியர்வையில் குளிக்கும் மனிதர்களையும் காட்சிப் படுத்துகின்றது. திரைப் படத்தின் காட்சிப் பதித்—தல்களுக்கு இவை எவ்வளவு தூரம் பொருந்துகின்றன?*



திரைப் படத்தின் கருத்துக்களை பார்வையாளருக்கு அண்மித்த தாக்க திரைப்படத்திற்குரித்தான ஒரு உலகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. சூழலையும் மனிதரையும் வேறுபடுத்துவதை விடுத்து இணைத்தே சித்திரிக்க வேண்டியுள்ளது. மதவாச்சிக்கு அண்மையில் அமைந்துள்ள இந்தக் குறிப்பிட்ட குக்கிராமத்திற்கு படப்பிடிப்புக்கு என 1997ம் ஆண்டு சென்றேன். மழை இல்லாத காரணத்தினால் அங்கு 3 வருடங்களாக விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை. திரைப்படத்தின் கருத்துக்களுடன் அச்சூழல் நன்கு பொருந்தியது. அங்கு மிகவும் வரட்சியான சூழலைக் காணக் கூடியதாகவிருந்தது. இதனால் புதிதாக எதனையும் உருவாக்கும் தேவை இருக்கவில்லை. வறண்டு கிடக்கும் வயல்வெளிக்கு மத்தியில் சைக்கிள் செலுத்தும் போது அவர்களது இயலாமை தெரிய வருகின்றது. வயல் செழித்து வளர்ந்திருந்தால் இவ்வாறு சைக்கிள் சென்றிருக்க முடியாது!

*திரைப்படத்தை பார்த்துக் கொண்டிருக்கும் போது திரைப்படம் ஒரு காவியத் தன்மையை கொண்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக—*

*மிக உயர்தரமான திரைப்படங்களில் கூட சம்பவங்களின் பரந்ததன்மை காரணமாக இயக்குனர் திரைப்படத்தை நிறைவு செய்ய கடினப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது. ஆனால் நீங்கள் ஒரு தனிப்பட்ட சம்பவத்தை தேர்ந்தெடுக்கிறீர்கள். இதற்குக் காரணம் என்ன?*

நான் முதன்முதல் இயக்கிய "சிசில கினி கனி" திரைப்படத்திலும் அவ்வியல்புகளை காணக் கூடியதாகவிருந்தது. சம்பவங்கள் அதிகம், பாத்திரங்கள் அதிகம். சொல்ல வேண்டிய விடயங்கள் அதிகம். எனினும் மறைமுகமாகக் கூறும் அளவுக்கு, காட்சிகளில் கூற வந்த விடயங்களின் மூலம் கூறாது விட்ட அளவுக்கு இம்முயற்சி வெற்றியளிக்கும் எனலாம். வாழ்க்கை என்பது இது தான் என்பது அப்பொழுது தான் தெரியவரும். நாடகப் பாணி விடயங்களைக் கொண்டு

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# பலஸ்தீனத்தின் வரலாற்றைப் பற்றி.... சில குறிப்புகள்!

— மாயா

அந்த இளைஞனுக்கு ஒரு கனவிருந்தது. தன்னுடைய யூத சமூகத்தினரை எல்லோரும் விரட்டியடிக்கிறார்கள் என உணர்ந்திருந்தான் அவன். ஐரோப்பா முழுவதும் யூதர்கள் மத ரீதியான தாக்குதலுக்கு உள்ளாகிக் கொண்டிருந்தார்கள்.

யூதர்கள் தாங்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பிறர் அறியாதவண்ணம் மறைத்தவர்களாக நாடு விட்டு நாடு ஓடிக் கொண்டிருந்தார்கள். தன்னைப் போன்ற யூத சமூகத்தினருக்குத் தனி



நாடு ஒன்று வேண்டும் என கனவு காண ஆரம்பித்தான் தியோடர் ஹெலிஸ் என்னும் அந்த இளைஞன்.

கனவினை நனவாக்கும் உறுதியும், மனோதிடமும் இருந்தபடியால் விரைவிலே தியோடர் ஹெலிஸ் நூறு பக்கத் திட்டமொன்றை எழுதி முடித்தான். யூதர்களுக்கென்று ஒரு தனி நாடு வேண்டும் என இத் திட்டம் பேசுகிறது.

1897ல் 'முதல் யூதர்கள் உலக மாநாடு' ரகசியமாகத் தியோடர் ஹெலிஸின் தலைமையில் நடத்தப் பெற்றது. இம் மாநாட்டில் இருநூறு பேர்தான் கலந்து கொண்டார்கள். எனினும் பல யூதப் பணக்காரர்கள் தியோடருக்கு ரகசியமாக ஆதரவு தெரிவித்தார்கள்.

இம் மாநாட்டின் முடிவுகளின்படி 'யூதர் தேசிய நிதி' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. உலகமெங்குமுள்ள யூதர்கள் இந்த அமைப்பிற்குப் பணத்தைத் தாராளமாகக் கொடுத்தனர்.

யூதர்களுக்கு தனியே நாடு வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே தவிர, அந்த நாடு எங்குள்ளது என யாருக்கும் தெரியாது. தொடர்ந்து மூன்று, நான்கு



மாநாடுகளில் இதைப் பற்றி விவாதிக்கப்பட்டது.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் குடியேறுவதில் தியோடருக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. யூதர்களின் தாயகம் என்று சொல்லப்படும் பாலஸ்தீனமே யூதர்கள் குடியேறச் சிறந்த இடம் எனத் தியோடர் முடிவெடுத்து அதனை ஏகமனதான தீர்மானமாய் நிறைவேற்றினார்.

அப்பொழுது பாலஸ்தீனம் ஓட்டோமான் துருக்கியர்களின் ஆட்சியின் கீழ் இருந்த பல நாடுகளில் ஒன்றாக இருந்தது. அங்கு குடியிருந்தவர்களில் யூதர்கள் பத்து சதவீதத்திற்கும் குறைவே. மொத்த மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 90 சதவீதம் பேர்.

'நில வங்கி' என்றொரு திட்டம் யூதர்களால் அமல்படுத்தப்பட்டது. அதன்படி 'யூதர் தேசிய நிதி' ஆதரவில் யூதர்கள் அதிகப் பணம் கொடுத்துப் பாலஸ்தீனத்தில் நிலங்களை வாங்கத் தொடங்கினார்கள். படிப்படியாக யூத மக்கள் மெல்லப் பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினார்கள்.

1914-18 ம் ஆண்டு வரை நடந்த முதல் உலகப் போரில் பிரிட்டன் மற்றும் அதன் ஆதரவு நாடுகள் வெற்றி பெற்றன. 1917-ம் ஆண்டு, டிசம்பர் 9 ம் தேதி வெளியிடப்பட்ட பால்ஃபர் பிரகடனத்தின்படி பாலஸ்தீனம் பிரிட்டனின் ஆட்சியின் கீழ் வந்தது.

பிரிட்டன் அரசினுள் தாக்கம் செலுத்துமளவு பல யூதர்கள் இருந்தபடியால் யூதர்களுக்கென தனியே



ஒரு நாட்டைப் பாலஸ்தீனத்தில் ஜோர்டான் நதிக்கரையில் அமைக்க பிரிட்டன் ஒப்புக்கொண்டது.

இதற்குப் பின்னர் பிரிட்டன், அமெரிக்க விமானங்களில் யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு வந்தபடியே இருந்தார்கள். முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்ய ஹகானாஹ் (Haganah) இர்கம் (Irgum) என்று இரு யூதத் தீவிரவாதக் குழுக்கள் இயங்கத் தொடங்கின.

1919-ம் ஆண்டில் 58,000 யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறியிருந்தார்கள். யூதர்களின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இஸ்ஸத்தீன் அல்காசம் என்றவர் தலைமையில் பாலஸ்தீன இளைஞர்கள் ஒன்று திரண்டனர். 1921-இல் தொடங்கிய இவர்களது போராட்டம் 1929-ம் ஆண்டு முழுமையானதோர் கட்டத்தை அடைந்தது. யூதர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த நிலையில், 1935 ம் ஆண்டு, நவம்பர் 19 ம் தேதியன்று இஸ்ஸத்தீன் அல் காசம் கொல்லப்பட்டார். அடுத்த ஆண்டே பாலஸ்தீன முஸ்லிம்களின் புரட்சி முற்றிலுமாக முறியடிக்கப்பட்டது.

இப் புரட்சியை ஆராய பிரிட்டிஷ் அரசாங்கம் 'பீல் கமிஷன்'- ஐ அமைத்தது. 1937- ம் ஆண்டு ஜுலை 7-ம் தேதியன்று பீல் கமிஷன் தனது அறிக்கையை வெளியிட்டது. அதன்படி பாலஸ்தீனத்தை மூன்றாகப் பிரிப்பது என முடிவானது. யூதர்களுக்கு ஒரு பிரிவும், முஸ்லிம்களுக்கு ஒரு பிரிவும், பிரிட்டிஷ் மேற்பார்வையில் ஒரு பிரிவும் உருவாக்கப்பட்டது.

ஹாஜி அமீன் ஹுஸைனி தலைமையில் முஸ்லிம்கள் இந்த அநீதிக்கு எதிராகப் போராடினர். ஹாஜி அமீன் ஹுஸைனி நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து 1939 ம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

இரண்டாம் உலகப் போரில் யூதர்கள் ஜெர்மன் நாஜி படைகளால் வேட்டையாடப்பட்டதைத் தொடர்ந்து, பாலஸ்தீனத்திற்கு வந்து குடியேறிய யூதர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

1946-ம் ஆண்டில் இரண்டாம் உலகப்போர் முடிவின்போது பாலஸ்தீனத்தில் யூதர்களின் எண்ணிக்கை 6,08,000 - ஆக உயர்ந்து விட்டது. அவர்கள் வசம் 9 முதல் 12 சதவீத நிலங்கள் இருந்தன.

1948 ஆம் ஆண்டில் பிரிட்டிஷார் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறினார்கள். புதிதாய் உருவாக்கப்பட்டிருந்த ஐக்கிய நாடுகள் சபையில் பாலஸ்தீனத்தை இரண்டாகப்



பிரிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அன்றைக்கு ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராய் இருந்த நாடுகள் 56. தீர்மான வோட்டெடுப்பில் கலந்து கொள்ளாதவை 10. எதிர்த்தவை 13. ஆதரவாய் வாக்களித்த நாடுகள் 33.

1948 - ம் ஆண்டில் மே 14-ம் தேதியன்று 'இஸ்ரேல்' சுதந்திர நாடாகத் தன்னை அறிவித்துக் கொண்டது. சுதந்திரப் பிரகடனம் முடிந்த சில மாதங்களில், இஸ்ரேலுக்கு எதிராக, எகிப்து, ஜோர்டன், சிரியா, லெபனான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் போர் தொடுத்தன. 15 மாதங்கள் இப் போர் நீடித்தது. அமெரிக்காவின் மறைமுக உதவியால் இஸ்ரேல் வென்றது.

இஸ்ரேல் அரசாங்கம் முஸ்லிம் மக்களின் மேல் கட்டற்ற அராஜகங்களைக் கையாளத் தொடங்கியது. மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அகதிகளாய் முஸ்லிம்கள் 7,50,000 பேர் நாட்டை



விட்டு வெளியேறினர். இஸ்ரேல் வசம் இல்லாத பாலஸ்தீனத்திலும், அருகேயிருந்த அரபு நாடுகளிலும் இந்த முஸ்லிம்கள் குடியேறினர்.

உரிமையாளர்கள் இல்லாத நிலங்களை யூதர்கள் தமதாக்கிக் கொண்டனர். '*Law of Return*' என்னும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தின் சாராம்சம் உலகத்தில் உள்ள யூதர்கள் அனைவரும் இஸ்ரேலுக்கு வரலாம் என்பதே.

நாட்டை விட்டு வெளியேறி இருந்த ஹாஜி அமீன் ஹுஸைனி 1962 ம் ஆண்டு பாலஸ்தீனிய தேசியக் குழுவை (PNC) அமைத்தார். 1962-ம் ஆண்டு இந்த அமைப்பு 'பாலஸ்தீனிய விடுதலை அமைப்பு' (PLO) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த அமைப்பின் ராணுவப் பிரிவு 'பத்தாஹ்' என்றழைக்கப்படுகிறது. இந்த ராணுவப் பிரிவின் முதல் தளபதியாகப் பதவியேற்றவர் யாசர் அராபத்.

1965-ம் ஆண்டிலிருந்து 'பத்தாஹ்' இஸ்ரேலுக்கு எதிரான கொரில்லாத் தாக்குதல்களை நிகழ்த்தியது.

1967-ம் ஆண்டில் இஸ்ரேல் ராணுவம் மிச்சமிருந்த பாலஸ்தீன நிலங்களையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது. ஜெருசலேம் நகரம், எகிப்து வசமிருந்த காசா பகுதி, சினாய் வளைகுடா போன்ற இடங்கள் இஸ்ரேல் வசம் வந்தன. இந்த ஆக்கிரமிப்பை இன்று வரை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.

1949-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நான்காவது ஜெனிவா கூட்ட முடிவுகளின்படி இந்த நில ஆக்கிரமிப்பு ஐ.நா. சபையின் விதிகளை மீறுவதாகின்றது.

இஸ்ரேல் அரசாங்கம் ஜெருசலேமைத் தலைநகரமாக அறிவித்தது. இரண்டு நாடுகள் தவிர ஏனைய நாடுகள் தங்களது தூதரகங்களை ஜெருசலேத்துக்கு இன்றுவரையிலும் மாற்றவில்லை.

இஸ்ரேல் அரசு, (1967 ம் ஆண்டு) ஆக்கிரமித்த பாலஸ்தீன நிலத்தினுள் இன்றுவரை 3,50,000 யூதர்களைக் குடியமர்த்தியிருக்கிறது. பாலஸ்தீன முஸ்லிம் மக்களை வெளியேற்றியபடி உள்ளது.

இன்று பிரச்சனை வேறு ரூபங்களில் வளர்ந்துவிட்டாலும் தொடக்கம் இப்படியாகத் தான் அமைந்தது.

நன்றி: ஆறாம்திணை


நன்றி - நூலகத்திட்டம்



# சியாம் செல்வத்துரையின்

# 'FUNNY BOY'

# 'விசித்திரமான பையன்'




அண்மைக்கால ஆங்கில நாவல்களில் விற்பனையில் அதிக சாதனை படைத்த நாவல்களுள் ஒன்றான சியாம் செல்வத்துரை என்ற இலங்கைத் தமிழர் எழுதிய "Funny Boy – விசித்திரமான பையன்" என்ற நாவலிலிருந்து சில பகுதிகளை சரிநிகர் வாசகர்களுக்காக இவ்விதழிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தருகிறோம். தனித்தனியான ஐந்து குறுநாவல்களின் தொகுப்புப் போல அமைந்துள்ள இந்த நாவலின் ஒவ்வொரு பகுதியும் தனியாக முழுமைபெற்ற படைப்புகளாக இருப்பதால் முதலில் 'பன்றிகளுக்குப் பறக்க முடியாது' என்ற முதலாவது பகுதியை வெளியிடுகிறோம். வாசகர்களின் அபிப்பிராயத்தைப் பொறுத்து அடுத்த பகுதிகளை வெளியிடுவது பற்றி முடிவுசெய்ய உள்ளோம்.

நாவலின் ஆசிரியர் சியாம் செல்லத்துரை 1983 இனக்கலவரத்துடன் இலங்கையை விட்டு வெளியேறி இப்போது கனடாவில் புலம்பெயர் வாழ்வு நடாத்தி வருகிறார். ஒரு பாலுறவு அரசியலும் ஈழத்தமிழர் வாழ்வின் அரசியலும் கலந்த இந்த நாவல் தமிழில் வெளிவருவது மிகவும் பயனுடையதாக அமையும் என்று கருதுகிறோம். ஏற்கனவே சிங்கள மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள இவரது நாவல் விரைவில் புத்தக உருவில் வெளிவர உள்ளது.

ஆ–ர்

## 1. பன்றிகளுக்குப் பறக்க முடியாது

அவை மிகவும் சந்தோசமான நாட்கள். ஒரு நாளை முழுதாக கழிப்பதற்காக நாம் ஒன்று கூடுகிற அந்த நாட்களை நாம் ஒவ்வொருவரும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தோம். நத்தார் பண்டிகையையோ மற்றும் விழாக்களையோ விட்டால் இந்த நாட்கள் தான் மாமா மாமியவை மச்சான் மச்சாள்மார் சித்தப்பா சித்தியவை தம்பி தங்கைகள் என்று எல்லோராலும் மிக அதிகமாக ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நாட்கள் என்று சொல்லலாம்.

பெரியவர்களுக்கு அந்த நாள் தங்களது பிள்ளைகளிடமிருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்கிற ஒருநாள். மாதத்தில் வருகிற ஏதாவது ஒரு ஞாயிற்றுக் கிழமையை இதற்காக அவர்கள் தெரிவு செய்து கொள்வார்கள். இந்த நாளை அவர்கள் எவ்வளவு ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறார்கள் என்பதை வழமையை விட அதிக வேளைக்கே பிள்ளைகளான எங்களை அம்மா நித்திரையிலிருந்து உருட்டி எழுப்புவதைப் பார்த்தாலே விளங்கும்.

பள்ளிக்கூட நாட்களில் என்றால் கொஞ்சம் அதிகமான நேரத்தை வீணடிப்பதற்கு அம்மா எங்களை அனுமதிப்பதுண்டு. ஆனால் இந்த நாட்களிலோவென்றால் எங்கள் காலைக்கடன்களை விரைவாக முடிப்பதற்காக அம்மா எங்களை விரட்டிக் கொண்டே இருப்பா.பிறகு அவசர அவசரமான ஒரு காலைச் சாப்பாட்டுடன் நாங்கள் எங்களுடைய அம்மாச்சியும் அப்பாச்சியும் வசித்து வந்த வீட்டுக்கு காரில் கூட்டிச் செல்லப்படுவோம்.

அப்பாச்சி வீட்டு வாசலில் உள்ள வாசல் சாக்கில் மிகவும் கவனமாக கால்களைத் துடைத்துவிட்டு உள்ளே போனதும் எங்கள் கண்களில் படுவது வீட்டின் மிக நீண்ட இருள் மண்டிய கொரிடோர்தான். கொரிடோரின் ஒரு புறத்தில் வரிசையாக அறைகளும் மறுபுறத்தில் வரவேற்பறையும் சாப்பாட்டறையும் இருந்தன. பழங்காலத்து புகைப்படங்கள் சுவருக்கும் சீலிங்குக்குமாக மாட்டப்பட்டு இருக்கும். மிகவும் உயரமான அந்தச் சீலிங்கில் கொரிடோரில் நாங்கள் நடக்கின்ற காலடி ஓசைகள் பட்டு எதிரொலிப்பதைக் கேட்க எனக்கு கொஞ்சம் பயமாக இருக்கும்.

அம்மாச்சிக்கும் அப்பாச்சிக்கும் வரவேற்பறையில் வைத்துத்தான் நாங்கள் எங்கள் வணக்கத்தைத் தெரிவிப்போம். அந்த அறையும் இருட்டாகவும் பல நாட்களாகத் திறக்கப்படாத பெட்டியில் அடைக்கப்பட்டிருந்த உடுப்புகளிலிருந்து ஒருவகை வாடை வீசுமே அந்த மாதிரி ஒரு மணம் வீசுவதாகவும் இருக்கும். அங்கே அம்மாச்சியும் அப்பாச்சியும் பெரிய சாய்மனைக் கதிரைகளில் சாய்ந்தபடி அமர்ந்திருப்பார்கள்.

அப்பாச்சி அனேகமாக பத்திரிகைக்குள் மூழ்கியிருக்கும் தனது கண்களை சற்று நிமிர்த்தி "ஆ.. ஹலோ.. ஹலோ" என்று கூறிவிட்டு மீண்டும் பத்திரிகைக்குள் மூழ்கிவிடுவார். ஆனால் அம்மாச்சி தனது சுட்டு விரலையும் நடுவிரலையும் அசைப்பதன் மூலமாக தன்னை நோக்கி வரும்படி சைகை காட்டுவா. நாங்கள் பயத்தில் எங்கள் கால்கள் மெல்லியதாக நடுங்க அவவுக்கு அருகில் செல்வோம்.

அவவின் கதிரைக்குப் பின்னாலுள்ள உடுப்புகள் வைக்கப்பட்டிருக்கும் உயர்ந்த அலுமாரியுள் இருக்கும் பிரம்பு பற்றிய எண்ணம் எங்களது மனதில் எப்போதும் பெருங் கிலேசத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். அவ தனது தசைப்பிடிப்பான கைகளால் ஒவ்வொருவராக எங்களது முகங்களைப் பிடித்து கன்னத்தில் எச்சில் பட முத்தம் கொடுத்துவிட்டு "என்னுடைய வயதான காலத்தில் என்னைக் கவனித்துக் கொள்ளவென்று கடவுள் எனக்கு பதினைஞ்சு பேரப் பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்திருக்கிறார்" என்று சொல்லுவா. அவவிடமிருந்து தேங்காயெண்ணையின் மண்டியின் நாற்றம் வீசிக்கொண்டிருக்கும்.

அதுமட்டுமல்லாமல் அவவின் மூக்கிலிருக்கும் வைர மூக்குத்தி அவ முத்தம் கொடுக்கிற நேரமெல்லாம் என்னுடைய கன்னத்தில் அழுந்திப் பதிந்து நோகவைக்கும்.

எங்களது அப்பா அம்மாமார் எங்களை விட்டுவிட்டு தங்களது கார் ஜன்னல்களுக்கூடாக கைகளைக்காட்டி சந்தோசமாக விடை பெறுகையில் நாங்கள் கொஞ்சங் கூடக் கவலையில்லாமல் புறப்பட்டுக் கொண்டிருக்கும் கார்களைப் பார்த்தபடி பதிலுக்குக் கையசைத்து வழியனுப்பி வைப்போம். மாதத்தில் ஒரு சந்தோசமான நாள். பெற்றோரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட, அவர்களது கண்களுக்கோ கோழ்மூட்டுகின்ற வேலைக்காரர்களின் நாக்குகளுக்கோ மாட்டுப்படாத ஒரு நாள்.

ஆனாலும் நாங்கள் முற்றுமுழுதாக தனியாக விடப்பட்டு விட்டதாக சொல்ல முடியாது. அப்படி சுதந்திரமாக விடப்படுவது தான் எங்களுக்கு மிகவும் ஆசையாக இருந்திருக்கும். ஆனால் அம்மாச்சியும் ஜானகியும் எங்களுக்குப் பொறுப்பாக இருந்தார்கள். ஜானகி பதினைந்து மேலதிக ஆட்களுக்குச் சமைக்கிற பொறுப்புக்காகச் சபிக்கப்பட்டிருந்ததால் அவளுக்கு எங்களை மேற்பார்வை செய்ய நேரமிருப்பதில்லை. உண்மையில் எங்களது எந்த விடயத்திலும் தலையிடாமல் இருப்பதையே அவள் விரும்பினாள்.

எங்களுக்குள் வருகிற ஏதாவது ஒரு பிணக்கைத் தீர்க்க அவளைக் கூப்பிட்டாலோ கறிக்கு அரைத்துக் கொண்டிருந்த அரையலின் சிவப்புநிறம் பிரண்டிருக்கும் கைகளுடன் ஓடிவருவாள். வருகிற பாதையில் முதல் அகப்படுகிற ஆளைப்பிடித்து காதைப்பொத்தி விளாசிவிடுவாள். இனியில்லை என்ற ஒரு அவசரம் என்றாலொழிய அவளைக் கூப்பிடக்கூடாது என்று நாங்கள் நன்றாகப் புரிந்து வைத்திருந்தோம். அம்மாச்சியை எந்தக் காரணத்துக்காகவும் கூப்பிடுவதில்லை என்று எங்களுக்குள் பேசிக் கொள்ளப்படாமலே ஒரு புரிந்துணர்வு இருந்தது.

நாடோடிக் கதைகளில் வரும் பூமித்தாயைப் போல அவ அவவின் அமைதி நிலையிலிருந்து குலைக்கப்படக் கூடாது. அப்படிச் செய்வது ஒரு பூமியதிர்ச்சியைத் தூண்டிவிடுகிற செய்கையாகும்.



அம்மாச்சியினதோ அல்லது ஜானகியினதோ தலையீட்டைக் குறைத்துக் கொள்வதற்காக எங்கள் பிணக்குகளைக் கையாளவென்று நாங்கள் எங்களுக்குள் ஒரு வழிமுறையை உருவாக்கி வைத்திருந்தோம். இந்த வழிமுறையை நாங்கள் இரண்டு விடயங்களை வைத்து உருவாக்கியிருந்தோம். ஒன்று நில எல்லையுடன் சம்பந்தப்பட்டது. மற்றது தலைமைத்துவத்துடன் சம்பந்தப்பட்டது.

நில எல்லையைப் பொறுத்தவரை அப்பாச்சி வீட்டைச்சுற்றி உள்ள நிலப்பரப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. முன்தோட்டம், வீதி, வீட்டுக்கு முன்னாலுள்ள பகுதி எல்லாம் பெடியங்களுக்கென்று ஒதுக்கப்பட்டது. பெடியங்களின் குழுவில் மீனாவும் இருந்தாளென்ற போதும் இது பெடியங்களின் பகுதியென்று அழைக்கப்பட்டது. இந்தப் பகுதியில் அதிகாரத்திற்காக இரண்டு பிரிவுகள் போட்டி போட்டன. ஒரு பிரிவுக்கு மீனா தலைமை தாங்கினாள்.

மற்றப் பிரிவுக்கு எனது அண்ணா வருணா தலைமை தாங்கினான். அண்ணாவிடமிருந்த ஒரு பழக்கம் காரணமாக அவனுக்கு மூக்குத் தோண்டி என்று மறுபெயரிடப்பட்டது. பிறகு அந்தப் பேர் வெறும் தோண்டி என்று ஆகிவிட்டது.

இரண்டாவது எல்லை பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. இந்தக் குழுவில் பெடியனான நானும் இருந்தேன். பெண்களின் இந்தப் பிரிவு பின் தோட்டத்தையும் குசினியின் பின்புறத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது!

வரும்

நன்றி - நூலகத்திட்டம்

# உரைக்குறிப்பு

– வேலோன்

## பிறந்த மண்: அறிவுபூர்வமான அணுகுமுறை!

எண்பதுகளில் தமிழ் எழுத்துக்களின் விரிவாக்கத்துக்கு அக்காலகட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல புதிய சிந்தனைகளும் துணைபோவனவாக அமைந்திருந்தன. இவற்றுள் அதிகாரப்பட்டு விளங்கியவையாக பின் நவீனத்துவம், பின் அமைப்பியல் வாதம், ஆகியவற்றுடன் பெண்ணிலைவாதத்தையும் குறிப்பிடலாம்.

பெண்களின் விழிப்புணர்வானது இயல்பான வாழ்வுடன் போராட வேண்டிய நிர்ப்பந்தத்தினை புனைகதைகளூடாகப் பகிர்ந்து கொள்வதோடு வாசகரிடமும் அந்த உணர்வினைக் கிளறச் செய்ய பல பெண் எழுத்தாளர்கள் முனைந்தாலும் யோகா பாலசந்திரன், பத்மா சோமகாந்தன், நயிமா சித்திக், மண்டூர் அசோகா, கோகிலா மகேந்திரன் போன்ற சிலரே முந்திய பவானி ஆழ்வாப்பிள்ளை, கவிதா முதலானோரின் தொடர்ச்சியில் இலக்கிய கவனத்தை ஈர்த்தவர்கள் ஆகின்றனர்.


செ.கணேசலிங்கன் போன்ற ஆண் எழுத்தாளர்களும் பெண்ணியம் பற்றி பேசியிருந்தாலும் அதற்கும் அப்பால் பெண்களின் உணர்வுகளை, அவர்களது இயல்புகளை துலாம்பரமாக பெண்களால் தான் உருவகிக்க முடியும் என்பதையே பெண் எழுத்தாளர்களின் பிரசவங்கள் காட்டுவதாக அமைந்திருந்தன.

"ஊடகங்கள் பெரும்பாலும் பெண்களைப் பாலியல் பிம்பங்களாக உருவகிப்பதையே தொடர்கின்றன!" என்ற கோஷத்துடன் பெண் எழுத்தாளர்கள் முன்வைக்கும் இலக்கியங்கள், குடும்பம் எனும் வட்டத்திற்குள் அவர்களது இருப்பு பற்றியும் அதனாலான மன அழுத்தங்கள் மற்றும் முரண்பாடுகள் பற்றியுமே பேசுவனவாக அமைகின்றன.

இத்தகைய இலக்கியப் போக்கு ஒன்றிற்கு உரமாக எத்தனிக்கும் சில கதைகளுடன் புர்கான்பீ இஃப்திகார் தனது 'பிறந்த மண்' தொகுதியினை வெளிக் கொணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கதாய் அமைந்துள்ளது. 1992 முதல் எழுதுவதாக குறிப்பிடும் புர்கான்பீ கடந்த எட்டு ஆண்டுகளில் தான் எழுதிய பதினான்கு 'தேர்ந்த' சிறுகதைகளைப் பிறந்த மண்ணில் விதைத்துள்ளார்.

நவாசை மணமுடித்து ஒரு வருடம் நிறைவுறமுன் அந்த மணவாழ்வு முறிவினால் சில காலங்களின் பின் சலாகுதீனை மணம் புரிகின்றாள் கரீமா.

அன்று வெள்ளிக் கிழமை ரவணுக்கு அலுவலாக வந்த சலாகுதீன் அப்படியே மனைவியையும் அழைத்துச் செல்லலாம் என்ற நோக்கோடு அவளது ஆபீசிற்கு வருகிறார். 'டைப்பிஸ்ட் கரீமைவைக் கொஞ்சம் பார்க்க



முடியுமா?' என அங்கிருந்த அலுவலர் ஒருவரை அணுகுகிறார் சலாகுதீன்.

"மிஸிஸ் நவாஸ் விசிட்டர் போர் யு", என்று அடிக்குரலெடுத்தார் அந்த அலுவலர்.

முதன் முதலாக ஆபீசுக்கு தன் மனைவியைப் பார்க்க வந்த கணவனால், அவள் மாஜிக் கணவனின் பெயரால் தனக்காக அழைக்கப்பட்டு, தன் முன் நிற்பதை சட்டென ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

கரீமாவுக்கும் அது புரிந்தது.

பெண்களைக் கீழ்மைப்படுத்தும் ஆணாதிக்க முறையும் மனப்பாங்கும் குடும்பத்துள் வரும்போது புர்கான்பீ போன்றோர் காட்டும் அணுகுமுறையே பெண்ணிலைவாத சித்தரிப்புகளில் அவர்களது பங்களிப்பின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பவையாக அமைகின்றன.

"நான் இனி மிஸிஸ் கரீமா மாத்திரமே. சொந்தப் பெயரால் என்னை அழைக்கவும்", என 'நான் கரீமா' எனும் மேற்படி கதையினை புர்கான்பீ முடிக்கும் முறைமை அறிவுபூர்வமான அணுகுதலில் அவருக்குள்ள ஈடுபாட்டினைச் சுட்டி நிற்கின்றது.

வேலைபார்க்கும் மத்தியதர வர்க்கப் பெண்கள் அலுவலகப் பணியுடன் வீட்டிலும் வேலை செய்து இரு சுமைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையினை மிக இயல்பானதாக 'இவள் ஒரு இயந்திரம்' என்ற கதையில் சித்தரிக்க முனைந்திருக்கும் புர்கான்பீ, அற்ப விடயங்களிலும் பெண் எவ்வாறு அவதானிப்பிற்கு ஆளாகின்றாள் என்பதனை இப்படைப்பில் பதிவு செய்ய முற்பட்டுள்ளார்.

இத்தகைய கதை விருட்சங்களை புர்கான்பீயின் பிறந்த மண் கொண்டிருந்தாலும் அவை செழுமை பெற்றிராததன் காரணம் என்ன?

தனது அனுபவங்களை, அதன் தீவிரத்தை உள்வாங்கி அதனை வெளிப்படுத்த முடியாதபடி புர்கான்பீயின் மொழியின் வடிவம் பின்தங்கி விட்டதாலா? அல்லது சிறுகதைகளுக்கு செட்டான, இறுக்கமான உருவம் என்றொரு அமிசமும் அத்தியாவசியம் என்ற பிரக்ஞையுடன் அவர் தனது பேனாவினை ஓட்டாததன் விளைவினாலா?

எது எப்படியாயினும்: பிறந்த மண் என்ற மகுடத்தைத் தாங்கியிருந்தும், எமது பிறந்த மண்ணின் சமகாலப் பிரச்சினைகளைப் பேசாத வகையில் வாசகர்களுக்கு இந்நூல் அளிக்கும் அதிருப்தி: இந்நூலை உதாரணப்படுத்த முடியாமைக்குரிய காரணங்களில் ஒன்றாக நிச்சயம் விளங்குகின்றது.

மொத்தத்தில் முஸ்லிம் பெண்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களால் விளையும் பாதக நிலைப்பாடுகள், முஸ்லிம்களின் இடப்பெயர்வுகளாலான அகதி அந்தஸ்து, எல்லைக்கிராமங்களில் நிகழ்த்தப்படும் உரிமை மீறல்கள் என ஈழத்துப் புனைகதைப் பரப்பில் முஸ்லிம் எழுத்தாளர்களால் இன்னும் புரட்டப்படாத வேண்டிய புதிய அத்தியாயங்களூடாகவும், புர்கான்பீயின் சிந்தனை விரிவடையும்போது சிறந்த வானொலி அறிவிப்பாளர் / தயாரிப்பாளர் போல சிறந்த எழுத்தாளராகவும் அவர் மிளிர வாய்ப்புண்டு என்பதையே பிறந்த மண் எனும் அவரது முதல் முயற்சி எதிர்வுகூறி நிற்கின்றது.

கல்ஹின்னை தமிழ் மன்றத்தினரின் 92ஆவது பதிப்பான பிறந்த மண் நூலின் அதன் அமைப்பு, அட்டைப்படம், அச்சுப்பதிப்பு போன்று குறிப்பிடத்தக்க மற்றுமொரு அமிசம் சிரேஷ்ட அறிவிப்பாளர் சற்சொரூபவதி நாதன் வழங்கியிருக்கும் அணிந்துரையாகும்.

> **பிறந்த மண்**
> சிறுகதைத் தொகுதி
> ஆசிரியர் : புர்கான்பீ இஃப்திகார்
> வெளியீடு : தமிழ் மன்றம்,
> 10, 4 ஆவது ஒழுங்கை,
> கொஸ்வத்தை வீதி,
> இராஜகிரிய.
> விலை : ரூபா 75.00

---

## அங்கையன் கதைகள்

கடந்த 26 ஞாயிற்றுக்கிழமை 3.30 மணியளவில் பெண்கள் கல்வி ஆய்வு நிலையக் கேட்போர் அரங்கில் அங்கையன் கதைகள் விமர்சன அரங்கு இடம்பெற்றது. விபவியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வரங்கு வ.இராசையா அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. பின்வருவோர் பின்வரும் தலைப்புகளில் அதை விமர்சனம் செய்தனர்.

உருவமும் உள்ளடக்கமும் - மு.பொன்னம்பலம், உத்தியும் நடையும் - என்.கே.ரகுநாதன், பாத்திரவார்ப்பு - எஸ்.சித்திரா ரஞ்சன், பெண்ணியம் - தேவகௌரி, சமூக, அரசியல் நோக்கு - ந.காண்டீபன்

பொன்னம்பலம் பேசுகையில் அங்கையனின் கதைகளில் இடம்பெறும் நிகழ்வுகள் யதார்த்தமானவையாக, சதா தமிழ் நிலத்தில் இடம்பெறும் நிகழ்வுகளாக இருந்த போதும் அவற்றை கதைகளில் புகுத்திக் காட்டிய, ஒரேயடியாக ஒன்றுக்குப் பின்னால் ஒன்றை நிகழ்த்திக் காட்டிய முறையினால் அவை தமிழ் சினிமாவில் இடம்பெறும் மெலோட்டமரிக் காட்சிகளாக மாறிவிடுகின்றன என்றும் இதற்கு உதாரணமாக தொகுப்பின் முதல்கதையான 'வினோதவார்ப்பும்' கடைசிக் கதையான 'கடலும் கனவும்' நிற்கின்றன என்றார். ஆயினும் ஓடை, தீரம், இப்படியும் ஒரு மனிதர் போன்ற நல்ல கதைகளும் இதில் உள்ளன என்றும் 25 வருடங்களுக்கு முன் எழுதிய இக்கதைகளைப் பார்க்கும் போது அவர் இன்று இருந்திருந்தால் பெரிய சாதனைகள் செய்திருக்கலாம் என்றே படுகிறது என்று அவர் சொன்னார்.

ரகுநாதன் இக்கதைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இவற்றில் அதிகமாக பாலியல் உறவும் அது தொடர்பான சமூகத்திற்குத் தேவையற்ற கதைகளுமே இருப்பதால் இக்கதைகளில் முற்போக்கு அம்சம் காணப்படவில்லை என்றார். மேலும் ஆசிரியரின் எழுத்துநடையும் நன்றாக அமையவில்லை என்றார்.

பெண்ணிய நோக்குப்பற்றி ஆய்வு செய்த தேவகௌரி ஆசிரியரின் எழுத்து நடை கவித்துவம் உடையதாகவும் அவர் எழுதிய அறுபதுகளின் காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் அது சிறப்பான நடை போன்றே கொள்ளலாம் என்றும் கூறினார். ஆனால், இக்கதைகளில் பெண்களின் இன்ப துன்பங்களை அவள் நிலைநின்று பார்க்கும் தன்மை இடம்பெறவில்லை என்றே கூறினார். இக்கதைகள் அறுபதுகளில் எழுதப்பட்டவை என்று இதற்கு ஆறுதல் கூறினாலும் அக்காலகட்டத்திலும் பவானி போன்றோர் இவற்றை முதன்மைப்படுத்தியுள்ளனர் என்றார்.

இக்கதைகளில் காணப்படும் சமூக அரசியல் நோக்கு பற்றிப் பேசிய இளைஞர் காண்டீபன், மூத்த எழுத்தாளர்கள் இக்கதைகள் பற்றி முன்வைத்த எதிர்மறையான கருத்திற்கு மாறாக அவற்றின் முற்போக்கான அம்சங்களை, அழகாக எடுத்துரைத்தார். உதாரணமாக முதல் கதையான வினோத வார்ப்பில் வேலைக்காரப் பெண்ணை தனது மகன் கெடுத்து கர்ப்பமுற வைத்த போதும், தகப்பனார் ஒரு டாக்டராக இருந்த போதும் அவர் கர்ப்பத்தைக் கலைக்க முற்படாது, தன் மகனை வேலைக்காரப் பெண்ணை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும் என்கிற மனோநிலைக்குத் தள்ளப்படும் முற்போக்கு அம்சத்தைக் காட்டினார்.

பாத்திர வார்ப்பு பற்றிப் பேசிய சித்திராஞ்சன் கதைகளில் காணப்பட்ட பாத்திர வார்ப்பு முறையை தனது நோக்கில் ஒழுங்குற அமைத்துக் காட்டிய விதம் நன்றாகவே இருந்தது.


தலைமை தாங்கிய வ.இராசையா அவர்கள் தனது முடிவுரையில், நூலை விமர்சித்தவர்கள் தமது பார்வைக்குட்படுத்தாது விட்ட 'இப்படியும் ஒரு மனிதர்' இந்த வர்க்கம் ஆகிய கதைகளில் காணப்பட்ட சிறப்பம்சங்களை நல்ல முறையில் எடுத்துக்காட்டினார். பின்னைய கதையில் யாழ்ப்பாண நகரைச் சுத்தப்படுத்தும் மலவண்டி தள்ளுவோர் பிரச்சினை மிக நேர்த்தியாக அங்கையனால் கையாளப்படுகின்ற முற்போக்கு பார்வையை அவர் தெளிவாக விளக்கினார்.

---

இலங்கையின் மலையகத் தமிழ் நாவல்கள் -ஓர் அறிமுகம் எனும் நூல் குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது.

> **இலங்கையின் மலையகத் தமிழ் நாவல்கள்**
> - ஓர் அறிமுகம்
> ஆசிரியர் : க.அருணாசலம்
> வெளியீடு : குமரன் புத்தக இல்லம்
> 201, டாம் வீதி, கொழும்பு - 12
> விலை : 150

மலையகத் தொழிலாளர் பற்றி எழுதப்பட்டுள்ள நாவல்களுள் நூல் வடிவம் பெற்றவை மட்டுமே இந்நூலில் நோக்கப்பட்டுள்ளன.



மலையகத்தின் முதலாவது நாவல் எது? எப்போது வெளிவந்தது? மலையகத்தின் ஆரம்ப கால நாவல்கள் எவை? எப்போது வெளிவந்தன? மலையகத்தில் இதுகாலவரை ஏறத்தாழ எத்தனை நாவல்கள் வெளிவந்துள்ளன? ஆரம்ப கால நாவல்கள் யாவற்றையும் பெற முடியுமா? போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முயன்றுள்ளது இந்நூல்.

1. மலையகத் தோட்டத் தொழிலாளர் வருகையும் அதனையடுத்த காலகட்டமும்

2. பிரஜா உரிமைப் பிரச்சினையும் தொழிலாளர் தயாகம் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தமும்.

3. தொழிற்சங்க நடவடிக்கைகளும் தொழிலாளரின் விழிப்புணர்வும் எழுச்சியும்

4. தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமையும் தொழிலாளரின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

5. தோட்டத்து அதிகாரிகளின் கொடுமைகளும் தொழிலாளர்களுக்கெதிரான வன்செயல்களும் விளைவுகளும்

6. 19883 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட கால நிலைமைகள் ஆகிய பகுதிகளாக நோக்கப்பட்டுள்ளமையும் இந்நூலில் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக உள்ளது.

மலையக இலக்கிய வரலாறை தனியாக நோக்குவோருக்கும் திறனாய்வு செய்ய விரும்புவோருக்கும் சிறந்த தகவல்களையும் ஆதாரங்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய நூல் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## ஆட்கடத்தல்:..........

வேண்டும் என்று கேட்டு மிரட்டினார்கள். சப்பாத்துக் காலினால் உதைத்தார்கள். பெல்டினால் அடித்தார்கள். பணம் கேட்பதற்காக வீட்டாருடன் தொலைபேசியில் பேசச் செய்தார்கள் இருப்பினும் பணம் கொடுக்கவில்லை. எனது கையில் மோதிரங்கள் இருந்த போதிலும், அதனைக் கேட்கவோ கழற்றவோ இல்லை. என்னைக் கடத்திச் சென்றவர்கள் ஐந்து பேர் வரையில் இருந்தார்கள். சரளமாக சிங்களததிலும் தமிழிலும் பேசினார்கள். சீருடையில் காணப்பட்டார்கள். ஆனால், அது இராணுவச் சீருடையா அல்லது பொலிஸ் சீருடையா என்பதைச் சொல்ல முடியவில்லை. ஆயுதங்களையும் வைத்திருந்தார்கள்" என்றும் கடத்தப்பட்ட வர்த்தகராகிய கருணாகரன் பொலிசாருக்குக் கொடுத்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் தனது கைகளையும் கண்ணையும் கட்டிய நிலையில் வாகனத்தில் ஏற்றிச் சென்று, கொழும்பு சுகததாச விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள ஒரு வீதியில் இருட்டான ஓரிடத்தில் இறக்கி விட்டு, 500 ரூபா பணத்தையும் கொடுத்து விட்டு, சிறிது நேரத்தில் தாங்கள் திரும்பி வருவோம் என்றும், தப்பியோட முற்படக்கூடாது என்றும் கூறிவிட்டு சென்றார்கள் என்றும் இளகியிருந்த நைலோன் கயிற்றுக் கட்டைத் தானாகவே அவிழ்த்துக் கொண்டு தப்பி, அருகில் இருந்த நீர்கொழும்பு பிரதான வீதிக்கு வந்து, அங்கிருந்த முஸ்லிம் சாப்பாட்டுக் கடையொன்றில் சாப்பிட்டு விட்டு ஒருவாறு 4 ஆம் குறுக்குத் தெருவுக்குச் சென்று அங்குள்ள தனக்குத் தெரிந்த கடையொன்றில் தங்கியிருந்து விட்டு பின்னர் வவுனியாவுக்குத் திரும்பி வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடத்தல் நாடகம் தொடர்பான சகல விடயங்களையும் துருவித் துருவி விசாரித்துள்ள பொலிசார் கடத்தப்பட்ட வர்த்தகரிடம் இருந்து பொலிஸ் அத்தியட்சகர் மட்டத்திலும் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்கள். இனம் புரியாத, விபரம் தெரியாத இந்த கடத்தல் நாடகம் தொடர்பாக வவுனியா பொலிசார் விசாரணைகளை இப்போது நடத்தி வருகின்றார்கள்.

யார், என்ன காரணத்திற்காக இவரைக் கடத்திச் சென்றார்கள் என்பது மர்மமாக இருப்பதாகவும், பணம் கேட்ட போதிலும் பணம் பெறாமலேயே அவரை விடுதலை செய்துள்ளமையும் புரியாத புதிராக இருப்பதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அவர் அணிந்திருந்த மோதிரங்களைக் கூட கழற்றாமல், அவர் வீட்டிற்குத் திரும்பிச் செல்வதற்காக 500 ரூபா பணம் கொடுத்துள்ளார்கள். இந்த கடத்தல் சம்பவம் பற்றி விசாரணை செய்து வரும் பொலிசாருக்கு இது இன்னும் குழப்பத்தைத் தருவதாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. பணம் தர வேண்டும் என்பதற்காகக் கடத்திச் செல்லப்பட்டவரிடம் ஒன்றுமே பெறப்படவில்லை. அவர் துன்புறுத்தப்பட்டுள்ளார். ஆனால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இது ஏன், என்ன காரணத்திற்காக நடைபெற்றது என்பது பொலிசாருக்குப் பெரும் புதிராக இருக்கின்றது.

வவுனியாவில் புதிதாக ஒரு சக்தி, ஏற்கனவே இங்குள்ளவர்களுக்குப் போட்டியாக இவ்வாறான ஆட்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக களத்தில் இறங்கி, பரிசோதனை முயற்சியாக இதனைச் செய்துள்ளதோ என்ற சந்தேகமே பொலிசாருக்கு மேலோங்கியிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வந்திருக்கின்றது

## தமிழா - தமிழா! ..........

என்பது கடைப்புளியின் கடைசிப் புகலிடம் என்று சொல்வார்கள். தேசியம், தேசிய அடையாளம், இனத்துவம் (Ethnicity) என்பவை எல்லாம் இன்று வியாபாரியினதும் முதலாளியினதும் முதல் புகலிடமாக இருக்கிறது. தேசியம், இனத்துவம், அடையாளங்கள், பன்முகப்பாடு என்ற விவாதங்களில் இந்த அம்சம் கவனத்திலெடுக்கப்பட வேண்டியது எமது புரிதலை ஆழமாக்க உதவக்கூடும்.

தமிழ்நாட்டில் இருந்து வட அமெரிக்காவுக்கு இப்போது ஒரு பாய்ச்சலில் வந்துவிடுவோம். தேசிய / இனத்துவ அடையாளங்களும் வணிகமும் என்ற அம்சத்தில் இங்கு என்ன நடக்கிறது என்று பார்த்துவிடுவது ஆர்வம் கிளர்த்தக் கூடியது. உலகமயமாதலும் பெருஞ் சந்தை உருவாக்கமும் நடந்து வருகிற அதேவேளை ஆடை அலங்காரங்களிலும், மோஸ்தர்களிலும், ஆடை வடிவமைப்புகளிலும் அந்த அந்த 'தேசிய'/ இனத்துவக் கூறுகளைத் தெரிந்தெடுத்து வியாபாரம் செய்கிறபோக்கு பரவலாக இருந்து வருகிறது. McDonalds இந்தியாவுக்கு வந்தாலும் மாட்டிறைச்சி இல்லாமல் தான் வர முடிகிறது. கறுப்பு மக்களுக்கெனத் தனியான ஷாம்பூவையும், மயிரலங்காரப் பொருட்களையும் பெரு நிறுவனங்களே கட்டமைக்கின்றன. புலம்பெயர்வும் பல் பண்பாட்டுத் தன்மையும் இந்த நூற்றாண்டில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளையும் வட அமெரிக்க நாடுகளையும் அவற்றின் பாரம்பரியங்களிலிருந்து பெயர்த்துவிடும். ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி போன்ற நாடுகளே லட்சக் கணக்கில் தொழிலாளர்களை (மலிந்த விலைக்கு!) இறக்குமதி செய்யவேண்டி ஏற்படுகிறது. இத்தகைய லட்சக் கணக்கான புலம்பெயர்ந்த இனத்துவச் சந்தைகளுக்காக போட்டியிடுவதற்குப் பல வணிகர்கள் தயாராகி இருக்கிறார்கள். "இப்படியான ஒரு சூழலில் தமிழில் பேசி, தமிழில் பொருட்களை வாங்க, தமிழனே தமிழனுக்காக நடத்தும் தமிழ்க் கடைக்கு வாருங்கள்' என்று ஒரு "தமிழர்" விளம்பரம் செய்கிறபோது அங்கு தொனிப்பது வணிகமா? தமிழ் அடையாளமா? வேறு இனத்துவ மக்களுடைய சந்தைகளை உடைத்து உள் நுழைய முடியாவிட்டால் தமக்கான ஒரு "தமிழ்ச் சந்தை"யை உருவாக்குவதும், பேணுவதும் வளர்த்து வருவது நமது 'தமிழ்' வணிகர்களுக்கு மிகுந்த அவசியமாக இருக்கிறது. புலம்பெயர்ந்தவர்களால் உருவாக்கப்பட்ட / உருவாக்கப்பட்டு வருகிற சந்தைகள் உருவாவதும் விரிவடைவதும் பல்வேறுபட்ட மக்களிடையேயும் நிகழ்கிறது. வணிக லாபத்துக்காக 'தமிழ் இன' அடையாளத்தையும் பண்பாட்டையும் பயன்படுத்துவதும், புலம்பெயர் சூழலில் அதனைக் கட்டமைப்பதும் பலமாக நடந்து வருகிறது. இதனால் தான் ஐந்து ரூபாய்க்கு முளைக்கீரையை வாங்கி ஐந்து டாலருக்கு விற்க முடிகிறது! 'தமிழன்' என்றும் 'ஈழம்' என்றும் செய்தித் தாள்களை நடத்த முடிகிறது. உதாரணமாகத் ரொறன்ரோவில் ஒரு பல் வைத்தியரும், ஒரு காப்புறுதி நிறுவன முகவரும் தமிழ் / தமிழன் / ஈழத்தின் பெயரால் 'பத்திரிகை' நடாத்துகிறார்கள். 'தமிழனுக்குச் சேவை' செய்வது தான் அவர்களுடைய தலையாய 'பணி' என்பதை அப்பாவித் தமிழர்கள் நம்ப வேண்டியிருக்கிறது. வணிகமும், இன அடையாளமும் எப்படி ஒன்றுக்கொன்று ஊட்டமாகத் தொழிற்படுகின்றன என்பதற்கு இத்தகைய உயிரோட்டமான உதாரணங்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் எல்லா நாடுகளிலும் கிடைக்கின்றன. இத்தகைய 'பத்திரிகை' ஒன்றில் அண்மையில் நான் வாசித்த விளம்பரம் ஒன்று:

**உயிர் தமிழுக்கு:**
**உடல் மண்ணுக்கு**
**மாவீரர்கள் புதைந்த மண்ணிலேயே**
**நானும் புதைக்கப்பட**
**விரும்புகிறேன்.....**
**தமிழ் மக்களே,**
**வீடு வாங்க வேண்டுமா?**
**ரொறன்ரோவில் மலிவாக வீடுகள்**
**வாங்க நாடுங்கள்...**

வணிகமும் தமிழும் / தமிழனும் பற்றி இதைவிட வேறு

நன்றி: காலச்சுவடு

## இலங்கையில் ஜனநாயகம்..........

கொண்டேன். நான் பெரும்பாலும் அவதானித்தவை துாசும் அழுக்கும், மனிதாபிமானமும், அமைதியும் தான். அதன்படி திரைக்கதையை மாற்றி அவதானித்தவற்றைச் சேர்த்தேன். அன்றிலிருந்து இன்று வரை எனது வாழ்க்கையில் அவ்வனுபவம் ஊடுருவியுள்ளது.

***இன்று திரைப்படத்துறைக்கென பாரிய முதலீடுடன் கூடிய புதிய தொழினுட்பத்தை பயன்படுத்திக் கொண்டு மேற்கொள்ளப்படும் திரைப்படப் படைப்புகள் அதிகளவில் ரசிகர் பேரார்வத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. இப்போக்குக்கு முகம் கொடுத்துக் கொண்டு உயர்ந்த பட்ச ரசனையை எவ்விதம் பெற்றுக் கொடுப்பது?***

டைட்டானிக் போன்ற திரைப்படத்தின் காட்சியொன்றின் செலவைக் கொண்டு சிறந்த திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க முடியும். திரைப்படவியலாளனின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே படைப்பின் தரத்தைத் தீர்மானிக்க இயலும். நான் மனிதத்துவத்தை வலியுறுத்தும் படைப்புகளை மேற்கொள்ளவே விரும்புகிறேன். முதலில் எனக்கும், பாத்திரத்திற்கும் இடையில் ஏற்படும் மனிதாபிமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவே விரும்புகிறேன். என்னை வாழ வைத்துக் கொண்டிருப்பது பெயரும், புகழும் அல்ல. சிறந்த ஒவ்வொரு திரைப்படத்தின் மூலமாகவும் நாம் எமது மனிதத்துவ தொடர்புகளை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம். தொழினுட்பத்தில் உயர்ந்த திரைப்படங்கள் எனக் கூறப்படுவனவற்றில் வெறும் இயந்திரத் தன்மை மட்டுமே காணப் படுகின்றது.

***நீங்கள் இவ்வளவு துாரம் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்ட படைப்பு வெளிநாடுகளில் பெரும் புகழைப் பெறும் போது உங்கள் தாய்நாட்டில் தணிக்கைக்குட்—பட்டுள்ளது. இது எவ்வளவு துாரம் உங்களைப் பாதித்தது?***

திரைப்படம் காண்பிக்கப்படும் என்பதில் துளியளவும் நம்பிக்கை இல்லை. எனினும் எத்தடைகள் வந்தாலும் இத்திரைப்படம் எனக்கு பலவற்றைப் பெற்றுத் தந்துள்ளது. இத்தடை இளைஞர்கள் மத்தியில் ஒரு இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. தடைக்கு எதிராக தமிழ் சமூகத்தில் குரலை ஒலிக்கச் செய்தது. எனது திரைப்படம் எத்தினத்தில் காட்டப்படும் என்பதை நான் அறியேன். எனினும் இத்திரைப்படத்தை திரையரங்கிற்கு கொண்டு வர முயற்சிப்பேன்.

***கலைப்படைப்பு தணிக்கை குறித்தும். துரிதமாக வளர்ந்து வரும் பூகோளமயமாக்கல் செயற்பாடினூடு தேசிய ரீதியாக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் தொடர்பாகவும் கலைஞர்கள் மத்தியில் எதிர்ப்பலைகள் எழவில்லை அல்லவா?***

இலங்கை போன்ற பெரும்பாலான நாடுகளில் பல விஷயங்களுக்கு அதிகார சபைகள் உண்டு. வெளிநாட்டில் விருது பெற்ற நபருக்கு தமது நாட்டில் திரைப்படத்தை திரையிட அரசாங்க நிறுவனங்களின் அலட்சியங்களை பொருட்படுத்த வேண்டியுள்ளது. திரைப்படங்களினாலும் அரசின் ஆதிக்கத்திலிருந்து மீள முடியாதுள்ளது. சுயேச்சையாக இலங்கையில் எந்த நிறுவனத்திற்கும் இருப்பில்லை. பிரஜைகள் என்ற வகையில் உரிமைகளுக்காக செயற்படுவதைத் தவிர இந்த அதிகார எல்லைக்குள் தனக்குப் பிரச்சினை ஏற்படாத வகையில் நடந்து கொள்ள மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர். இவற்றுக்கு முரண்படும் போது பலதரப்பட்ட தடைகளும், குற்றச்சாட்டுகளும், சேறுபூசல்களும் எம்மை வந்தடைகின்றன.

***ஏன் அவர்கள் இவ்வளவு துாரம் பீதியடைய வேண்டும்?***

தனது கருத்துக்களுடன் முரண்படும் அனைத்துவித கருத்துக்களுக்கும் அவர்கள் பீதியடைகின்றனர். அதனால் நாம் மென்மேலும் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்திற்கு திரைப்படத்துறையோ கலையோ முக்கியமல்ல. அவர்களது தேவை எவராவது வெற்றி பெற்றால் அவ்வெற்றியின் பங்காளர்களாக தம்மை இனங்காட்டிக் கொள்வதாகும். இந்த நிலைமையை கருத்திற் கொள்ளும் போது உண்மையில் இளம் திரைப்படவியலாளர்களுக்கு வெளி நாடுகளில் தமது படைப்பினை சரியான மதிப்பீடுகளுக்குட்படுத்துவது இலகுவாகவிருக்கும். இளம் இலக்கியவாதிகளுக்கு மொழிப்பிரச்சினை உள்ள போதிலும் திரைப்படவியலாளர்களுக்கு அதுவொரு பிரச்சினையல்லவே.

***கலைஞர் என்ற வயில் நீங்கள் அதிருப்தியுற்றிருக்கிறீர்களா?***

இல்லை. பஸ்ஸில் எவராவது "திரைப்படத்திற்கு என்ன தான் நடந்தது" என்று கேட்கும் போது அங்கு தான் என் வாழ்க்கை, இருப்பு எல்லாமே உள்ளது என்று தோன்றும். அது ஜனாதிபதி விருதினால் கிடைக்கும் மதிப்பல்ல. அதனால் இச்செயற்பாடுகளின் விளைவு சூனியம் என நான் கருதவில்லை. எனினும் ஆளும் தரப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது தாம் செய்த நடவடிக்கைகள் சூனியமானவை என எண்ணிக் குமுறக் கூடும்.

***தற்போது கலையுலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்—ளப்படும் அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்வது?***

வணிக மயப்படுத்தலுடன் சமூக நிறுவனங்களின் வீழ்ச்சி நடைபெறும் சந்தர்ப்பத்தில் கலைஞர்கள் மத்தியிலும் அவ்வாறு நிகழ்வதைத் தடுக்க முடியாது. எனினும் இவ்வாறான அராஜகத்தின் முன் ஸ்தம்பிதம் அடையத் தேவையில்லை. கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், திரைப்படங்கள் ஆகிய ஊடகங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தன்மையுள்ளவை.

எனினும் மோசமான சமூக வீழ்ச்சித் தன்மைக்கு முன் உயர்தர கலைப்படைப்பு கூட ரசிகர்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாத தன்மையைக் காணக் கூடியதாகவுள்ளது. நான் கண்டி வலய மக்களின் வாழ்க்கைச் சூழல் குறித்து திரைப்படைப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளேன். அது சர்வதேச புகழை பெற்றவுடன் விமானத்தளத்தில் எனக்குப் பெரும் வரவேற்பு வழங்கப்படுகின்றது. எனினும் கண்டி வலய மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் இல்லை. அவர்களது வாழ்க்கையை மாற்றக் கூடியது அரசியல் மாற்றம் மட்டுமே.

**ராவய**
**2000 ஒக்.29**

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

"சரிநிகர் சமானமாக வாழ்வமித்த நாட்டிலே - பாரதி
வார இதழ்

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி/ தொலைமடல்: 074-400045
மின்னஞ்சல் : sarini@sltnet.lk

## கடைசி வாய்ப்பு

பரபரப்பாக எதிர்பாக்கப்பட்ட மாவீரர் தின உரை வெளியாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரை சமாதானப் பேச்சு வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையின் உருவாக்கம் எவ்வளவு அவசியமானது என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளாலும், வேறு தமிழ் தலைவர்களாலும் அரசியல் அவதானிகளாலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல்வேறு தடவைகள் வலியுறுத்தப்பட்டு வந்த பலவிடயங்கள் மீள ஒரு முறை பிரபாகரன் அவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளன.

வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் எவ்வாறு சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் கீழ் ஒடுக்கப்பட்டு வந்தார்கள், எது அவர்களை ஆயுதமேந்திய போராட்ட வழிமுறைக்கு தள்ளியது போன்ற விடயங்களை கணக்கில் எடுக்காத அல்லது புறக்கணிக்கிற அணுகுமுறை சமாதான முயற்சிக்கு வழி கோலப் போவதில்லை என்பதை அவரது பேச்சு தெளிவுபடுத்தியிருக்கிறது.

புலிகள் சமாதான முயற்சிக்கு எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள் என்பதை பிரபாகரன் அவர்களது பேச்சு மீண்டும் ஒருமுறை வலியுறுத்திக் கூறியுள்ளது.

மக்களின் அன்றாட துன்பச் சுமை குறைந்து அவர்கள் சுமுக வாழ்நிலைக்கு திரும்புகிற ஒரு சூழல் உருவாக்கப்படும் போதே நிம்மதியான சமாதானப் பேச்சுக்கள் நடாத்தப்படல் சாத்தியம் என்பதை இப்பேச்சு திரும்பவும் வலியுறுத்தியுள்ளது.

சந்திரிகா அரசின் இயல்பு, யுத்தம் சமாதானம் என்பன தொடர்பான அதன் இரட்டை வேடம் என்பவற்றை அம்பலப்படுத்துவதாக இப்பேச்சு அமைந்துள்ளது.

அதேவேளை சமாதானம் என்பது அடிமைக்கும் எசமானுக்கும், மேலதிகாரிக்கும் சிற்றூழியருக்கும் இடையில் நிலவுவது போன்ற ஒன்றல்ல. அது சமத்துவமான பரஸ்பரம் கௌரவமளிக்கப்படுகின்ற இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கான அடிப்படையால் உருவாக்கப்படுகின்ற ஒன்று என்பதும் இப்பேச்சில் பூடகமாக வெளிப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரபாகரனின் பேச்சை கவனத்தில் எடுத்து கவனமாக பரிசீலிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஆனால், அரசு தரப்பு அபிப்பிராயம் இன்னமும் வெளியாகவில்லை.

யுத்தம் நிறுத்தப்படாது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் ஆரசியலமைப்பு சீர்திருத்தம் மூலமாக நாட்டில் உள்ள சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகள் களையப்பட வேண்டும் போன்ற விடயங்களை கீறுப்பட்ட 'றைக்கோட்' போல சொல்லிக் கொண்டிருப்பதை விடுத்து அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவரீதியான பலவீனமும், அரசியல் ரீதியான நெருக்கடியுமே இந்தச் சமாதானக் கோரிக்கைக்கு காரணம் என்று கூறி, சந்தர்ப்பத்தை வீணாக்கிவிட முயல்வது நாட்டுக்கும் மக்களுக்கும் செய்கிற மிகப் பெரிய துரோகமாகும். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் செய்த பல மக்கள் விரோத செயல்களுக்கும் சேர்த்து பிராயச்சித்தம் காண்பதற்கு, இந்தத் துரோகத்தில் வீழ்ந்துவிடாமல் இருப்தே கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு!

ஒரு [illegible]ரச்சினைகளை எதிர்கொள்வதும், அப்பிரச்சினைகளை தீர்ப்பத[illegible]க்குரிய வழிமுறைகளில் மக்கள் போராடுவதும் ஒன்றும் வெட்க[illegible]ன விடயமல்ல. மக்களின் போராட்ட வடிவங்கள் நாட்டின் அரசியல் கோட்பாடுகட்கும், சட்டங்களுக்கும் ஒத்துப் போகாததாக முரணானதாக இருக்கலாம். ஆனால் போராடும் மக்களை, அவர்கள் கையாளும் வடிவங்கள், அவர்கள் முழங்கும் சுலோகங்களை வைத்து யாரும் அணுகுவதில்லை. அம்மக்களின் தேவைகள் நியாயங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே இப்படியான விடயங்கள் அணுகப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அணுகிய நாடுகள் தமது பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்த்திருக்கின்றன. தீர்த்த நாடுகள் முன்னேறிய நாடுகளாக வளர்ந்துள்ளன.

போராடும் அரசியல் குழுக்கள், வெறும் போராட்ட வெறிக்காக போராடுவதில்லை என்ற உண்மையையும், பிரச்சினைகளை தீர்க்கிற அக்கறையும், எதிர்கால சந்ததியின் நல்வாழ்வு குறித்த பொறுப்புணர்வும் இருந்தால் இது ஒன்றும் தீர்க்க முடியாத சிக்கல் அல்ல.

ஆனால், சிக்கல்கள் தீர்க்கப்படுகையில் வரும் நோவுகளை தாங்கும் மனோதிடமும் தயார் நிலையும் தேவை. அறுவைச் சிகிச்சையால் வரும் புண்ணுக்காக, சிகிச்சை செய்யாமல் நோயாளியை மரணிக்க விட யாரும் ஒப்புவதில்லை. நோயாளி கூட அறியாமையால் அதை எதிர்த்தாலும் அதை விரும்பவே செய்வார்.

இது இலங்கை அரசுக்கு புரிய வேண்டும். சமாதான நோயை குணப்படுத்த சிறந்த வழி. யுத்தத்தில் 20வருடம் போய்விட்டது. நோய் மாறவில்லை. அதுவும் நடக்கவில்லை. மாறாக நோயாளி மோசமாகி விட்டார். சமாதான வழியில் இறங்கி ஒரு நேர்மையான முயற்சியை செய்வது இன்றைய அவசியம்: அது அரசாங்கத்தின், ஜனாதிபதியின் கடமை.

# ஆட்கடத்தல்: வவுனியாவிலிருந்து கொழும்பு வரை!

**தீபன்**

வவுனியாவில் ஆட்கடத்தல் என்பது சாதாரணமாக இடம் பெறுகின்ற ஒரு மோசமான நடவடிக்கையாகும். அரசாங்கத்தின் பாதுகாவலர்களாகவும், நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தி, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்பவர்களுமாகிய இராணுவத்தினரும், பொலிசாரும் பல்வேறு கட்டமைப்புக்களுடன் யாரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்வதற்குச் சட்ட ரீதியாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், யாருமறியாத வகையில் தமது சந்தேகத்திற்கு உரிய தமிழ் இளைஞர்களைக் கடத்திச் செல்லும் வேலைகளில் ஈடுபடுவது பல சந்தர்ப்பங்களில் நிரூபணமாகியுள்ளது.

இதே போல, ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, அரசியல் நீரோட்டத்தில் இணைந்துள்ள தமிழ்க் குழுக்களும், ஆட்களைக் கடத்தும் கைங்கரியங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களுக்காக ஈடுபட்டுள்ளமையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாகவும், செயற்பாட்டு நடைமுறை ரீதியாகவும் நீதிமன்றம் உட்பட, மனித உரிமை அமைப்புக்கள் பலவும், பல்வேறு சந்தர்ப்பங்களில், வவுனியாவில் இடம்பெற்ற பல்வேறு ஆட்கடத்தல் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்துள்ளன. ஆயினும் ஆட்கடத்தல் சம்பவங்களுக்கு முடிவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கண்டிப்பவர் கண்டிக்கட்டும், தண்டிப்பவர் தண்டித்துப் பார்க்கட்டும் அதனால் எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற போக்கில் ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

நவ.17 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இவ்வாறான சம்பவம் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட வவுனியா நகரைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்து நான்கு நாட்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பொலிசாரின் விசாரணையில் அவர் தான் எவ்வாறு கடத்தப்பட்டார் என்பதையும், தனக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றியும் விபரமாகத் தெரிவித்துள்ளார்.

தங்களுடைய பெரியவர் அழைக்கின்றார் என்றும், ஏதோ விசாரிக்க வேண்டியிருப்பதாகத் தெரிவித்து, தம்முடன் வருமாறு வீட்டிற்கு வந்து அழைத்த சிவிலுடை தரித்தவர்களுடன் வெள்ளை வானில் தாம் ஏறியதும், கண்ணைக் கட்டி வானின் பின் ஆசனத்தில் அமரச் செய்து இனந்தெரியாத இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அறுபத்தையாயிரம் ரூபா பணம் தர வேண்டும் என்று கோரி, தன்னை அடித்துத் துன்புறுத்தியதாக இனந்தெரியாத குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டு, நவ. 21 ஆம் திகதி கொழும்பில் விடுதலை செய்யப்பட்ட வவுனியா வர்த்தகராகிய கந்தசாமி கருணாகரன் வவுனியா பொலிசாரிடம் முறையிட்டுள்ளார்.

கடத்தல் சம்பவம் இடம் பெற்ற வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் இறம்பைக்குளத்தில் உள்ள குறிப்பிட்ட வர்த்தகரின் தந்தையாரின் வீட்டிற்கு வெள்ளை வானில் சென்ற குறிப்பிட்ட குழுவினர், கடை முதலாளி இருக்கின்றாரா எனக் கேட்டுள்ளனர். அதற்கு அவர் சுகமில்லாமல் இருக்கின்றார். அவரால் நடக்க முடியாது படுத்த படுக்கையாக இருக்கின்றார் என வீட்டார் தெரிவித்தனராம். அப்படியானால், அவருடைய மகன் இருக்கின்றாரா எனக் கேட்டதும், அவர் அங்கில்லை. வெளிக்குளத்தில் உள்ள அவருடைய வீட்டில் இருக்கின்றார் எனத் தெரிவித்ததும், அவருடைய வீட்டைக் காட்டுமாறு கடையில் பணியாற்றுகின்ற வேலையாள் ஒருவரை அழைத்துக் கொண்டு வெளிக்குளத்திற்குச் சென்று குறிப்பிட்ட இரும்புக்கடை வர்த்தகராகிய கந்தசாமி கருணாகரனை, அக்குழுவினர் பிடித்துச் சென்றார்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தன்னைக் கடத்தியவர்கள், வீட்டில் வைத்ததுத் தன்னை வானில் ஏற்றியதும், கண்ணைக் கட்டி, வானின் பின் ஆசனத்தில் அமரச் செய்து கொண்டு சென்றதாகவும், வான் சுமார் 5 மணித்தியாலங்கள் பிரயாணம் செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ பொலிஸ் சோதனைச் சாவடிகளின் ஊடாக வான் சென்றதற்கு அடையாளமாக குறிப்பிட்ட இடங்களில் வாகனம் வேகம் குறைந்து, வீதித்தடை வரம்புகள் மீது ஏறி இறங்கிச் சென்றதாகவும், எந்த ஒரு சோதனைச் சாவடியிலும் தன்னை எவரும் சோதனையிடவோ, கேள்வி கேட்கவோ, இறங்கிச் செல்லுமாறு கேட்கவோ இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

வழியில் ஓரிடத்தில் வீதியில் வாகன விபத்து ஏற்பட்டிருந்ததையடுத்து, தன்னைக் கொண்டு சென்ற வாகனம் சுமார் அரை மணித்தியாலம் தாமதித்தைத் தவிர வேறு எந்த ஓரிடத்திலும் அது நிறுத்தப்படவோ, தாமதிக்கவோ இல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'பயண முடிவில் வசதிகள் மிக்க ஒரு வீட்டில் கொண்டு சென்று என்னை இறக்கி அழைத்துச் சென்று அங்கு கதிரையில் வைத்து நைலோன் கயிற்றினால் கட்டி வைத்தார்கள். அங்கேயும் கண் கட்டப்பட்டிருந்தது. எனக்கு டின்மீன் கறியுடன் உணவு கொடுத்தார்கள். நிலத்தில் படுக்க விட்டதுடன், வசதி மிக்க மலசலகூட, குளியல் அறையில் கடன்களைக் கழிக்கவும் குளிக்கவும் விட்டார்கள். மாற்று உடைகள் எதுவும் வழங்க வில்லை. அறுபத்தையாயிரம் ரூபா பணம் கொடுக்க

⇨19

* நோர்வேயின் பிரதிநிதி

எரிக் சொல் ஹெய்ம்

உடனான நேர்காணல்



டிச. 05 செவ்வாய் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது

ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 29.11.2000